# விவேகபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 18 } அக்ஷய ஞு மார்கழி ீ : : 1926 - ஞு டிசம்பர் ீ } பகுதி 12

## முருகன் வழிபாடு

### WORSHIP OF LORD MURUGA

தானன தானன தானன தானன
தானன தானன—தனதான.

எவினை நேர்விழி மாதரை மேவிய
ஏதனை மூடனை நெறிபேணு
ஈனனை வீணனை யேடெழு தாமுழு
ஏழையை மோழையை அகலாநீள்
மாவினை மூடிய நோய்பிணி யாளனை
வாய்மையி லாதனை யிகழாதே
மாமணி நூபுர சீதள தாள்தனி
வாழ்வுற ஈவது மொருநாளே?
நாவலர் பாடிய நூலிசை யால்வரு
நாரத னூர்புகல் குறமாதை
நாடியெ கானிடை கூடிய சேவக
நாயக மாமயி லுடையோனே!
தேவிம னோமணி ஆயிப ராபரை
தேன்மொழி யாள்தரு சிறியோனே!
சேணுயர் சோலையி னீழலி லேதிகழ்
சீரலை வாய்வரு பெருமாளே!

(ப - ரை.) நாவலர் பாடிய நூல் இசையால் வரு நாரதனூர் - பாடுந்திறமை வாய்ந்த புலவர்கள் இயற்றிய நூல்களிலுள்ள பாடல்களை இன்னிசையுடன் ப...த மாமுனிவர், புகல் குறமாதை நாடி ...ன்ன வேடப் பெண்ணான வள்ளி ...ரும்பி, (சென்று), கானிடை ...ல் அந்த நாயகியைக் கலந்த ...ர்க்கும் தலைவனே! மா மயில் ... மயிலை வாகனமாக வுடையவனே!, தேவி மனோ மணி-சிவபெருமானது தேவியாரும் மனத்தில் இரத்தினவொளி வீசி அஞ்ஞான விருளை யகற்றுபவரும், ஆயி - உலகங்க ளெல்லாவற்றையும் ஈன்ற தாயும், பராபரை-பராபரையெனும் சிவசத்தியும், தேன் மொழியாள் - தேனைப் போல் மதுரமான மொழிகளை உரைப்பவருமான உமாதேவியார், தரு சிறியோனே-தந்தருளிய பாலகனே!, சேண் உயர் சோலையின் நீழலில் (ஏ - அசை)-ஆகாயத்தை யளாவுமாறு உயர்ந்த மரங்களையுடைய சோலைகளின் நிழலுடைமையினால், திகழ் - விளங்கும், சீரலைவாய் - அழகிய அலைவாய் என்னும் திருச்செந்தூரில், வரு பெருமாளே - எழுந்தருளியிருக்கும் பெரியோனே!, எவினை நேர் விழி மாதரை - பாணத்தை யொத்த கண்பார்வையை யுடைய பெண்களை, மேவிய ஏதனை-புகழும் குற்றம் பொருந்தியவனை, மூடனை-அறிவில்லாதவனை, நெறி பேணு ஈனனை—முத்தி நெறியை விரும்பிக் கடைப்பிடித்தொழுகாத இழிகுணமுடையவனை, வீணனை - வாணாளை வீணே கழிப்பவனை, ஏடு எழுதா முழு ஏழையை - ஏடு எடுத்து எழுதும் வல்லமையற்று முற்றிலும் எளியவனுயிருப்பவனை, மோழையை - மடையனை, அகலா நீள் மா வினை மூடிய-அடியேனை விட்டு நீங்காததும் வெகுகாலமாகத் தொடர்ந்து வருவதுமான அளவற்ற வினைப்பயனால் மூடப்பெற்று, நோய் பிணியாளனை - நோய் பிணி இவைகளால் பீடிக்கப்படுபவனை, வாய்மை இலாதனை - மெய் பேசும் இயல்பில்லாதவனை, (இப்படிப்பட்ட அடியேனை), இகழாது (ஏ - அசை) - நிந்தியாமல், மா மணி நூபுர சீதள தாள் - சிறந்த இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற சிலம்புகளை அணிந்தவைகளும் (ஜடவுலக வாழ்க்கைத் துயரத்தின் வெப்பத்தை யொழிக்கவல்ல) குளிர்ச்சி பொருந்தியவைகளுமான நினது பாதங்களை, தனி வாழ்வு உற - ஒப்புயர்வற்ற வாழ்வை அடியேன் அடையும் வண்ணம், ஈவது (உம் - அசை) ஒரு நாளே - அளிக்கும் நாளும் உண்டோ ?

[திருப்புகழ் விருத்தியுரை 373-ம் பக்கம்.]

JL
Jமலா, NOSVB.
N 26.18.12.
218386

...தோறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம் வெளிப்படுந் தோறு மினிது.

# விவேக போதினி

தொ. 18] அக்ஷய௵ மார்கழி௴ [ப. 12

## ரிக் வேதம்

## RIG VEDA

ரிக்வேத காலத்தில் ஆரியர்கள் கிராமங்களில் வசித்தனர். ஒவ்வொரு குடும்பத்திலும் மூத்தோன் தலைவனாக விருந்தான். அவர்களுக்கு முக்கியமான ஆஸ்தி பசுமாடாம். எவரிடம் பசுக்கள் அதிக முள்ளனவோ அவரே பணக்காரர். பண்ட மாற்றுதலுக்குக் கூட, பசுவே மூலமாக விருந்தது. சிறிது காலம் கழித்து அவர்களுக்குள் நிஷ்கம் என்னும் பொன் நகைகள் நாணயங்களாக உபயோகிக்கப்பட்டு வந்தன. பின்னர் பொன் நாணயங்களுக்கே நிஷ்கம் என்னும் பெயர் ஏற்பட்டது.

பசுக்களை அவர்களுடைய முக்கிய தனமாக விருந்ததால் அவற்றைக் காப்பாற்றுவதே அவர்களுடைய முக்கியக் கருத்தாயிருந்தது. பல குடும்பங்கள் தங்கள் பசுக்களை யெல்லாம் ஒரு பொது விடத்தில் விட்டுவைத்துக் காப்பாற்றுவது வழக்கம். அப்படி அவைகளைக் காப்பாற்றியவர் கோத்ரபதி யானார். இவ்வார்த்தைக்குப் பசுக்களைக் காப்பாற்றும் தலைவரென அர்த்தம். கோத்ர மென்னும் பதத்துக்குப் பசு ரக்ஷண ஸ்தலமென அர்த்தம் கொள்ளலாம் இப்பொழுதும் த்விஜர்கள் தாம் ஒரு கோத்ரத்தைச் சார்ந்தவர்களெனச் சொல்லுவதுண்டு. அதாவது அந்த கோத்ரபதிகளான ரிஷிகளின் வம்சத்தைச் சார்ந்தவர்களென அர்த்தம் ஏற்படும்.

பசுக்களுக்கு அபாயம் சுற்றிலுமுள்ள காடுகளில் இருக்கும் ஸிம்ஹம் முதலிய துஷ்ட மிருகங்களிட மிருந்தும், திருடர் முதலியோரிட மிருந்தும் ஏற்படலாம். அவை மேயு மிடங்கள் வ்ரஜ மெனப் பெயர் பெற்றன. ஒரு வ்ரஜத்தில் ஒரு கோத்ரத்தைச் சார்ந்தவர்களே தமது பசு நிரைகளை மேய்த்து வந்தனர். கோத்திரங்களைச் சேர்ந்த குடும்பங்கள் பெருகப் பெருக, அவை மஹாகுலங் களாயின. ஒரே கோத்திரத்தாருக்குள் விவாக சம்பந்தம் அன்னாளும் இன்னாளும் கிடையாது.

சில விடங்களில் ஒரு கிராமத்தில் பல கோத்ரங்களும் உண்டு கிராமாதிகாரிக்குக் க்ராமிணி என்று பெயர். இவ்வதிகாரியே கிராம விவகாரங்களைக் கவனித்து வந்தான் யுத்த சமயங்களில் அவன்தான் தன் கிராமத்திலுள்ள வீரர்களைச் சண்டைக்கு இட்டுப்போவது வழக்கம். பல கிராமங்கள் சேர்ந்தது விச் அல்லது ஜனபத மென அழைக்கப்பட்டது. அதிலுள்ளவர்கள்தாம் மகா ஜனங்கள் அல்லது ஜானபதர்கள். அவர்களெல்லாரும் ஒரு இனத்தைச் சார்ந்தவர்களாக விருந்தனர். ஒவ்வொரு ஜன பதத்துக்கும் ஒரு விசாம்பதி யுண்டு. அவன் இருக்குமிடம் ஒரு பட்டணமாக விருந்தது. கிராமங்களிலிருந்து அப்பட்டணத்துக்குப் பாதைகளுண்டு. விசாம்பதியே பிறகு ராஜாவென அழைக்கப்பட்டான்.

கிராமாதிகாரிகளும், விசாம்பதிகளும் தலைமுறை தத்துவமாக அதிகாரம் வகித்தனர் ; அல்லது ஒருவன் இறந்தபிறகு தகுந்த பல பராக்கிரமமுள்ள வேறொருவனை அக்கிராமத்தாரோ, அதிகாரிகளாக வுள்ளவர்களோ தேர்ந்தெடுத்தார்களாவெனச் சந்தேகமிருக்கின்றது. அநேகமாக இவ்வதிகாரங்கள் தலைமுறை தலைமுறையாக ஒரே குடும்பத்திலேயே இருந்து வந்தன. சிற்சில சமயங்களில் மூத்தகுமாரன் அவ்வதிகாரம் வகிக்க யோக்கியதை யற்றவனாகில், வேறொரு அதிகாரியைப் பொறுக்கி யெடுப்பது முண்டு. அநேகமாக அவ்வதிகாரிகளின் குடும்பங்களிலிருந்தே அப்படிப் பொறுக்குவது பொருந்தும்.

இவ்வரசர்களின் முக்கிய கடமை தமது பிரஜைகளைக் காப்பாற்றுவதாம். அவர்களைச் சுற்றிலும் அவர்கள் கட்டுக்கடங்காத தஸ்யூக்கள் இருந்தார்களல்லவா ? அவர்களும் கோட்டை முதலியன கட்டிக்கொண்டு சுளுவில் ஆரியர்கள் தம்மை யணுகாவண்ணம் ஜாக்கிரதையாக விருப்பார்கள். சமயம்பார்த்து ஆரியர்களுடைய பசுக்களை அபகரித்துப் போவதுமுண்டு. அக்காலங்

...ண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந் திங்களைப் பாம்புகொண் டற்று.

24385

களில் ஆரிய அரசர்கள் அவர்களை எதிர்த்துச் சண்டை செய்து அவர்களை நாசம் செய்வது வழக்கம். அக்காலத்து அரசர்களில் ஒருவருக்கு த்ராஸதஸ்யூ எனப்பெயர். அதாவது, தஸ்யூக்களை நடுங்கச் செய்பவர் என்றர்த்தம்.

மற்றும் தமது ராஜ்யத்தில் அநேக புரோஹிதர்களை ஏற்படுத்தி, தேவதைகளுக்குத் திருப்தியான யாகங்களை நடத்திவைப்பதும் இவ்வரசர்களுடைய மற்றொரு கடமை. திவோதாஸன் (தேவதைகளின் அடிமை), ஸுதாஸன் என்னும் அரசர் பெயர்கள் இதை நன்ருக எடுத்துக் காட்டுகின்றன. சாதாரணமாய் இவ்வரசர்கள் அனேகம் ஸேவகர்களால் தொண்டு செய்யப்பட்டு, தமது அரண்மனைகளில் இருப்பது வழக்கம் அவர்களுடைய முக்கிய அதிகாரிகள் ஸேஞனி என்னும் தளகர்த்தரும், முக்கிய மந்திரியான புரோகிதரும் ஆவர். ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ராஜன்யர் என்னும் பிரபுக்களும், க்ராமிணிகளும், அரசன் தேர் ஓட்டும் சூதனும், அவன் குடும்ப வியவகாரத்தை நடத்தும் க்ஷத்ரியும், நியாயாதிகாரியான மத்தியமஸியும் அரசனுடைய பரிவாரங்களாவார்.

ஒவ்வொரு கிராமத்திலும் சபைகள் உண்டு. அங்குப் பலவிஷயங்களைப் பற்றி சர்ச்சைகள் (விவாதங்கள்) நடப்பதுண்டு. ரிக்வேத காலங்களில் இந்தச் சபைகளுக்கு ஸ்திரீகள் வர அனுமதியிருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் சில சமயங்களில் அங்குச்சூதாட்டம்(த்யூதம்) நடப்பதுண்டு. ஆயினும் உபநிஷத் காலங்களில் ஸ்திரீகளும் சபைகளில் நடக்கும் விவாதங்களில் கலப்பதுண்டெனத் தெரியவருகிறது. ராஜ ஸபையில் இவ்விவாதங்கள் மிகவும் விசேஷமாக நடக்கும். அவைகளில் கற்றறிந்த பெரியோரும் அதிகாரிகளும் கலப்பார்கள். தகப்பன்மார் சபைக்குச் செல்லத்தகுந்த(ஸப்யஞன) குமாரன் தமக்குப் பிறக்க வேண்டுமென்று தேவதைப் பிரார்த்தனை செய்வதுண்டு. ஆகவே, ரிக்வேத காலத்தில் மஹா ஜனங்கள் பல தனி குடும்பத்தாராய் இருந்தன ரென்றும், பந்துக்களான பல குடும்பங்கள் சேர்ந்தது ஒரு கோத்ரமென்றும், அதுவே அதிகப் பெரியதாயிருந்தால் மஹாகுலமென்றும், பல கோத்ரங்கள் சேர்ந்தது ஒரு கிராம மென்றும், பல கிராமங்கள் சேர்ந்தது ஒரு அரசனுக்குட்பட்ட ஜனபத மென்றும், ஜனபதத்திற்குத் தலைவன் அரசன் என்றும் ஏற்படுகிறது.

ஒவ்வொரு குடும்பத்திலும் வீட்டுக்கு எஜமானன் க்ருக கிருத்யங்களை நடத்தி வந்தான். கல்யாணம் என்பது ஒரு ஸம்ஸ்காரமாக ஏற்பட்டது. பெண்சாதியும் குழந்தைகளும் தகப்பனுடைய ஆஸ்தி எனவே சொல்லலாம். அதனுலல்லவா சுனஸ்சேபன் என்னும் பிள்ளையாண்டானை அவன் தகப்பன் ஓர் அரசனுக்கு யாக பசுவாக விற்று விட்டனன்! அம்மாதிரியே ஒருவன் வயதாகித் தன் பிள்ளைக்கு அதிகாரத்தைத் தந்து விட்டால், அப்பிள்ளையும் அவன் ஸ்திரீயும் வீட்டிலுள்ள பெரியோரையும், தம்பிமார்களையும் சகோதரிகளையும் காப்பாற்றி அடக்கி வந்தார்கள். ஆண்பிள்ளைகள் பல ஸ்திரீகளை மணக்கலா மென்றிருந்த போதிலும், ஏகபத்னீ விரதமே பொதுவாய் வழக்கமாயிருந்தது. இரண்டு பெண்டாட்டிக்காரன் படும்பாடு ரிக் வேத மந்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

கல்யாண காலத்தில் மணப்பெண் இப்பொழுதிருப்பதுபோல் குழந்தையாக இருந்தாளெனச் சொல்லுவதற் கிடமில்லை. மந்த்ரங்கள் பல வயது வந்த யுவதிக்கு கல்யாண மாப்பிள்ளை சொல்வனவாக இருக்கின்றன.

நியாயாதிகாரம் அரசனிடமிருந்தது. தனக்கு உதவியாக நியாயாதீசர்களை அவன் ஏற்படுத்திக் கொள்ளலாம். சிறிய குற்றங்களுக்குக் கட்டையில் அடிப்பது தண்டனையாக இருந்திருக்கிறது முக்கியக் குற்றங்கள் திருட்டும், கன்னக்களவும்,வழிப்பறியும் ஆகும். ஒருவனுக்கு அவன் செய்த குற்றத்திற்காக நூறு பசுக்கள் கொடுக்கும்படி அபராதம் விதித்ததாக ஓரிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ஜனங்களுக்கு முக்கியத் தொழில் விவசாயமே. இந்திய ஆரியர்களும், பாரஸீக ஆரியர்களும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியு முன்னமே, அவர்களுக்கு நிலத்தை உழுது பயிர்செய்வது தெரிந்திருக்கவேண்டும். விரை தெளிப்பதும் தண்ணீர் இறைப்பதும் பாய்ச்சுவதும், அரிவாள்கொண்டு முற்றிய பயிரை அறுத்து வீடு சேர்ப்பதும் அவர்களுக்குள் வழக்கமாயிருந்ததென ஏற்படுகிறது. உழுவதற்கும் வண்டியிழுப்பதற்கும் ரிஷபங்களையும், பந்தயத்துக்கும் ரதமிழுப்பதற்கும், அச்வங்களையும் அவர்கள் உபயோகப்படுத்தி வந்தனர். ஆடுகளும், கழுத்தை



JL M211.N08VG 126.18

களும் அவர்களிடம் உண்டு. நாய்களைப் பழக்கி வேட்டையாடுவதற்கும், கன்று காலிகளைக் காத்துக் கெட்டுப்போனவைகளைத் தேடிப்பிடிக்கவும், வீடுகளைக் காக்கவும் அவர்கள் உபயோகித்து வந்தனர்; சுத்தியைக் கொடுக்குமென அதைப் புகழ்ந்திருக்கின்றனர்.

அக்காலத்தில் பல தொழில்களும் நடந்து வந்தன அவற்றில் முக்கியமானவை உழுதொழிலும், பசுக்காப்பாற்றுதலுமெனச் சொல்லியிருக்கிறது. தச்சர்கள் யுத்தங்களில் உபயோகப்படுமாறு ரதங்களையும், விவசாயிகளுக்கு வண்டியையும் செய்து தந்தனர். சுரங்கங்களிலிருந்து உலோகப் பொடிகளைக்கொணர்ந்து நெருப்பில் காய்ச்சி உருக்கும் தொழிலாளிகள் அக்கினியை வளர்க்கப் பக்ஷிகளின் சிறகுகளைவிசிறிகளாய்உபயோகித்தனர். பலவிதப் பாத்திரங்களை அவர்கள் இவ்வுலோகங்களால் செய்தனர். 'அயஸ்' என்னும் பெயர் தாமிரத்துக்கும், வெண்கலத்துக்கும், ஒருக்கால் இரும்புக்கும் பொதுவாக உபயோகிக்கப்பட்டு வந்ததெனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். ரிக்வேத ஆரியர்களுக்கு இரும்பு தெரியாதென்பது பலர் அபிப்பிராயம். இப்பொழுதோ அயஸ் என்றால் இரும்பென்றே ஏற்படுகின்றது. தங்கம் விசேஷமாக ஆற்று மணல்களிலிருந்து கொண்டுவந்து உபயோகிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. ஸ்திரீகள் கோரைகளைப் பாயாகப் பின்னவும், நூல் நூற்றுத் துணியாக நெய்யவும் கற்றிருந்தனர். அக்காலத்தில் பெரிய கப்பல்கள் இருந்தனவா வென்பது நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை. அக்காலத்தில் அடிமைகள் இருந்ததாகத் தெரியவில்லை. எல்லோரும் தமது காரியங்களைத் தாமே செய்து வந்ததாகவே ஏற்படுகிறது.

வியாபாரம் பண்டமாற்றல் மூலமாய் நடந்து வந்தது. பசுக்களும், நிஷ்கங்களும், மானம் என்னும் பொன் நாணயமும் பணத்துக்குப் பதிலாய் உபயோகிக்கப்பட்டு வந்தன. அயல் தேசத்திலிருந்துவந்த வியாபாரிகளுக்குப் பாணிகளெனப் பெயர். ஆங்காங்கு விளையும் பொருள்களைப் பொதிமாடு, குதிரை, ஒட்டகம், நாய் முதலியவைகளின் மேலேற்றிப் பெரிய கூட்டமாகச் சுற்றுப் பக்கங்களுக்கு ஏற்றுமதி செய்வதுண்டு. வியாபாரிகள் நல்ல தந்திரசாலிகளாக விருந்து, பெருத்த லாபம் சம்பாதிக்கப்பாடுபடுவதுண்டென்று தெரிய வருகிறது.

இக்காலத்தில் ஜாதி வித்தியாஸம் இருந்து வந்ததாவென்னும் கேள்விக்குப் பதில் சரியாய்க் கிடைக்கவில்லை. புருஷஸூக்தத்தில் மகா புருஷனுடைய முகத்திலிருந்து பிராமணனும், புஜங்களிலிருந்து க்ஷத்திரியனும், தொடையிலிருந்து வைசியனும், பாதத்திலிருந்து சூத்திரனும் உண்டானதாகச் சொல்லியிருக்கிறது. ஆகையால் ரிக்வேத காலத்தின் பின்பாகத்தில் இம்மாதிரி வித்தியாஸம் ஏற்பட்டுவிட்டது. முன்பாகத்தில் அப்படி யேற்பட்டதாகத் தெரியவில்லை. முதல் மண்டலத்தில் 113-வது மந்த்ரத்தில் 'உஷஸ்' ஒருவனை ராஜ்யமாளவும், மற்றொருவனை யாகம் செய்யவும், மூன்றாமவனை வாணிபம் செய்யவும், வேறொருவனை ஊழியம் செய்யவும் எழுப்பி விட்டனளெனச் சொல்லியிருக்கிறது. ஆயினும் அக்காலத்தில் பின்னர் ஏற்பட்ட இவ் வித்தியாசம் நிச்சயமாய் இல்லை. ஆசியா, ஐரோப்பாக் கண்டங்களிலுள்ள பழைய காலத்திய ஆரியர்களுக்குள் முதல் மூன்று பிரிவுகளுமிருந்தன. ஆனால் அது அவரவர்கள் ஏற்றுக்கொண்ட தொழிலை ஒட்டியிருந்தது. ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவுக்குப்போக ஒருவன் தன் தொழிலை மாற்றிக் கொண்டால் போதும். விச்வாமித்திரர் என்னும் க்ஷத்திரியப் பெருமான் பிராமணராகி யாகம் செய்துவைக்கவில்லையா? பார்க்கவர்கள் ரதம் செய்யும் வேலையில் கை தேர்ந்தவர்களென்று ஏற்படுகிறது. ஆயினும் காலமாக ஆகஅவ்வித்தியாஸம்வலுத்துவிட்டது.

நாலாவது ஜாதியான தாஸர், ஏற்கெனவே சொல்லியபடி ஆரியர்களால் ஜயிக்கப்பட்ட தஸ்யூக்கள்தானென்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடாதென்பது ஒரு சாரார் கருத்து. ஆரியர்களுக்குள்ளாகவே, அவர்களுக்கு ஏற்பட்ட வேத விதிகளை ஒப்பாதவரும், அதை உணரச் சக்தியற்றவரும் தனியாக அனாரியர் என நினைக்கப்பட்டனர் இவர்களில் அநேகர் தாஸ ஜாதியில் சேர்ந்திருக்க வேண்டுமென்பது அவர்கள் துணிபு. தாஸரும், தஸ்யூக்களும் ஒரே இனத்தினரெனச் சிலர் அபிப்பிராயப்பட வேறு சிலர் அவர்கள் வெவ்வேறினத்தின ரெனவும், ஆயினும் இருவரும் நான்காவது வருணத்தாரெனக் கருதப்பட்டன ரெனவும் சொல்லுகின்றனர்.

ரிக்வேத காலத்தில் நடந்த ஒரு பெரிய யுத்தம் இங்கு சொல்லப்படவேண்டும். த்ரித்ஸு

(இதன் தொடர்ச்சி 446-ம் பக்கம் பார்க்க.)

# பஜகோவிந்தம்
## BHAJA GOVINDAM

[ஸ்ரீயான் எஸ். சுப்பிரமணியம், பீ. ஏ.]

ஸர்வ கலாவல்லரும், பூஜ்யருமான ஸ்ரீமத்சங்கர பகவத் பாதாசாரியர், வியாகரண சாஸ்திர பண்டிதராய், ஆனல் ஆத்மஸ்வரூப அனுபவமேயில்லாதிருந்த ஒரு வித்வானுக்கு ஆத்மஞானம் முழுவதையும் 'பஜகோவிந்தம்' முதலிய சுலோகங்களில் உபதேசித்ததைச் சுருக்கமாய் என் சகோதரர்களுக்கும் உபயோகப்படும்படி எழுதுகிறேன்:—

"அஞ்ஞானத்தால் 'டுக்ருங்கரணே' என்றே ஸ்மரணை பண்ணிக் கொண்டிருக்கும் வியாகரணரே! அந்தியகாலம் நெருங்குகிறது. இந்த வியாகரணம் உம்மை காப்பாற்ருது. பரமாத்மாவாகிய ஸ்ரீமந் நாராயணனைப் பஜனைசெய்யும்!"

1. "ஏ மூடா! பொருள் சம்பாதிப்பதிலேயே நாடும் பேராசையை ஒழித்து, உத்தமஞானத்தை நாடு. உன் குலத் தொழிலைச் செய்து, கிடைப்பதைக்கொண்டு திருப்தியடைக.

2. கேவலம் ஸ்திரீ மோகத்தில் இருக்காதே. ஸ்திரீயும் மாம்ஸம், கொழுப்பு இவற்றின் விகாரமென்று அடிக்கடி மனதில் சிந்தனைசெய்.

3. தாமரை யிலையிலுள்ள நீர், மிகச் சஞ்சலமுள்ளது. பிராணனும் அப்படியே. இதுபோலவே, உலக முழுவதும் வியாதி, அகங்காரம், துக்கம் இவற்ருல் நிறைந்தது என்று அறி.

4. நீ பொருள் சம்பாதிக்கும் வரையில் உன் பரிஜனங்கள் உன்னிடம் வெகு அன்பு பாராட்டுவார்கள். உன் உடம்பு தளர்ந்து வியாதியடைந்தால் ஒருவரும் உன்னை லக்ஷியம் செய்யார்கள்.

5. மூச்சு இருக்கும் வரையில் க்ஷேமத்தை விசாரிப்பார்கள். மூச்சு நீங்கினல், மனைவி குழந்தைகள்கூட தேகத்தைப் பார்த்துப் பயப்படுவார்கள்.

6. தனமே துன்பத்துக்குக் காரணம். தனத்தால் கொஞ்சங்கூட சுகமில்லை. மகா தனவான்கள்கூட புத்திரமித்ர களத்திராதியர்களால் பீதியடைகிருர்கள். இது உலக வழக்கம்.

7. பாலனுக்கு விளையாட்டில் ஆசை. யுவாவுக்கு யௌவன ஸ்திரீயிடம் ஆசை. கிழவனுக்குக் கவலை அதிகம். ஸ்ரீமந்நாராயணனை தியானம் செய்ய சக்தியும், மனதும் ஒருபோதும் வருகிறதில்லை.

8. உன் மனைவி யார்? மகன் யார்? நீ யார்? எங்கிருந்து வந்தாய்? குயவன் சக்கரம் போன்ற இந்த ஸம்ஸாரம் வெகு விசித்திரமானது. இதை வாஸ்தவம் என்று நினைத்துப் பிராந்தி யடையாதே. உண்மையை அறி.

9. ஞானிகளின் ஸகவாஸம் உண்டானல் ஸம்ஸார அபிமானம் நீங்கும். பிறகு தனதான்ய ஆசை நீங்கும். அப்பால், சுத்த பரிபூர்ண ஞானம் உண்டாகும். ஆகவே, ஜீவன் முக்தனுகலாம்.

10. யௌவனம் நீங்க, காம விகாரம் ஒழியும்; நீர்வற்ற, குளம் இல்லை. செல்வம் குறைய, பரிவாரங்கள் இல்லை. இவ்வாறே, பிரும்ம ஞானம் உண்டாக, ஸம்ஸார வாசனை நீங்கும்.

11. தனம், ஜனம், யௌவனம் இவற்ருல் அகங்காரம் அடையாதே. காலம் நிமிஷத்தில் இவற்றை நசிக்கச்செய்யும். ஆகையால், விசாரணை செய்து, பிரும்மஞானம் அடைந்து, ஆத்மஸ்வரூபத்தை அடைவாய்.

12. பகல், இரவு, உதயம், அஸ்தமனம், ருதுக்கள் இவை திரும்பித் திரும்பி வருகின்றன. குழந்தைகள் ராஜா, மந்திரி என்று பெயரிட்டு விளையாடுவதுபோல், காலம் விளையாடுகிறது. வயதோ ஆகிறது. ஆனல் ஆசை மட்டும் மனிதனை விடுவதில்லை."

இந்த ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசாரியருடைய உபதேசத்தை மேலே சொன்ன வியாகரண பண்டிதருக்கு நன்கு தெரிவிக்கும் வண்ணம், அவருடைய சிஷ்யர்கள் மேலும் பின்வருமாறு உபதேசித்தார்கள்:—

1. "காவி வஸ்த்ரம் அணிந்து, ஜடைதரித்து, மொட்டை யடித்து அல்லது கத்தரித்த குடுமியுடையவரா யிருந்தாலும், சந்தேக மனதுடன் ஆத்மத்தியானம் செய்தால், பிரும்மஸ்வரூபானுபவம் கிட்டாது. மேற்படி வேஷமெல்லாம் வயிற்றுக்காகவே யாகும்.

2. சரீரதிடம் குறைந்து, தலை நரைத்து, பற்கள் உதிர்ந்து, கழி ஊன்றி கிழத்தனம் வந்தும், ஆசை மனதைவிட்டொழிகிறதில்லை.

3. ஸர்வ பரித்யாகம் செய்துவிட்டு, குளிருக்கு வஸ்த்ரம்கூட இல்லாமல் முழந்தாளில் மோவாக்கட்டையை வைத்து கையில் பிச்சை வாங்கி, மரத்தடியில் வசிப்பவனைக்கூட ஆசை விடுவதில்லை.

4. எந்தப் புண்ய தீர்த்தயாத்திரை போனலும்,

என்ன விருதம் அனுஷ்டித்தாலும், என்ன தானம் செய்தாலும், ஞானமில்லாதவன் எத்தனை ஜன்மம் எடுத்தாலும் மோக்ஷம் அடையமாட்டான்.

5. சுவர்க்கத்திற்குச் சமமான மரத்தடியில் வாசமும், பூமியில் படுக்கையும், மான்தோல் முதலிய வஸ்திரமும்கொண்டு, ஸமஸ்தபோக விஷய பரித்தியாகமே நித்யானந்த மோக்ஷமாகும்.

6. போகங்களில் ஆசையுள்ளவனாயிருந்தாலும், விஷய சுகத்தில் ஆசையுள்ளவனாயிருந்தாலும், புத்ரமித்ர களத்ராதியரிடம் பிரீதியுள்ளவனாயிருந்தாலும், எவனுடைய மனது பரிபூர்ண வஸ்துவினிடம் லயித்திருக்கிறதோ அவன் எப்போதும் ஆனந்த மயமாகவே ஆகிறான்.

7. ஸ்ரீமத் பகவத்கீதையை சிறிதேனும் ஓதினாலும், கங்கா தீர்த்தத்தில் ஒரு திவலையாவது பானஞ் செய்தாலும், ஸ்ரீமந் நாராயணனை திட பக்தியோடு ஒரு நிமிஷமாவது பூஜித்தாலும், அவனைப் பற்றியபுண்யபாப விசாரணையை யம தர்ம ராஜன்கூட செய்யமாட்டான். அப்பேர்ப்பட்டவனுக்கு மோக்ஷம் நிச்சயம்.

8. அண்டாத, கரையில்லாத ஸம்ஸார ஸாகரத்தில் பிறந்தபின் இறப்பும், இறந்தபின் பிறப்பும் சக்ரம்போல் சுவருவதால், ஸ்ரீமந்நாராயணா! அந்த ஸம்ஸார ஸாகரத்திலிருந்து என்னைக்காப்பாற்றும்.

9. தெருவில் கிடக்கும் கந்தத்துணி ஆடையுடன், புண்ய பாபமென்ற வித்தியாசமில்லாத மார்க்கத்துடன் குழந்தைபோலவும், பித்தன் போலவும் வசிக்கும் யோகியானவன், பிரும்ம ஞானத்தில் நிலைபெற்ற தியானமுள்ளவனாய் ஆனந்தம் அடைகிறான்.

10. நீ, நான், தாய், தகப்பன் இவர் யார்? எங்கிருந்து வந்தோம்? இவற்றை விசாரணை செய்து ஸம்ஸாரத்தின் உண்மை நிலையை அறிந்து, அவற்றை மறந்து இருந்தால், உண்மை ஞானம் உண்டாகும்.

11. எங்கும் எல்லோரிடமும் பரமாத்மா வியாபித்திருக்க, நீ ஏன் என்னிடம் கோபிக்கிறாய்? ஸகல சிருஷ்டிப் பொருள்களிடத்தும் ஸமபுத்தி வந்தால், பரமாத்ம ஸ்வரூபத்தை அடையலாம்.

12. காமம், குரோதம், லோபம், மோஹம் இவற்றை ஒழித்து, ஞானக்கடலான பரமாத்மாவைப் பார். ஆத்ம ஞானம் இல்லாதவர் நரகத்தைச் சேருகிறார்கள்.

13. பகவத்கீதை, விஷ்ணு ஸஹஸ்ரநாமம் இவற்றை குரு உபதேசப்படி பாராயணம் செய். ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்ய ஸ்வரூபத்தை எப்போதும் தியானஞ்செய். ஸத்ஸஹவாஸம் எக்காலத்தும் செய். ஏழைகளுக்கு உதவிசெய்.

வியாகரணம் மாத்திரம் கற்ற, ஆத்மஞான மில்லாத வித்துவான், ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசாரியர், அவர்கள் சிஷ்யர்கள் இவர்களிடம் இப்பேற்பட்ட மேலான ஆத்மஞான உபதேசங்களைப் பெற்று, சித்த சுத்தியடைந்து, பிரும்ம ஞானியாகி, ஜீவன் முக்தனானான்.

இந்த உபதேசங்களைப் படிப்போர் கேட்போர் யாவருக்கும் ஞானோபதேச பாக்கியம் கிடைக்கும்படி ஈசன் அருள்புரிவாராக! சுபம்!

---

(444-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றொரு ஜனபதம் பருஷ்ணீ (ரவி) நதிக்குக்கிழக்கில் இருந்தது. அவர்கள் அரசன் ஸுதாஸன். வஸிஷ்ட மகரிஷி அவருக்குப்புரோகிதர். ஸுதாஸனை எதிர்த்துப் பத்து அரசர்கள் படையெடுத்து வந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் துர்வசர், யது, அனு, த்ருஹ்யு, பரதர் முதலிய ஜனபதங்களுக்கு அரசர்கள். அவர்கள் பருஷ்ணியைத் தாண்டிவர முயன்றபொழுது, ஸுதாஸன் அவர்களை முறியடித்தான். பிறகு அநேக யாகங்களைச் செய்து பெருமையடைந்தான். இந்தச் சண்டையில் அநாரிய அரசர்களும் ஸுதாஸனை எதிர்த்து வந்ததாக ஏற்படுகிறது.

---

அஜமீடன் —சந்த்ர வம்சத்து ஹஸ்தினபுரத்தை ஸ்தாபித்த ஹஸ்தியின் பேரன். விகுஞ்சனன் குமாரன். இவனுக்கு மனைவியர் ஐவர்: கைகேயி, நாகை, காந்தாரி, விமலை, ரிக்ஷை என. இவ்வைவர்களிடம் இவனுக்கு 2400 குமாரர்கள் பிறந்தனரெனவும் அவர்கள் தனித்தனி வம்சங்களை உண்டுபண்ணினரெனவும் மஹாபாரதம் கூறும். ரிக்ஷையிடம் பிறந்த ஸம்வரணன் வம்சத்தை நேராகவிருத்திசெய்தனன். கேசினி என்ற மனைவிக்குக் கண்வர் பிறந்தனர்.

# துயர் தீர்தல்

## FREEDOM FROM MISERY

[ஸ்ரீமான் C. N. G. சர்மா அவர்கள்]

மானிட ஜன்மமெடுத்த உலகோரனைவரும் ஏதாவதொரு விஷயத்தில் மனதை நாட்டி அதனால் சுகத்தையோ துக்கத்தையோ அடைந்து கொண்டேயிருக்கிறார்கள். மிகவும் சுகிகளென உலகோர் நினைக்க, வாழும் சிலரை நாம் நெருங்கி விசாரிப்பின், அவர்களும் தாங்கள் குறைகளைக் கூறி நம்முடன் கூடி அழுகிறார்களே தவிர, தங்களுக்கு என்றும் நிறைந்த சந்தோஷம் வந்து நிரம்பிவிட்டதாகச் சொல்வதேயில்லை. ஆயின் இப்பெருந்துயர் எத்தன்மை யுடைத்தெனின், அது மானிடப் பிறவியின் ஆரம்பமுதல் ஆன்ம தரிசனம்வரை விட்டகலாப் பெரும் காரிருளாக நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது என்பது நன்கு ஆராய்ந்தறியப்பாலது. இப்பெருந் துயரை நாம் அடையா வண்ணமும், இதனின்று நாம் நீங்கும் ஓர் உபாயமும் நம் ஆன்றோர் நம் போலியர்க்குப் பெருமை பொருந்திய வேதங்களின் வாயிலாக ஆனந்தமுரசு அடித்துள்ளார்.

நிற்க, தற்சமயம் நம் வாழ்நாட்களுள் இந்த முழிப்பென நாம் நினைத்திருக்கும் ஸ்வப்னமாகிய நம் தினசரி வாழ்வில் ஏற்படும் துயர்களைப் பற்றியே நாமிவ்விடம் எழுதப் புகுவோம் ஆன்றோர் வரையறுத்தளித்த பெரும் மார்க்கமே மானிடர்க்கு எக்காலமும் பெருமை யளிக்க வல்லதென்பது யாவருக்கும் தெரிந்தும், எவரும் அதனைப் பின்பற்றாத விஷயம் வியக்கத் தகுந்ததே. ஆயின், அவ்வழி ஒன்றுதான் உலகத் துயரைத் தூர்க்கும் திறமை வாய்ந்ததென்பது திண்ணம். எவைக்கும் ஆதாரபூதமாகவும், நாம் செய்யும் ஒவ்வொரு கிரியைகளுக்கும் காரணமாகவும், அவைகளால் நாமனுபவிக்கும் பலன்களுக்கு வித்தாகவும், அமையும் அனேக சூக்ஷ்ம காரணங்களுள் முதன்மையாக விளங்குவது அவா, அல்லது ஆசை யென்பதுவே. பெரும் அற்புத காரியங்களை உலகம் வியக்கச் செய்வதற்கும், அன்றி கற்றோரனைவரு மிகழத் தீய ஒழுக்கங்களில் நம்மைப் புகச் செய்வதற்கும் ஒரே காரணமான இப் பேரவாவின் வல்லமையை எடுத்துரைப்பது மிகவும் அசாத்தியமாகும். இவ்வாசை எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஆதிகாரணமாயிருந்தும், அதை இன்னதென்று விரிவாய் வரைவது மிகவும் கடினமான காரியம். அதன் பெருமை என்னவெனிலோ, இவ்வாசை ஜீவராசிகளிலெல்லாம் பக்ஷபாதமின்றி ஒவ்வொரு ஜந்துவினிடமும் நிறைந்திருந்தும் எவரும் அதன் வல்லமையை அறிந்ததில்லை. அவ்வாசையின் காரியம் மட்டும் எவருக்கும் நன்கு தெரியும். அது எல்லோர் மனதையும் உலக விஷயங்களிலும், அவ்விஷய சுகங்களிலும் இழுத்துச்செல்லும் சக்தி வாய்ந்தது. ஆதி சங்கராசாரியர் சொன்னபிரகாரம் இவ்வுலகமெல்லாம் ஆசையென்னும் வித்தால் விளைந்து தழைத்து அதனாலேயே இணைத்துக் கட்டப்பட்டும் இருக்கிறது. இந்த ஆசைதான் உலகில் தீமையை விளைத்து மனிதனுக்குத் துயரையும் விருத்தியடையச் செய்கின்றதென்பது ஆலோசிப்பின் நன்கு விளங்கும். நூற்கள் பலவற்றிலும் இதே ஆசை நம்மை மிகவும் உன்னத பதவிக்கும் கொண்டுவரக்கூடியது என்று காணப்பட்டிருப்பினும், நப்போலியர்கள் இவ்வாசையின் தீங்கைப்பற்றியே முதன் முதல் நன்கறிய வேண்டியிருக்கிறது.

இவ்வாசையானது முக்கியமாய் மூவகைப்படும். உலக சுகங்களெல்லாம் நிலைத்திருப்பவை என்றெண்ணுபவர்களுக்குச் சர்வ சுகங்களும் மூன்றுவிதப் பொருள்களினாலேயே ஏற்படுகின்றனவென்றும், அச்சுகங்களை மனிதன் கோரும்படி செய்விப்பது அவன் மனதில் நெடுங்காலமாக வேரூன்றியிருக்கும் ஆசையே யென்றும், இதுவே அச்சுகங்களை இன்றி யமையாதனபோல் மனதிற்குக் காண்பிவித்துத் தானும் விருத்தியடைந்து, மானிடரை மாறாத் துயரிலாழ்த்துகிறதென்றும் செவ்வனே விளங்கும். 'ஈஷணாத்திரயம்' என்று சொல்லப்படும் பொன்னில மாதராசையில் மூழ்கி அல்லல்பட்டு மானிடர் மடிகின்றனர். இவ்விஷய சுகங்கள் எள்ளளவும் நமக்குப் பயன்படா. நீரிற்குமிழியேபோன்ற இச்சிறு உலக வாழ்நாட்களுள் இச்சுகங்களில் கண்மூடித்தனமாக இறங்குபவன் எப்பொழுதும் துயரையே யெய்துவன். இவைகளை அடைவதற்குமுன் இல்லையே யென்ற துக்கமும், அடைந்த பின் அவை மறுபடி பிரிந்து விட்டப் போய்விடுகின்றனவே என்ற துன்பமும் நம்மைப் பீடிக்கின்றன. இச்சுகங்களும் பின்னர் எவ்வளவாகின்றனவென விசாரிப்பின் வள்ளலார் சொற்படி நம்மை வீணராக்குகின்றன.

'காண்பதுவுங் கேட்பதுவுங் கருத்துச் சொப்பனம்
பூண்பதுவும் புனைவதும் புசிப்புஞ் சொப்பனம்
சேண்படு நாகமுஞ் செகமுஞ் சொப்பனம்
வீண்படுமி வைக்கெலாம் விசுத்தனுனரோ'

என்றனர். இவ்வீடணுத்திரங்களில் புத்தியைச் செலுத்தி அவாவுற்றிருப்பினும், அவைகாள் பின்ன ரிடையூறே விளைகின்றன வென்பதையும் கண்ணாரக் கண்டுளம்,எத்துணை பெரியோர் எடுத்துக்கூறியும் அவாவுற்றிருப்பவன் காதுகளிலவை விழுவதில்லை. அவன் மனம் படும்பாட்டைச் சொல்வது அரிது. கண் கலங்கி,மனம் வெருண்டு வேறெந்த வஸ்துவிலும் மன நாட்டமின்றி செய்யொணுக் காரியங்களிலும் நாணமின்றிப் பிரவர்த்திக்கின்றனன். ஆசையால் குறிப்பிடப்பட்ட மார்க்கங்களில் பிரவர்த்திக்கப் பிரவர்த்திக்க, அவனுக்கு மனவமைதி யென்பதே ஏற்படுகிறதில்லை. கானல் ஜலத்தைக்கண்டு பின் தொடருமவனேபோல ஆசையையே தெய்வமெனப் பின்பற்றுபவனுக்கு ஒருவித திருப்தியும் லபிதமாகிறது இல்லை. காமாதுரந்தகனெனப் புகழுடன் காலங்கழித்த ஒருவன், நரம்பு தளர்ந்து மூப்புடன் தள்ளாடினும் மாதரைக் கண்டால் கொஞ்சம் மனஞ்சலித்துக் கொண்டேதானிருக்கிறான். கிழவனென்றால் கோபம்வந்துவிடுகிறது. எந்தச் சாயம் உபயோகித்தால் தலைமயிர் கருக்கும்,எந்த மருந்து தன்னை பால்யனுக்கும் என்றே தேடிக்கொண்டு பணத்தைச் செலவழிக்கிறான். பணம் சேரச் சேர நம்மிலும் பிறர் தனவந்தர்களாயிருப்பதாவது, நாம் குபேரனுக வேண்டும் என்றே இராத் தூக்கமின்றி கவலையுறுகிறான். ஆகையால், அளவென்பதே யில்லாத இந்த ஆசையை விட்டொழித்த பின்னரே எவனுக்கும் 'இன்பம்' என்பது இதுதான் எனத் தெரியும். இல்லையேல் என்றும் ஆழ்ந்த துயரிலமர வேண்டுவது அத்தியாவசியமேயாகும்.

இவ்வாசையின் உற்பத்தி எங்கு என்று ஆராயின்,அது நம்மனத்தின் மாயையினுலேயே உதிக்கின்றதெனத் தீர்மானமாக அனேகர் சொல்லியிருக்கின்றனர். அம்மனமாயை யென்பது யென்ன என்று விவரிப்பது கடினம். ஆயின் அதன் தொழிலோ கீழ்வருமாறு,

'இமையளவு போதையொரு கற்பகாலம் பண்ணுமிவ்வுலக மெவ்வுலகமோ
என்றெண்ணம் வருவிக்குமாதர் சிற்றின்பமோ
வென்னின் மகமேரு வாக்கிச்
சுமையெடுமி னென்றுதான் சும்மாடுமாயெமைச்
சுமையாளு மாக்கி, நாளும்
அற்புத்தி பண்ணியுள நற்புத்தி யாவையும்
குறையிட்டிந்திரஜாலம், அமையவொரு
கூத்தும் சமைந்தாடு மனமாயை' என்றார்.

ஆகையால் துயர்தீர்க்க எண்ணுபவன் ஆசையை யறவே யொழிக்க முதன் முதல் முயன்று, பேரிருளான மனமாயையை யொழிக்க முயலுவது அவசியம். இதற்கு ஏதாவது வழியிருக்கின்றதோ என்றால்'மாசறப்படித்தானேனும் மயலறத் தெளிந்தானேனும், மாசறத் துறந்தானேனுமஞ்செழுத் துணர்ந்தானேனும், இம்மனமாயை மட்டும் மாறுவதில்லையென்றார் கலையுணர்ந்தோர். 'பின்னரென்செய்வது' எனிலோ, பற்று அறுவதே யதற்கு வழியெனக் கூறலாம். உலகில் ஜனித்த நாம் எவ்வித நிகழ்ச்சிகள் வந்தெய்தினும் மனவமைதி வழுவாது, நடுநிலையுடன் கருணைக்கடலான ஈசன் நமக்கென்று வகுத்த தொழிலை அவருடைய கடை ஊழியரென நினைந்து செய்து அவற்றால் நமக்கு ஏற்படும் சுகத்தைச் சுகமெனவும், துக்கத்தைத் துக்கமெனவுங் கொள்ளாது, என்றும் எதிர்பாராது ஒழுகி வருதலை பற்றுவதற்குத் தகுந்த உபாயமாவதுடன், நம்மனத்திற்கு அழியாத இன்பப் பெருக்கையும் எய்திவிக்கும். குமாரதேவர் என்ற பெரியோர், 'உலகினை வேறதாக வுணர்ந்திடிற் பந்தமாகும்,உலகினைத்தானேயாக வுணர்ந்திடிர் முக்தியாகும் எனச் சாற்றினர். எல்லாம் கடவுளது, நமதென்பதும், நாமமென்பதும் இல்லையென்றும், எதிர்பாராது நிகழுபவைகளைக் குறித்து எய்தினவரைத் திருப்தி யடைவதே துயர்தீர்க்கும் பெரும் மருந்தாகும். 'எது வருமோ வதுவருக, என்னைவிட்டேதகல வேண்டுமோ வஃதகல்க, கோதென்று பிச்சையுந் தள்ளேன், பிரமபதமும் வேண்டேன், எச்செயலும் நாணுயினேன்' என்ற ஆன்றோர் மொழியினை அமுதமெனக் கொண்டு, விஷய சுகங்களில் மனமுழன்று வெருண்டு மதிகலங்கி உயிர் துறவாமல், 'இன்புற்றழுசேயென விழி நீர் பெருக்கிப் பெருக்கிப் பித்தாகித் துன்பக்கடல் விட்டகல' முயல ஈசன் அருளை முன்கொண்டவராய் நாமுயிர் வாழ்ந்த கலப்பிலாச் சுத்த இன்பத்தை இங்கேயே இடர்தீர்ந்தென்றும் அனுபவிப்போமாக.

---

# சிறுத்தொண்டர்

(413-ம் பக்கத் தொடர்ச்சி.)

வை:—(சரி-சரி- சாமுத்ரிகாலக்ஷணம் மெட்டு)
(மோஹனம்-ஏகம்)

[பல்லவி]

சரி சரி உந்தன் எண்ண மதைத் தெரிந்தேன்—சரி

[அநுபல்லவி]

உரமோங்கிடுந் தலைமாமிச ருசிகண்டதை யொளித்
[துக் கொண்டனை—சரி

[சரணம்]

தானமென்று லோக மெங்குந்
  தாங்கக் கொடி—நாட்டினை
மானங் கெட்டுப் போகக் கள்ள
  மாயமிங்கு—காட்டினை-நல்ல
தைரிய முனக்கு —இங்கென்ன
காரிய மெனக்கு
சாரந் தங்கும் மூளைக்கறி
  வேணுங் கொண்டு—வாருமே
நேரஞ் சென்று யோரஞ் செய்தாய்
  பாவம் வந்து—சேருமே

ஹே! சிறுத்தொண்டா! நல்ல காரியம் செய்தாய்! உன் நடத்தை யொன்றும் திருத்தமாக வில்லையே. எனக்கு எந்த கறியின்மேல் விருப்பமோ அதையே நீயும் ருசிகண்டு மறைத்து வைத்துக்கொண்டனையே. இப்படி ஓரவஞ்சனையாக அன்னம் போடாமற் போனால்தான் என்ன? அன்னக்கொடியை மாத்திரம் அழகாய்ப் போட்டுக்கொண்டால் அவ்வண்ணம் நடந்து கொள்ள வேண்டாமோ? வீணுக்கேன் வீம்பு செய்கிறாயோ தெரியவில்லை. சரி அதைப் பற்றி நாம் ஏன் பேசவேண்டும். தலைக்கறி வைப்ப தென்றால் கலத்தில் கையை வைப்பேன். இல்லை யென்றால் இதோ எழுந்து விடுகிறேன்.

சிறு:—சுவாமி பொறுங்கள். (மறைவாய்) கண்மணி, இந்த வில்லங்கத்திற்கு என்ன செய்வது? உரோமம் நிரம்பிய தலையைப் பக்குவப் படுத்துவதெவ்வா றென்று அதை நமது தாதியிடம் கொடுத்து புதைத்துவிடும்படியாகச் சொன்னோமே. உண்மையில் அது விசேஷமாகவே யிருக்கலாம். அடியார்க்கும் அதன்மேல் பிரீதியாகவே யிருக்கும். இப்பொழுது என்ன செய்வது? வேண்டுமென்கிறாரே.

[தாதி வருதல்]

தாதி:—எஜமான், கவலைப்பட வேண்டாம். தாங்கள் என்னிடம் கொடுத்த தலையை அது முக்கிய மென்றறிந்தவளாதலால் புதைக்காமல் பக்குவப்படுத்தி பாகஞ்செய்து இதோ வைத்திருக்கிறேன்.

[தலைக்கறிக் கலத்தைத் தருதல்.]

சிறு:—மெத்த சந்தோஷம். நீ நன்றாயிருப்பாய்! சுவாமி, ஏதோ ஞாபகப் பிசகால் இதை வைக்கத் தவறிவிட்டோம். மன்னித்தருள வேண்டும்.

[தலைக்கறி படைத்தல்]

வை:—நல்லவேளை. இல்லை யென்றால் நான் இன்று பட்டினி கிடக்க வேண்டியதுதான். நான் இந்த தலைக்கறி யொன்றைக் கொண்டுதான் திருப்தி யடைவது. மேலும் நான் ஆறுமாதத்திற் கொரு முறை அன்னம் புசிப்பதாகையால் பிள்ளைக் கறியினுள் எல்லா பாகத்தையும் சாப்பிட்டாக வேண்டும். சரி, எல்லாம் ஒருவித முடிந்தது. இனி,

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

சொன்னசொல் மாறா உள்ள தொண்டனே
  உனக்குச் சொல்லும்
இன்னுமோர் விஷயமுண்டிங் கிணங்கியே
  கேளாய் என்றும்
அன்னத்தை யொருவராக அருந்துதல் பாவ
மன்றோ பின்னுமோ ரடியார் தம்மைப் பிரியமா
  யழைத்து வாராய்

ஹே! பக்தா! அன்ன முண்ணும்பொழுது ஒருவராய் உண்ணாமல் இரண்டு பேராகவேனும் கூடி யுண்ணுதல் அல்லவா கிரமம். ஆதலால் எங்கேனுஞ் சென்று என்னைப்போல் இன்னுமொரு அதிதியை அதிசீக்கிரத்தில் அழைத்து வருவாய்.

சிறு:—சுவாமி, அடியேன் கூறு மொழியைச் சற்று கேட்டருளல் வேண்டும்.

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

தினமுமா யிரவராகத் திகழ்ந்த இம்மடத்திலிந்தத்
தினத்தில் ஓர் அடியரேனுந் தென்பட வில்லை ஐயா
மனமிக வருந்தி யானிம் மாணகர் எங்குந்தேடி
மனமுவந் திடவே தங்கள் மலர்முக மொன்றே
[கண்டேன்

சுவாமி, அனுதினமும் ஆயிரக் கணக்காய் அடியார்கள் அன்புடன் அமுதுண்டு ஆசீர்வதித்துப் போகுபவராயிருக்க இன்றைய தினத்தில் ஒருவரேனுந்தென்படாமல் இந்த நகர் எங்குந் தேடிக் கிடைக்காமல், கடைசியாக தங்கள் அருள்முகத்தைக் காண நேர்ந்தது. சுவாமி, அடியாரை நான் இன்னும் எங்கு போய்த் தேடுவேன்!

வை:—அடியாரே வேண்டு மென்பதில்லை. நீயும் சிவ பக்தன் தானே. விபூதி ருத்திராக்ஷம் தரித்திருக்கிறாய். நீயே என்னுட னிருந்து உண்ணலாமன்றோ?

சிறு.—தங்கள் விருப்பம் போலவே அடியேன் உடனிருந்து உண்ணுவேன். தங்கள் போலுந் தவ யோகிகளோடு அமுதுண்ணும் பாக்கியம் கிடைக்கவேண்டுமே!

---

அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும் பிரிவோ ரிடத்துண்மை யான்.

வை:—சந்தோஷம் ; அம்மா, உன் நாதனுக்கும் ஓர் பரிகலத்தில் பரிமாறுவாய்.

திரு:—உத்தரவுப்படி செய்கிறேன் சுவாமி.

[சிறுத்தொண்டருக்கோர் கலத்திற் பரிமாறுதல்]

சிறு:—(தங்கலத்தின் முன் உட்கார்ந்து) சுவாமி, திருவுளங் கொண்டு அமுதுண்ண வேண்டும்.

[வைரவர் மௌனமா யிருத்தல்]

(தமக்குள்) ஏது இவர் இன்னும் அன்னம் உண்ணுது ஆலோசிக்கின்றார்! ஒருவேளை நாம் முன்பு உண்டால் இவரும் உண்ணுவார்போலும்.

[ஒரு பிடி சாதத்தைக் கையிலெடுத்தல்]

வை:—ஹே ! சிறுத்தொண்டா, என்ன அநீதி இது? அதிதி உண்ணுவதற்குமுன் நீயுண்ண ஆரம்பித்து விட்டாயே. நாமோ ஆறு மாதத்திற்கோர் வேளை யுண்பது. நீ தினமும் உண்பவனுச்சுதே. உனக்கென்ன அவ்வளவு பசிவந்தது. இல்லை, நீ என்னை அவமதிக்க வேண்டுமென்றே யிருக்கிறாய். இங்கு நான் வந்ததே பிசகு. [எழுந்தல்.]

சிறு:—[திடுக்கிட்டெழுந்து] சுவாமி, க்ஷமிக்க வேண்டும். நான் செய்தது குற்றமேயாகும். தெரியாமற் செய்துவிட்டேன்.

வை:—ஹே பக்தா! நீ என்ன குற்றம் செய்தாலும், என்றும் பொறுத்தறியாத நாம் இன்று ஏதோ பொறுத்துக்கொண்டே வருகிறோம். இதையும் பொருத்தோம். சரி, இனி நாம் உண்ணுவோம்—ஹோ! இரு! இரு! எங்கே உன் புத்திரனை நான் பார்க்கவே இல்லையே! அவனுக்கு முதலில் ஒரு பிடி சாதம் கொடுத்து நாம் அமுதுண்ண வேண்டும். நல்ல வேளை ஞாபகம் வந்தது. எங்கே உன் புத்திரனைச் சற்று இப்படி அழைத்து வா,......என் விழிக்கின்றாய்?

சிறு:—சுவாமி, என் பாலகன் தங்களுக்கிந்த சமயம் வந்துதவமாட்டான். பொறுத்தருளல் வேண்டும்.

வை:—ஆ! ஹா ! என்ன அந்யாயமிது ! நான் இன்று பிள்ளையில்லாத வீட்டிலோ போஜனம் செய்ய வந்தேன். அரும்பாடுபட்டுச் செய்த என் அகோர தவமெல்லாம் அழிந்து விடுமே. ஹே, சிறுத்தொண்டா!

[பாதி ராத்திரி வேளையில்—மெட்டு]

பேரின்பந்தரு மாறு பேசிடும்
பிள்ளையே இல்லாப் பாவி—வீட்டில்
பிக்ஷை வாங்குவோன் ஆவி—பெரும்
பேயாக நின்று லாவி—பாழும்
பீடை வாழ்நா கோடியே சென்று
பிழைக்குமே கூவிக்—கூவி
ஆதலால் நீ இப்போதே சென்றுந்தன்
அருமைப் பாலகன்—தன்னை—இங்கு
அழைத்து வந்திடு—முன்னே—இல்லால்
அமுதுண்ணேன் உண்மை-சொன்னேன்-ஏதோ ;
ஆகாத என் பொல் லாதவேளையோ
அண்டினேன்—இல்லால்—நண்ணேன்

சிவ சிவ சிவ! என்ன பொல்லாத வேளை இன்று. சிறுத்தொண்டா! பிள்ளை யில்லாத வீட்டில் போஜனம் உண்ணுவதற்கு நாகவேதனையே பலனுதலால், இப்பொழுதே சென்று உன் பாலகனைக் கூப்பிட்டுக் கூட்டி வருவாய். போ நான் சொல்லியபடி செய். இல்லையானுல் கடவுள் மேல் ஆணையாக நான் உன் வீட்டில் கை நனைக்க மாட்டேன். போ.

[திருவெண்காட்டு நங்கையும் சிறுத்தொண்டரும் போதல்]

## அங்கம் IV

### காட்சி 3

இடம்: சிறுத்தொண்டர் மனையின் பின்வாசல்

[சிறுத்தொண்டர் பாடிக்கொண்டு வருதல்]

[ஹரனே கங்காதரனே—மெட்டு]

(கண்ணிகள்)

1. தில்லை நடராஜா உன்றன் திருவருளோ-சிவமே
தீராப்பழி யேற்றி வைத்த திறமை நன்று-சிவமே
2. நாளுஞ்சிவ னடியார் பாதம் வணங்கும்பல னிது [வோ
நானும் என்பெண் மானும்வாட நயந்தாய் இன்று [சிவமே
3. பாலகனை அறுத்தும் மனம் அடங்கலையோசிவமே
பாவி யென்னை வாதை செய்ய பக்ஷம் வைத்தாய் [சிவமே
4. எமன் வாயில் போன மகன் வருவதுண்டோ [சிவமே
இந்த விதி யென் தலையில் எழுதி வைத்தாய் [சிவமே

ஹா ஹா ! இப்படியோ வந்து சம்பவித்தது ? அடுக்கி வரும் இடும்பை யென்பார்களே, வாஸ்தவந்தான். பட்ட காவிலேயே படுவதுபோல் இன்று ஒன்றன்பின் ஒன்றாக வாலாயமா யன்றோ வருத்தம் வந்து சேர்ந்தது. இதுவரையிலும் ஏதோ ஒரு வகையாக ஒவ்வொன்றும் பகவான் அருளால் விலகியது. இப்பொழுதோ எவராலும் நிவர்த்திக்க முடியாத கஷ்டம் வந்து சேர்ந்ததே! ஹா ஈசா! திரிசூல திரிநேத்ரா ! நாங்கள் உன்னை ஆசையோடு அடிபணிந்து பூசை செய்ததும் பொய்யோ! அடியேங்களை அரும்பாடுபடுத்த நாங்கள் செய்து விட்ட கொடுமைதான் என்ன ? அறிவு தெரிந்ததி லிருந்து அரனே என்று மனமாறச் சொல்லாத தினமு மொன்றுண்டோ? ஆயிரமான அடங்காக் கவலையிலும், அப்பா, உன்னை அன்போடும் நாங்கள்

அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற் றேறியார்க் குண்டோ தவறு.

பூமலரும் நாமலருங் கொண்டு அருச்சியாத நாளும் உண்டோ. உன்னையேயன்றி உன் அடியாரையும் நாயிலுங் கடையேன். நாவாரவேண்டி நயந்தடிபணிந்து அவர்கள் மனமாற வயிறுற உண்பியாத பகலுமுண்டோ! நீர்பூத்த செஞ்சடையாய், நந்தி விடையுடையாய்! அறுத்துச் சமைத்தான பின்பும் அருமைப் பாலகன் வருவானே! ஞானசூனியனாகிய அடியேனை ஞான சூரியனாகிய நீ அலைக்கழித்து அவமதித்து அரும்பாடு படுத்த உன்மன மென்ன கல்லோ-இரும்போ-பெரும்பாறையோ! என் முறையைக் கேளாதிருக்கிறாயே, உன் செவி என்ன மந்தமா. பாவி நான் பாருலகில் பட்டபாடுகள் போதுமே. இன்னமும் சகிக்க என்னிதயம் பொறுக்காது. அது விலவிலத்துக் களைத்து தைரியத்தை விடுத்து சஞ்சலத்தால் நொந்து கிடக்கின்றது. ஹா!

"குலம் பொல்லேன் குணம் பொல்லேன்
குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோலமார்ந்த
நலம் பொல்லேன் நான் பொல்லேன்
ஞானியல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கலா தொழிந்தேனல்லேன்
வெறுப்பனவும் மிகப்பெரிதும் பேசவல்லேன்
இலம் பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என் செய்வான் தோன்றினேன் ஏழை நானே"

ஐயோ! என் விரதம் இப்படி அழிந்து கெட்டதே. என்னைப்போலும் பாக்யஹீனன் ஒருவருண்டோ. ஹே! தீன தயாபரா இதுவும் உன் திருவருளோ. அகதிக்கு அரனே துணை என்பார்களே! நான்தான் பொய்யன் என்றாலும் எனக்காக பெரியோர்கள் மெய்யா மொழியும் பொய்யாகப் போகுமோ. ஹா! இதென்ன இப்படி விசாரப்பட்டுக் கொண்டிருக்கிறேனே. அங்கு அடியார் பசியோடு காத்துக்கொண்டிருக்கிறார். நான் இங்கு அழுதுகொண்டிருக்கிறேன். நன்றா யிருக்கிறது. ஐயோ, நான் என்ன செய்வேன். பிள்ளையில்லா வீட்டில் போஜனம் உண்ணமாட்டேன் என்கிறாரே. நான் எந்தப் பிள்ளையை அழைத்துப் போவேன். அது முடியாத காரியம். ஆகவே வைரவரும் அமுதுண்ணார். என் விரதமும் கெட்டது. விரதங் கெட்ட பின்பு உலக வாசம் வீண் டம்பம். பயனில்லாதது. ஆகையால் இதோடு என் வாழ்வு சரி. ஹா! என் அன்புள்ள உயிரே! இந்த உடலில் நீ இனி இருப்பது தகாது. அடியார்களுக்கு அனுசரணையில்லாத அற்ப உடல் இது. இதோபார் என் அருமைப் பாலகன் உயிரைப் பதைக்கப் பதைக்கப் பிரித்த எமன். இதுவே உன்னையும் பிரிக்கட்டும்.

[திருவெண்காட்டு நங்கை வருதல்]

கண்மணி, என் அருமைக் காதலி, எப்படி வந்து சம்பவித்தது பார்த்தாயோ? நம்மைப்போலும் நலங் குலைந்தவர் யார்தான் இருப்பார்கள். அதிலும் என்னைப்போலும் பாவி தேடிப் பார்த்தாலும் கிடையான். என் வாழ்நாள் வீணாளாகப் போனது. கண்மணி, உன்னைப்போலும் உத்தமியை நான் இனி எந்த ஜென்மத்திலும் பார்க்கப்போவதில்லை. மாதுசிரோன்மணி யென்றால் உனக்கே தகும். உன்னைத் தெய்வ மென்று வணங்கினாலுந் தகும். நீ கற்புவாய்ந்தவள். கலிகால தெய்வம். "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை" என்று திருவாய் மலர்ந்தருளிய அருள் மொழித்தேவர் நீ ஒருத்தி உலகில் அவதாரம் செய்வாய் என்று பூரண நம்பிக்கையோடுதான் தைரியமாய் அதை உலகத்திற் பறை யறிவித்தார். நீ அடிசிற் கினியாள் அன்புடையாள். என் வாய்ச்சொற்றவராத மாட்சிமை யுடையவள். பதிவிரதை. உன் மனம் களங்கமற்றது. கருணை யுடையது. தேவகானம் நிரம்பியது. என் அன்பே! நீ எனக்குச் செய்த வந்தனை வழிபாடுகளை நினைக்க நினைக்க சொல்லமுடியாத சுகானந்தம் பொங்குகின்றது. என் விரதத்தை உன் விரதமாகக்கொண்டு பலவழியாலும் படாதுபட்டுக் கடைசியாய் உன்போன்ற அற்புத மயிலுக்கும் அடிக்கடி அகப்படக் கூடாத ஆனந்தக் குயிலாகிய புத்திர ரத்தினத்தையும் கோபஞ் சிறிதுமில்லாமல் நான் கொல்ல நீ சம்மதித்தாய். ஐயோ, கண்மணி, அதன் பலனை அனுபவிக்க நான் கொடுத்துவைக்க வில்லையே. நீயுங் கொடுத்துவைக்க வில்லையே. இருக்கட்டும். இனி நான் உனக்குச் சொல்ல வேண்டியதொன்று. என் விரதம் இன்றோடு ஈடழிந்தது. என் பாடும் பட்டொழிந்தது அடியார் விருப்பத்தை முடிக்காத வரையில் நான் இவ்வுலகில் இருந்து என்ன பிரயோஜனம்? நினைத்துப்பார். அந்தப் பரமயோகியை எவ்வாறு நான் மறுபடியும் போய்ப் பார்ப்பேன். பாலனோ இல்லை. அந்தச் சீலனோ அமுதுண்பதில்லை. ஆகவே நானுங் காலன் வாய்க்கிரையாகி என் அருமைப் பாலன் போன பாதையைத் தொடரத் துணிந்து விட்டேன். நீ சுகமாகயிரு.

திரு:— நாதா, தாங்கள் என்ன இன்று இப்படிப் பேசத் துணிந்து விட்டீர்கள். அன்றிலும் பேடும் போல் இணைபிரியா திருந்தோமே. அந்த அன்பையும் மறந்து விட்டீர்களா? தங்களை மாலை யிட்டதிலிருந்து மனம் வாக்குக் காயமாகிய இந்த மூன்றிலும் தங்களோடு வேறுபாடில்லாமல் இணங்கி வந்தேனே, கயிலை நாதனுக்கு மேலாகக் கட்டிய நாதனாகிய தங்களைக் கைதொழுது கும்பிட்டு வந்தேனே. என் மனமாற ஒரு குற்றமும் செய்யவில்லையே. இதுவரை தாங்களும் என்னை வேறாக நினைத்ததில்லையே. திடீரென்று என்னைப்

பிரித்துத் தாங்கள் மாத்திரம் வேறு போவதாகக் கூறுவது தங்கள் பேரன்புக்குப் பொருத்தமாகுமோ. தாங்கள் என்னை எந்தப் பிறப்பிலும் பிரிவதில்லை என்று சொல்லுவீர்களே. இந்த வார்த்தை இப்பொழுதோ என்னைத்

(மஞ்சு நிகர் குந்தள மின்னே—மெட்டு)

தொட்டுத் தாலிகட்டின—போது
சரி நீ யென்றும் பிரியே னென்றும்
தாங்கு மஞ்சம் பேசினீர்-தோது-இப்போ
தோகை என்னைவே றாகவிட்டுச் சென்
றாகவேண்டுமென் றேன் துணிந்தீரோ
துன்ப இன்பப் பங்கெனக் கென்று—
சரிபங்குண்டு—அதையே கொண்டு
சொந்தமாய்த் தொடர்வேனு னின்று.

தங்களுடன் இணைபிரியாது இதுநாளும் இருந்துவிட்டு இப்பொழுது என்னைத் தனியாய் இரு என்றால் ஏற்குமோ? தங்களுக்கு வரும் சுகதுக்கங்களில் எனக்குஞ் சரிபங்குண்டல்லவோ. தாங்கள் உயிர் துறப்ப தென்றால் நானும் உயிர்விடத் தயாராயிருக்கிறேன்.

சிறு:— கண்மணி, என்காதற் கிளியே, எனக்கொன்றும் தோன்றவில்லை. உன் இஷ்டப்படியே செய். இனி நான் அரைக்ஷணம் இருக்கத் தரியேன்.

திரு:—நாதா, அவசரப்படாதீர்கள். நாம் நமது அதிதியின் விருப்பத்தின்படி பிள்ளையைக் கொண்டு வாராமற் போனாலும் அவர் உத்தரவுப்படி பிள்ளையைக் கூப்பிட்டுவிட்டுப் பின்பு உயிர் விடுவோம். அவர் குழந்தையைக் கூப்பிட்டுக் கூட்டி வாருங்கள் என்றார். அதன்படியே செய்வோம்.

சிறு:—சரி, அப்படியே செய்.

திரு:—நாதா, காலையில் என் வலக்கண் துடித்தது. நமது புத்திரனைக் கொன்றோம். இப்பொழுது என் இடக்கண் துடிக்கின்றது. என்ன விளையுமோ தெரியவில்லை. ஒரு வேளை பந்த பாசங்களாகிய உலக மாயையினின்றும் நீங்கிப் பேரின்ப வாழ்வை அடைய இவ்வுடலை விட்டு உயிர் பிரியக் காலம் வந்ததற்கு அறிகுறியா யிருக்குமோ. இதோ பாருங்கள், படபட வென்று துடிக்கிறதை. சரி, காலம் நெருங்கி விட்டது. வைரவ சீலரின் ஆக்கினைப்படி புத்திரனை அழைத்து இந்த கதிக் கிரையாவோம்.

[வாடா என் கண்ணின்மணியே—மெட்டு]
[புன்னு நாகவராளி—ஆதி]
கண்ணிகள்.

1. வாராயோ சீராளா—வந்து துயர்
தீராயோ நீ பாலா
நேராய் உனையறுத்துச சீராய்க் கறி சமைத்துப்
பேராவலோடுன்னை வாவா வென்றழைக்கிறோம் [வாரா

2. காலில் முள் பொறுக்காயே—கூரிய கத்தி
யாலின்று மடிந்தாயே
சீல விரதங் காக்கப் பாலனுன்னை யறுத்தோம்
காலன் எங்களை யிப்போ வாவாவென் றழைக்கிறான் [-வாராய்

[சீராளன் பெருமானருளால் உருப்பெற்று ஓடி வருதல்]

[ஷை மெட்டு]

சீ:—வந்தேன் சீராளன்—வந்தனந்
தந்தேன் நான்பாலன்—அம்மா வந்தேன்
[அப்பா வந்தேன்.
சிந்தைதனைத் திருத்தி தந்தை யெனையறுத்தும்
விந்தையுடனே பிழைத் தெந்தை யருளால்
[இதோ-வந்தேன்.

திரு:—வாடா என் மாணிக்கமே! (வாரித் தூக்கிக் கொள்ளுதல்)

சிறு:—அடே கண்மணி (முத்த மிடுதல்)

திரு:—என் கண்ணே! உன்னை இந்தப் பாழுங் கண்ணால் பார்ப்பேன் என்றிருந்தேனா.

சிறு:—அப்பா, என் கட்டிக் கரும்பே! தவம் பலித்த தனிப் புதல்வா. எங்கள் இன்னலைத் தீர்க்கவந்த இளஞ் சூரியனே. உன்னைக் கண்டேனே அப்பா! அதுவே என் துயரனைத்தையும் போக்கிவிட்டது. இன்ப வெள்ளம் புரண்டேன். சந்தோஷ சாகரத்தில் மூழ்கினேன். ஆனந்த பாஷ்பம் பொழிந்தேன். எங்கியிருந்த எங்களைத் தாங்கித் தைரியப்படுத்திய தேடிக் கிடையா தெள்ளமுதே! உயிர் பிக்ஷை யளித்த உத்தமன் நீ யன்றோ. எங்கள் விரதத்தை ஈடேற்ற வந்த இணையற்ற செல்வமே! உன்னை யறுத்துக் கறி சமைத்தோமே. நீ எப்படி இந்த உடம்பை மறுபடியும் பெற்று வந்தாயோ. உன்பாக்கியமே பாக்கியமப்பா! யாருக்குக் கிடைக்கு மிந்த சிலாக்கியம்.

திரு:—அடா மகனே! இந்தப் பாழுங்கையால்தானே உன்னைக் கறியாக்கினேன். ஹா! ஈசா உன் திருவிளையாடலை யார் அளவிடுவார்கள். அணுவை மலையாக்கி மலையை யணுவாக்குவாயே. உன்னையோ ஒருவர் அறிய முடியும் யுகங்கள் ஆயிரமாயிரமாக வாழ்நாட்கள் இருந்து, திரிலோகமும் ஒன்றாகச் சேர்ந்து ஓர் தேகமாக உருப்பெற்று, அந்த தேக முழுவதும் வாயாக நிரம்பி, அனுதினமும் தினமுழுதும் உன்னையே ஸ்தோத்திரம் செய்து கொண்டிருந்தாலும்

[நாத சிந்தாமணி—ஆதி]
[எவரினி—மெட்டு]
[பல்லவி]

எவருனை நிர்ணயஞ் செய்வரோ—உனை
எவ்வா றாதிப்பதோ—நரர்களில்—எவ

[அநுபல்லவி]

தவர்களோ முனிவரர்களோ—ரிஷீஸ்
வரர்களோ தேவா சுரர்களோ—எவ

[சரணம்]

அயன்தான் ஒரு புற மாய்த்தேடியும் மால்
முயன்றே ஒரு புறமாய்த் தேடியும் உன்
சுய வடிவங் காணு தயர்ந்தது தெந்ததே
மயல்படு நாங்களோ அருமை யறியப் போரோம்
ஐயோ மறந்தேபோனேமே. மகனே உனது
[வரவை

மகா யோகியர் ஒருவர் எதிர்பார்த்துக்கொண் டிருக்கின்ருர். நாம் அங்கு போவோம் வா.

சீ:—அம்மா என்னையும் ஒருவர் எதிர்பார்த்திருக்கிருரோ? அவ்வளவு புண்ணியம் செய்தவனே நான்?

திரு:—அப்பா, உனக்கும் உன் தந்தைக்கும் புணணியத்தைத் தவிர வேறு என்ன செய்யத் தெரியும். உங்கள் தேகமே புண்ணியத்தால்தான் சிருஷ்டிக்கப் பட்டுள்ளது.

சிறு:—கண்மணி, சீராளா, நமது உடல் ஒரு வேளை புண்ணியத்தால் சிருஷ்டிக்கப்பட் டிருக்கலாம். உன் அன்னையின் உடலோ அன்புருவான தெய்வத் திருமேனி என்று நினைப்பாய்.

சீரா:—அப்பா, தாங்கள் சொல்வது வாஸ்தவந்தான். வாருங்கள் போவோம். (போதல்.)

## அங்கம் IV

### காட்சி 4

இடம்:—சிறுத்தொண்டர் மனையிலோர் அறை.

[சிறுத்தொண்டரும் திருவெண்காட்டு நங்கையும் வருதல்]

சிறு:—என்ன ஆச்சர்யமிது! வைரவரைக் காணேமே. வெளியே எதேனும் போயிருப்பாரோ, இங்குதானிரு.நான் சென்று பார்த்து வருகிறேன். (போதல்)

திரு:—என்ன இது. பரிகலங்களிற்படைத் திருந்த பதார்த்தங்களையும் காணேமே. நாம் வெளியே சென்று கொஞ்சநேரந்தானே ஆயிற்று. அதற்குள்ளாக எங்கு போயிருப்பார்? ஒரு வேளை அமுதுண்டுதான் போனரோ! அதெப்படி, கடவுள்மேல் ஆணை யென்ருரே. கால தாமதமாயிற் றென்று கடுஞ்சின மடைந்து போய்விட்டாரோ. அப்படியானல் பதார்த்தங்கள் போன வழி. ஐயோ என்ன செய்வதென ஒன்றுந் தெரியவில்லையே.

[சிறுத்தொண்டர் வருதல்]

சிறு:—கண்மணி, எங்கெங்கு சுற்றிப்பார்த்தும் காணவில்லையே நமது வேலைக்காரர்களையும் வெளியே சுற்றிப் பார்த்து வருமாறு அனுப்பினேன். அவர்களும் வீணுகத் தேடிக் காணேமென வந்தனர். ஐயோ! எவ்வளவு கஷ்டப்பட்டு இன்று நம் விரதத்தைக் கடைப்பிடித்தும் பலனில்லாமற் போயிற்றே. புத்திரன் வரவால் எத்துயரும் நீங்கிற்றென இருந்தேனே. எல்லாத் துன்பமும் ஓர் உருவெடுத்தால் போல் இப்பொழுதல்லவா வந்து சேர்ந்தது. ஹா! ஜெகதீசா! உனது திருவுளந்தான் எதுவோ? ஏழையை அலையவிட்டு வேடிக்கை பார்ப்பதும் அழகோ. காலையிலிருந்து இதுவரையிலும் நாங்கள் பட்ட கஷ்டங்களை நீர் பார்க்கவிலையோ? இவற்றிலும் பலவாகப்பாடுபடுவதற்குக் காத்திருக்கின்ருேம். எங்கள் விரதம் நிலை நின்ருல் போதுமே. அது அடியோடு தொலைந்து போயிற்றே. ஹும்......விரதம் அழிந்த பின்னல் உயிர் வாழ்தலு முண்டோ!

அருட்சோதி யமுதே! அண்டர்முதல் தொண்டரெல்லாம் தெண்டனிடும் என்றுமுள்ள கனியே-தாயறியாத சூலுமுண்டோ நீ யறியாத செயலுமுண்டோ. சீருடையாய்! சிறப்புடையாய்! உன் திருவருளை முன்னிட்டன்ருே அறிவரிய அடியாரின் திருத் தொண்டை அடியேங்கள் அரவணைத்தோம். உன் கிருபை இது வென்ருல், நாங்கள் செய்வதுதான் யாது? அங்கு இங்கு என்னுதபடி எங்கும் பிரகாசமாய் நிற்கும் ஆநந்த மூர்த்தி நீயிலையோ? அடியேங்களை ரக்ஷிப்பதும் உனக்கோர் மலையா? கருணைக் கடலென்பார்களே துயரக் கடலிற் பட்டழியும் இந்தப் பாவிகள்மேல் உன் கருணை வரவிலையோ? ஆண்டவனே தில்லையருள் தாண்டவனே! நினைத்தாலுங் கேட்டாலும் சொன்னலும் உன்னும் எல்லாத் துயரத்தையும் பரிதி முன் பனிபோல் பறக்க ஒட்டு மென்பார்களே! எங்கள் வரையில் எல்லாம் பொய்யாய்ப் போய் விட்டதே.

[சிவபெருமான் இடபாரூடராய் பார்வதி தேவியாரோடு தோன்றல்]

(எல்லோரும்) சம்போ சங்கர மஹாதேவ!

(பணிதல்)

சிவ:—ஹே! பக்தா மனதில் சஞ்சலப் படாதே. உங்கள் துன்ப மெல்லாம் இன்றே தொலைந்தன. நீ மகா திணிந்த மனத்தன்! பரம பக்தன்! அடியார் வசத்தன். சர்வலோக சரண்யனின் அருமை தெரிந்தவன் நீ! ஹே! தம்பதிகாள்! உங்கள் பக்தியை மெச்சினேம். இன்று வைரவ சந்நியாசியாக வந்தது யாமே என்று அறிவாய். உன் விரதத்தின் பெருமையை உலகோர்க்குக்காட்டி உன்னைப் பார்த்து மற்ருேரும் எம்மைச் சேரும் வழி நாடவேண்டுமென்றும், உன் அன்ன தானத்தில் நிதான மென்பதில்லாமல் எம்மேல் மனதைச் செலுத்தாதவர்களுக்கும் அவர்களது கள்ள

வேடத்தைக் கவனியாமல் அன்னத்தை யிட்டு ஸ்வர்க்கத்துக் கிடையூறுகிய சோம்பலைச் சிறிது வளரச் செய்ததால் தீவினைப் பயனை நீங்கள் அநுபவிக்க வேண்டு மென்றும் உங்களை இன்று இவ்வாறு சோதித்தோம். நீயும் உன் மனைவியும் புத்திரனும் இவ்வுலக வாழ்வை விட்டு கயிலை வாழ்வைப் பெற வாருங்கள். நீ திவ்ய பக்தனுதலாலும் உன் மனைவியும் புத்திரனும் மகா உத்தமோத்த சற்கரும சீலர்களாதலாலும் உங்கள் விஷயமாய்ப் பேசினேரும் கேட்டோரும் எழுதினேரும் நீடூழி வாழ்ந்து சகல சம்பத்தையும் அனுபவித்துப் பின்பு என் உலகுக்கு வருவார்களாக.

சிறு:—எள்ளினுள் எண்ணெய்போல் சகல லோக ரக்ஷக சாத்வீக சுகோதய சிற்பர தற்பர மலரகித மாதுர்ய திவ்ய தேவாதி தேவா? திருமகட் சோதர மலைமகள் உபகார க்ருபாகர-தேவரீர் திருவடி தரிசனத்தைப் பெற அடியேன் என்ன புண்ணியம் செய்தேனே. அடியார்க் கெளியராகிய தாங்கள் அடியார்கட் கடியனுகிய இந்தப் பஞ்சையைக் கருணையொடு ஆட்கொள்ள வந்தது என்ன புண்ணியத்தைச் செய்ததினுலோ!

[இருவரும் பாடுதல்]

திரு:—பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெற்றது போல தங்களது பரமபக்தராகிய எனது நாயகரோடு சேர்ந்திருந்ததினுலேயே அடியாளுக்கும் பேரின்ப வாழ்வு கிடைத்தது. சகல உயிருக்குந் தந்தையாகிய தாங்கள் செய்ய இயலாதது என்னுளது.

சீரா:—செப்புதற்கரிய தறிபரானந்த சாக்ஷாத்கார சர்வலோகசரண்ய தயாபர கிருபாகர மூர்த்தியே-எட்டு மிரண்டு மறியாத ஏழைச் சிறுவனுக்கும் நெல்லுக்கிரைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசிவதைப்போல், தங்கள் கிருபை கிடைத்தது. அடையா இன்பத்தை அடையா நின்றேன். தங்கள் பதாம்புஜமே தஞ்சம் என்று கெஞ்சி நின்ற என் தந்தையோடும் தாயோடும் இப்பஞ்சையையும் ஓர் பொருளாகக் கொண்டு முத்தி யின்பத்தை நத்தித் தந்த அருளமுதே அருட் சுகமே அருட் சோதியே தங்கள் பொற்பாதமே என் ப்ரசாதம்.

[எல்லோரும் பாடுதல்]

[கல்லார்க்கும். முத்திநெறியறியாத.]

[கைலாயத்திற் கெல்லாரும் போதல்]

சுபம்! சுபம்!! சுபம்!!!

# இரஞ்சிதம்

[ஸ்ரீமான் ஆ. இராமசாமி முதலியார், பீ. ஏ.]

(426-ம் பக்கத் தொடர்ச்சி.)

இரஞ்சிதம் என்ற பெயரைக் கேட்டவுடன் வாலிபன் தன்னையும் மறந்து இவர்களைத் திரும்பிப் பார்த்து மறுபடியும் அப்புறந் திருப்பிக் கொண்டான். இதை யொருவரும் கவனிக்கவில்லை. மதனகோபனும் மற்றவர்களும் அவ்விடத்தை விட்டுச் சென்றபின் "இரஞ்சிதம் வந்துவிட்டாளா" என்று வாலிபன் தனக்குத் தானே சொல்லிக்கொண்டு கருப்பண்ணன்மீது தன் கண் பார்வையை வைத்து அவனுக்குச் சற்று தூரம் பின்னுகவே நடந்துபோய்க் கோபுர வாயிலண்டை நின்றிருந்தான். சுமார் அரைமணி நேரம் அங்கு நின்றிருந்தான். இரஞ்சிதத்தைக் காணவில்லை. சற்று தூரத்தில் நின்றிருந்த கருப்பண்ணனும் மற்றொருவனும் ஜனக்கூட்டத்தில் நுழைந்து கோவிலுக்குட் செல்பவர்கள்போல் நெக்கிக்கொண்டுபோய்க் கொஞ்ச நேரத்திற்குள் மூர்ச்சையாகவிருக்கும் ஒரு பெண்ணைத் தூக்கிக்கொண்டு வெளியில் வருவதைக் கண்ட வாலிபன் முதலில் திடுக்குற்றனெனினும் பின் சாந்தமாகி "அவள் இரஞ்சிதமல்ல. அவளைப் போன்ற ஒரு பெண்ணை அடையாளந் தெரியாமல் மூடர்கள் தூக்கிப் போகிறார்கள்" என்று சொல்லிக்கொண்டு சும்மாவிருந்தான்

அவ்வாறு தூக்கிக் கொண்டுவந்த பெண்ணை அங்குச் சமீபத்தில் இவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்த வண்டியில் படுக்கவைத்துக் கருப்பண்ணனும் மற்றவனும் ஏறிக்கொள்ள, வண்டியும் புறப்பட்டது. இவைகளைக் கவனித்துக் கொண்டிருந்த வாலிபன் தன் பார்வையைக் கோபுரவாயிலுக்குட் செலுத்தினபொழுது ஜனங்களுக்கிடையில் ஒரு பெண் மிகக் கஷ்டப்பட்டுக்கொண்டு வருவதைக் கண்ணுற்றதும் விரைந்து சென்று அப்பெண்ணுக்குத் துணையாக நின்று ஜனங்களை விலக்கிக்கொண்டு அவளை வெளியிற் கொண்டுவந்துவிட்டான். அப்பொழுது அப்பெண் வாலிபனைப் பார்த்து "அண்ணு! தாம் எனக்குதவிபுரியா திருந்திருப்பின் ஜனக்கூட்டத்திற் சிக்கி மடிந்திருப்பேன். என் மனமுவந்த வந்தனத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்" என்று மரியாதையாகக்கூறினள்.

வாலிபன்:—"அம்மா! உன்னுடன் எவரும் வரவில்லையா? தனியாகவா வந்தாய்?"

இரஞ்சிதம்:—"இல்லை. நானும் என் மாமாவும். வந்தோம் கோவிலில் எங்கேயோ தப்பித்துக்கொண்டார். இவ்வளவு கூட்டத்தில் எங்கு தேடுவதென்று வீட்டிற்குத் திரும்பிப் போகிறேன்."

வாலி:—"அம்மா? என்னை உனக்கு அடையாளந் தெரியவில்லையா? உன் பெயர் இரஞ்சிதமல்லவா?"

இரஞ்:—"ஆம். என் பெயர் தங்களுக்குத் தெரிந்திருக்கிறதெனினும் தங்களை இதற்கு முன் நான் எங்கும் பார்த்திருப்பதாக எனக்கு நினைவில்லை. எனினும் ——"என்று சொல்லி வாலிபன் முகத்தை யுற்று நோக்கினாள்.

வாலி:—"ஏனம்மா என்னை அவ்விதம் விறைக்க விறைக்கப் பார்க்கிறாய்?" என்று கேட்டுச் சிரித்தான்.

இரஞ்:—புன்னகையுடன் வாலிபன் கரங்களைப் பிடித்துக்கொண்டு "என்னையே ஏமாற்றிவிட்டாயே. என்னுடைய முறுக்கு மீசையை எங்கிருந்து திருடினாய். எவரும் உன்னைக் கனகவல்லிதான் என்று கண்டுகொள்ள முடியாது. ஏன் இந்த வேஷம்? வீட்டிற்குப் போவோம் வா" என்று சொல்லி நடந்தாள்.

கனகவல்லி:—"என் குரலை மாற்றியிருந்தால் நீயுங் கண்டுபிடித்திருக்கமாட்டாய். அஃதிருக்கட்டும். நான் கொடுத்திருந்த கடிதத்தை உன் பாட்டி உன்னிடங் கொடுக்கவில்லைபோலிருக்கிறது" என்று சொல்லித் தானும் நடக்கலுற்றாள்.

இரஞ்:—"அவ்விதமன்று. நான் வந்தவுடன் என் பாட்டி முதலில் அக்கடிதத்தைத்தான் கொடுத்தார்கள். அதைப் பார்த்தபிறகு என் மனதிலிருந்த பாரமும் கவலையும் தீர்ந்தது அதிற் குறிப்பிக்கப்பட்டிருந்த வீட்டிற்கு உடனே வந்திருப்பேன். ஆனால் என்னுடன் வந்திருக்கும் என் மாமாவுக்கு நான்கு நாட்களாகச் சரியான ஆகாரமும் நித்திரையு மில்லாததால் மிகவுங் களைப்புற்றிருந்தாராதலின் அவருக்கு வேண்டியதை உடனே செய்யவேண்டியதா யிருந்தது. அவர் சாப்பிட்டவுடன் களைத்து நித்திரை போனார். அச்சமயம் அவரை விட்டுவர மனமொப்பவில்லை. நீயும் தினப்படி. சாயங்காலம் எங்கள் வீட்டிற்குவந்து செல்வது வழக்கமெனப் பாட்டியார்சொன்னதால் நீ வருவாயென்றுஎதிர்பார்த்திருந்தேன். என்மாமா எழுந்தவுடன் கோவிலுக்குப் போய்வர வேண்டுமென்றார். இருவரும் வந்தோம். கூட்டத்தில்அவர் தப்பித்துக்கொண்டார். உன் துணையால் கூட்டத்திலிருந்து நான் தப்பி வந்தேன். உன் கடிதத்தில் என் அத்தான் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டால் அதை நம்பவேண்டாமென்றும், அவர் உயிருடன் சுகமாக எனக்காகக் காத்துக்கொண் டிருக்கிறார் என்றும் எழுதியிருந்தாயே. அது உண்மைதானே. ஏனெனின் மதனகோபன் என்னிடம் வந்து அவர் இறந்துவிட்டதாகச் சொன்னான்."

கனக:—"அதற்குள்ளாகச் சமாசாரம் உனக்கு எட்டிவிட்டது. இதை யுத்தேசித்துத்தான் எனக்குச் சந்தேகமுண்டாகாம லிருக்கும் பொருட்டு அக்கடிதத்தை உனக்கு வைத்து வந்தேன் சுமார் இரண்டுமணி நேரத்திற்கு முன்பு கொட்டகையிலிருந்து வீட்டுக்குக் குதிரைவண்டியில் நான் வந்துகொண்டிருந்தபொழுது ஒருவன் வந்து வண்டிக்காரனிடம் 'இன்று ஒரு வேட்டையிருக்கிறது. கோபுரவாயிலண்டை சரியாக ஏழுமணிக்கு வண்டி வந்திருக்கவேண்டும். கொஞ்சம் முன்னாடியே வந்தாலும் நலமே. மறந்துவிடாதே' என்று சொல்லிவிட்டுப் போனான். அவனைப் பன்முறை மதனகோபனுடன் பார்த்திருக்கிறேனாதலின், இவர்கள் ஏதோ கெடுதிசெய்யப்போகிறார்கள். நம்மாற்கூடுமானால் அதைத்தடுக்கலாம் என்ற எண்ணத்துடன் வீட்டிற்குச் சென்று அந்தவண்டியை யனுப்பிவிட்டு வேறொரு வண்டி யமர்த்திக்கொண்டு கொட்டகைக்குச் சென்று இவ்வேஷத்தை யணிந்து அவன் குறித்தவிடத்திற்குச் சென்றேன். அங்கு மதனகோபன் முதலானவர்கள் நின்றுகொண்டிருந்தனர். அவர்களுக்குச் சந்தேக முண்டாக்காமல் அவர்களின் சம்பாஷணையைக் கவனித்தேன்" என்று சொல்லி, அவர்கள் இரஞ்சிதத்தைக் குறித்துப் பேசினதும், அவர்களுடைய எண்ணமும், கருப்பண்ணன் ஒரு பெண்ணைத் தூக்கிக்கொண்டு போனதும் ஆகிய விஷயங்களை விபரமாகக் கூறி, "உன் வரவைக் கேட்டதாலும், நீ கோவிலுக்கு வருகிறாயென்பது தெரிந்ததாலும், நீ யென்று நம்பி வேறொரு பெண்ணை அவர்கள் தூக்கிப்போன மறுநிமிஷம் உன்னை நான் பார்த்ததாலும், அப்பெண்ணைக் காப்பாற்ற வேண்டுமென்னும் எண்ணம்

தொடிற்சுடி னல்லது காமநோய் போல விடிற்சுட லாற்றுமோ தீ.

கொஞ்சங்கூட வராமல் உன்னிடம் ஓடி வந்தேன்.''

இரஞ்:—''ஆகா! அறிவிலிகள் இன்னுமா என்மீது கண் வைத்திருக்கிறார்கள். நாங்கள் சற்று முன்னதாகவே கோவிலுக்கு வந்துவிட்டதால் அவர்கள் எண்ணம் ஈடேறாமற் போயிற்று. இதுவும் மீனாம்பிகையின் கருணைதான். அவர்களுக்கு அடையாளந் தெரியாமற் போனதுதான் ஆச்சரியமாக விருக்கிறது.''

கனக:—''நானே ஏமாந்தேனென்றால் அவர்கள் பிசகினது வியப்பல்ல. அப்பெண்ணுக்கும் உனக்கும் வித்தியாசம் ஒரு சிறிதும் கிடையாது.''

இரஞ்:—''அதைப்பற்றிப் பிறகு பேசிக்கொள்வோம் என் அத்தான் சங்கதி என்ன? அவர் எங்கேயிருக்கிறார்? இது என்ன! என்னை எங்கேயோ கூட்டிவந்து விட்டாயே.''

கனக:—''உன் காதலரிருக்கு மிடத்திற்கு உன்னை யழைத்துவந்தது குற்றமோ! இதோ இந்த வீட்டில்தான் இருக்கிறார். இங்கு என் தமக்கை வசிக்கிறார்கள். என் அத்தானுக்கு ஹெட்கானிஸ்டேபிள் வேலை. கொஞ்ச நாட்களுக்கு முன்தான் இங்கு மாற்றப்பட்டார். இதற்கு முன் இவ்வூரில் வேலை பார்த்திருக்கிறார். உங்களுடைய குடும்பங்கள் அவருக்கு நன்றாகத்தெரியும் உன்னையும் அவர் அறிவார்'' என்று சொல்லி வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். மயில்வாகனனின் மனைவி விஜயம் என்பவள் இவர்களைக் கண்டவுடன் ''நீங்கள் யார்? யாரைப் பார்க்கவேண்டும்?'' என்று கேட்க இருவரும் நகைத்தனர்.

இரஞ்:—''என்னம்மா! தங்களுடைய தங்கையே உங்களுக்குத் தெரியவில்லையே''

விஜயம்:—''உன்போன்ற தங்கை எனக்கு எவருமில்லையே'' என்றாள்.

கனக:—''என் போன்ற தங்கையுங்கூட உனக்கில்லையோ'' என்று சொல்லி மீசையையும் தலைப்பாகையையும் எடுத்துவிட்டாள்.

விஜயம்:—''ஆ! கனகவல்லி! நீயா! கொஞ்சங்கூடத் தெரியவில்லையே ஏன் இந்த வேஷம்? இந்த அம்மாள் யார்?''

கனக:—''இவ்வம்மைதான் நான் சொன்ன இரஞ்சிதம். ஐயா என்ன செய்துகொண்டிருக்கிறார்?'' என்று இரத்தினத்தைக் குறித்துக் கேட்டாள்.

விஜயம்:—''அவ்விதமா! மிக்க சந்தோஷம். சற்று நேரத்திற்கு முன்புதான் விளக்கேற்றி வைக்க அறைக்குட் போனேன் கையில் புஸ்தகமொன்றை வைத்துக்கொண்டு படுத்திருந்தார்.''

கனக:—இரஞ்சிதத்தைப் பார்த்து ''நீ தனியாகச் செல்கிறாயா; அல்லது நானும் இவ்வேஷத்துடன் வரவேண்டுமா?

இரஞ்:—''நீயும் வந்து ஒருபுறமாக நின்றுகொள்'' என்று சொல்ல இருவரும் இரத்தினமிருந்த அறைக்குட் சென்றனர்.

இவர்களின் புறமாக முதுகைத் திருப்பிப் படுத்துக்கொண்டு ஏதோ புஸ்தகத்தை இரத்தினம் வாசித்துக்கொண்டிருந்தான். அச்சமயம் இரஞ்சிதத்திற்கு உண்டான மன நெகிழ்ச்சியின் தன்மையை நம் வாசகர்களே அறிந்துகொள்ள வேண்டுமேயன்றி நம்மால் சொல்ல முடியவில்லை. கனகவல்லியைக் கதவண்டை நிறுத்தி மஞ்சத்தின் அருகில் சென்ற இரஞ்சிதம் சற்று குனிந்து பார்த்து ''திருக்குறள் படிக்கிறப்போ லிருக்கிறது,'' என்று மெதுவாகச் சொல்லவும், சதா இவளுடைய உருவத்தையும் இனிய குரலையுமே நினைத்துக்கொண்டிருந்த இரத்தினம் திடுக்குற்றெழுந்து நம் கதாநாயகியைப் பார்த்தவுடன் ஆநந்த சாகரத்தில் மூழ்கினவனுய்த் தன்னையும் மறந்து அவளை ஆலிங்கனஞ் செய்துகொண்டு திமிற முடியாமற் பிடித்து முகமெல்லாம் முத்தங்கொடுத்தான். இரஞ்சிதமும் தன்னை விடுவித்துக்கொள்ள முதலில் முயலவில்லையெனினும் பிறகு நிதானமாக விலக்கிக்கொண்டாள்.

இரத்:—''இரஞ்சிதம்! என் கண்மணி? நான் பார்ப்பது கனவா; அன்றி உண்மைதானா. என்னைக் காத்து ரக்ஷித்த காதலியா என் முன் நிற்கிறது. ஏனா அழுகிறாயே! ஆகா! என்ன அபசாரஞ் செய்துவிட்டேன். உன்னைப் பார்த்தவுடன் நான் எய்திய களிப்பின் மிகுதியால் என்னையும் மறந்து உன்னைக் சட்டித்தழுவி முத்தங் கொடுத்துவிட்டேன். என் உயிரே! அதற்காக நீ என்னை மன்னிக்கவேண்டும்.''

பேசுவதற்கு நாவெழாமற் றவித்துக்கொண்டிருக்கும் இரஞ்சிதத்திற்கு உதவிசெய்ய விரும்பின கனகவல்லி சற்று முன்வந்து மிகவும் நேர்த்தியாக விருக்கிறது. வேண்டுமென்று ஒரு காரியத்தைச் செய்துவிட்டு அதற்கு மன்னிப்

புக் கேட்பது எந்தவூர் வழக்கமோ தெரியவில்லை'' என்ருள்.

மூன்ருவதொருவர் அங்கிருந்ததை யறியாத இரத்தினம், வியப்புங் கோபமுமடைந்து "இதைச் சொல்வதற்கு நீ யார்? எவ்விதமிங்கு வந்தாய்? எப்பொழுது வந்தாய்? இந்தவீட்டில் இதற்குமுன் உன்னை நான் பார்த்ததில்லையே? திருடன்போற் காணப்படுகிருய். மரியாதையாக வெளியிற் சென்றுவிடு'' என்று கடுகடுத்துக் கூறினன்.

கனக:—"நான் போக மறுத்தால் என்ன செய்வீர்?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

இரத்:—"கழுத்தைப்பிடித்து நெட்டி வெளியில் தள்ளுவேன்.''

கனக:—"தங்களுக்கு இவ்வளவு அதிகாரங் கொடுத்தது யாரென்றுதான் எனக்குத் தெரியவில்லை.''

இரத்:—"அடா! துஷ்டை! அதிகப்பேசினல் அவமானமடைவாய். பேசாமற் போய்விடு.''

கனக:—"பயித்தியக்காரர்களுக்கே கோபமதிகம்போலிருக்கிறது. வீணுக் கோபித்துக் கொள்வதைவிட்டு என் சகோதரியை அனுப்பி விட்டால் நான் போய்விடுகிறேன்.''

இரத்:—"என்ன! பயித்தியக்காரத்தனமாக உளருகிருய். உன் சகோதரி இங்கெங்கு இருக்கிருள். இருக்குமிடத்தில் நீ போய்த்தேடு.''

கனக:—"என் எதிரில் என் சகோதரி நிற்கும்பொழுது நான் தேடவேண்டிய அவசியமில்லையே.''

இரத்.—புத்திசுவாதீனமில்லைபோலிருக்கிறது. குடித்துவிட்டு வந்திருக்கிருயோ?''

கனக:—"குடிமயக்கம் உமக்கோ, எனக்கோ? ஆள் அடையாளந் தெரியாமல் யார் பேசுகிருர்களோ!''

இரத்தினத்தின் கூச்சலைக்கேட்டு அங்குவந்த விஜயம் விஷயத்தை யறிந்துகொண்டு விவகாரத்தை முடிக்கக் கருதிக் கனகவல்லியைப் பார்த்து "யார் நீ? இந்த வீட்டில் வந்து அதிகாரம் பண்ணுகிருய். மரியாதையாக வெளியிற் போய்விடு. இன்னர் வீடென்பது தெரியாது போலிருக்கிறது. என்ன முறைக்கிருய்!'' என்று சொல்லித் தலையில் அடிக்கத் தலைப்பாகையும் முறுக்கு மீசையும் கீழே விழுந்ததும் விஜயம் சிரித்துக்கொண்டு ஓடிவிட்டாள்.

தான் எதிர்பாராத வண்ணம் முடிந்ததைக் கண்டு சற்றே மனம்வெட்கின இரத்தினம் நகைமுகத்துடன், "அம்மா! கனகவல்லி! நான் தெரியாமற் செய்த குற்றத்திற்காக என்னை மன்னிப்பாயென்று நினைக்கிறேன்.''

கனக:—சிரித்துக்கொண்டே "தங்களுக்கு மன்னிப்புக் கேட்பதே வேலைபோலிருக்கிறது. முதலில் என் அக்காளைக் கேட்டீர்கள். இப்பொழுது என்னைக் கேட்கிறீர்கள். தங்கள் குற்றத்திற்குக் காரணம் இம்மீசையும் தலைப்பாகையும். அவைகளிரண்டும் அக்காளுடையன. ஆதலின் இம்முறையும் அவர்களைத்தான் தாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டும்.''

இரத்:—"இரஞ்சிதம்! இது என்ன சங்கதி? இந்த மர்மம் உனக்குத் தெரிந்திருந்தும் நான் அறியாமற் சண்டையிட்டபொழுது ஏன் மௌனமாயிருந்தாய்? கனகவல்லிக்கு எதற்காக இந்த வேஷத்தைப் போட்டு அழைத்து வந்தாய்?''

இரஞ்:—"நான் அழைத்துக்கொண்டு வரவில்லை. இந்த வேஷத்தைக்கொண்டு என்னைத்தான் மயக்கி இங்கழைத்துக்கொண்டு வந்திருக்கிருள். எனக்கு இந்த இரகசியந் தெரியுமெனினும் தங்களுடைய கோபம் எவ்வளவு தூரஞ் செல்லுகிறதோ பார்ப்போமென்றிருந்தேன்'' என்று சொல்லித் தன்னைக் கனகவல்லி ஆலயத்திற் சந்தித்ததையும், அவள் தனக்குத் தெரிவித்த விஷயங்களையும் விவரமாகக் கூறினள்.

இரத்:—"அப்படியா! வயோதிக வேஷம் போட்டு, அச் சண்டாளன் மதனகோபனிடமிருந்து என்னை மீட்டு வந்தாள். வாலிபனைக நடித்து உன்னைக் காப்பாற்றிக்கொண்டு வந்து என்னிடம் சேர்த்தாள். கனகவல்லி! பிறருக்கு உபகாரஞ் செய்யவே நீ பிறந்திருக்கிருய்போலிருக்கிறது. உன்னைச் சகோதரி யென்றழைப்பது எனக்குப் பேருவப்பைத் தருமெனினும், நீங்களிருவரும் சகோதரிமுறை கொண்டாடுவதால் அதை நீக்கி மனவிருப்பத்துடன் உன்னை என் மைத்துனி யென்றழைக்க இஷ்டங்கொள்ளுகிறேன்.''

இரஞ்:—என்ன! கிழவனுக வந்து தங்களைக் காப்பாற்றினளா! என்று சொல்லிக் கனகவல்லியைக் கட்டி முத்தங்கொடுத்து "என் அருமைத் தங்கையே! உன் சீரிய குணத்தை நான் எவ்விதம் புகழ்ந்து கூறுவேன்! உன் பரோப

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிறைப்பவர்க் கூற்றுநீர் போல மிகும்.

கார சிந்தையை எவ்வாறு எடுத்துரைப்பேன்! உன் சாமர்த்தியச் செயல்களை எப்படி வியந்து சொல்வேன்! முன் பின் அறிமுகமில்லமால் ஓரிரண்டு நாட்கள் நாடகமேடையில் ஒன்று சேர்ந்து நடித்ததினாலேயே என்மீது இத்தகைய அபிமானம் பூண்டு என்னையும் என் அத்தானை யுங் காப்பதே விரதமாகக் கொண்ட உன் பேருத விக்குத் தக்க கைம்மாறு எவ்விதஞ் செய்யப்போகிறேன். அதிகமாக உன் எதிரில் உன்னைப் புகழ்வது முகஸ்துதியாகும் உத்தமத் தங்கையே! அத்தானவர்களை எவ்வாறு அப்பரம துஷ்டனிடமிருந்து காப்பாற்றினையென்பதையும் உன் கடிதத்தின் காரணத்தையும் அறிய ஆவலுள்ளவளாயிருக்கிறேன்.''

கனக:—'' அவ்விஷயங்களைச் சவிஸ்தாரமாகப் பிறகு கூறுகிறேன் அத்தானவர்களைப்பார்த்ததினால் கோவிலில் நடந்த விஷயங்களை மறந்து விட்டாய்போ லிருக்கிறது. கூடுமானால், அப் பெண்ணின் கற்பைக் காப்பாற்ற வேண்டுமென்பது என் கோரிக்கை. மேலும், மாமா அவர்கள் வீட்டிற்கு வந்து பார்த்தும் உன்னைக் காணுவிடில் மிகவும் மனம் வருந்துவார். ஆதலின் நாம் வீட்டிற்குச் செல்வது இவ்விரண்டு விஷயங்கட்கும் அனுகூலமா யிருக்குமென்று நினைக்கிறேன்.''

இரத்:—'' பரோபகாரத்திற் கென்றே பிறந்திருக்கும் கனகவல்லி! நாங்களிருவரும் சுயநலத்தைக் கருதினோமே யன்றிப் பிறர் நன்மையைக் கவனிக்கவில்லை. நீ கேள்விப்பட்டதிலிருந்து அப் பெண்ணை அவர்கள் மதனகோபன் வீட்டிற்குத்தான் தூக்கிக்கொண்டு போயிருப்பார்கள் என்று ஏற்படுகிறதினால், நாம் சீக்கிரம் சென்றால் அவளை ஒரு சமயம் காப்பாற்றமுடியு மென்றுதான் நினைக்கிறேன். நிற்க. மாமா என்று சொன்னாயே அது யார்?''

கனக:—'' அக்காள்தான் சொன்னாள். யாரென்று எனக்குத் தெரியாது. நான் பார்க்கவு மில்லை.''

இரஞ்:—'' ஆம், அவர் சங்கதி ஓர் இரகசியம். அதைச் சாவதானமாகச் சொல்லுகிறேன். எழுந்திருங்கள் வீட்டிற்குச் செல்வோம்.''

பிறகு மூவரும் விஜயத்தினிடம் விடைபெற்றுக்கொண்டு இரஞ்சிதத்தின் வீட்டிற்குப் புறப்பட்டார்கள்.

ஆலயத்தில் தப்பித்துக்கொண்ட இரஞ்சிதத்தை எங்குத் தேடியும் காணப்படாததால் சற்று வியாகூலத்துடன் தெருத்திண்ணையிலுட்கார்ந்திருந்த வீரபத்ர பிள்ளை, இவர்கள் மூவரும் வருவதைக் கண்டு எழுந்து எதிர் சென்று சந்தோஷ முகத்துடன் இரஞ்சிதத்தின் கையைப் பிடித்துக் கொண்டு, ''இரஞ்சிதம்! நீ எவ்வாறு தப்பித்துக்கொண்டாய்? கூட்டத்தின் மத்தியிற் சிக்கி மிகவும் கஷ்டப்பட்டிருப்பா யென்று நினைக்கிறேன். நீ ஒரு சமயம் வீட்டிற்குத் திரும்பி வந்திருப்பா யென்றெண்ணி இங்கு வந்து பார்த்துப் காணப்படாததால் சந்தேகங் கொண்டு, எதற்கும் சாக்கிரதையா யிருப்பது நலமென நினைத்துச் சுந்தரம் பிள்ளை வீட்டிற்குச் சென்று கேட்டதில் அவர் வெளியிற் சென்றிருக்கிறா ரென்றறிந்து, வீட்டிற்கு வந்தவுடன் அவர் என்னை வந்து பார்க்கும்படி ஒரு கடிதத்தைச் சேவகனிடங் கொடுத்துவிட்டு இங்கு வந்தேன். நல்ல வேளையாக நீயும் வந்தாய்'' என்று சொல்லி அழைத்துக்கொண்டு வீட்டிற்குட் செல்ல, மற்றிருவரும் பின்தொடர்ந்தனர்.

மேன் மாடிக்குச் சென்றபின் இரஞ்சிதம் தன் காதலனைப்பார்த்து ''அத்தான் இப் பெரியவர் யாரென்று தங்களுக்குத் தெரிகிறதா? நன்றாகப் பார்த்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்'' என, வீரபத்ரபிள்ளையைக் குறிப்பிட்டுக் கேட்டாள்.

இரத்:—உண்மையாக இவர் யாவரென்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் இவருடைய குரல் மாத்திரம் மிகவும் பழக்கமுடையதுபோற் காண்கிறது. எனினும், எவ்விடத்தில் எப்பொழுது அதைக் கேட்டிருக்கிறேன் என்பது எனக்கு விளங்கவில்லை. உனக்கு மிகவும் தெரிந்தவர்போ லிருக்கிறது. ஒரு சமயம் கனகவல்லி சொன்ன 'மாமா' என்பவர் இவர்தானோ. எனக்கு அவரைத் தெரியாவிடினும், உனக்கு அவர் மாமா வானால் நான் சொந்தத் தந்தை மாதிரி அவரை எண்ணுகிறேன்.''

இரஞ்:—''அவர் இன்னாரென்பது தங்களுக்குத் தெரியாவிடினும் தாங்கள் வைத்துக் கொண்ட முறை என்னமோ சரியாகத்தான் பொருந்தியிருக்கிறது'' என்று சொல்லி வீரபத்ரபிள்ளையைப் பார்த்து 'மாமா' ஏன் மௌனமாகவிருக்கிறீர்கள்.? தங்களைத்தெரிந்துகொள்ள எவராலும் முடியாது.''

வீரபத்ரபிள்ளை இரத்தினத்தைக் கட்டிப்

பிடித்துக்கொண்டு, "குழந்தாய்! இரத்தினம்! நான் இன்னாரென்பது உனக்குத் தெரியவில்லையா? கப்பலுடைந்து சமுத்திரத்தில் மாண்டான் என உலகத்தாரால் நம்பப்பட்ட துர்ப்பாக்கியனான உன் சிறிய தந்தை நான் என்பது உனக்குத் தெரியவில்லையா? அந்தோ! இம்மூன்று வருடங்களுக்குள் நம் குடும்பங்கள் எத்தகைய க்ஷீண திசையை யடைந்துவிட்டன! எல்லோரும் உயிர் துறந்தனர்! என் வயிற்றிற் பிறந்து எல்லோராலும் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பென இகழப்படும் பரம துஷ்டனான மதனகோபன், தான் அழிவுற்றது போதாதென்று குணவதியான இரஞ்சிதத்திற்குக் கேடு விளைத்ததுமன்றிச் சற்குண சம்பன்னனான உன்னையுமன்றோ அழித்துவிட்டிருக்கிறான். ஆகா! இப்படுபாவியால் என்னென்ன கஷ்டப்பட்டாயோ! உங்களை யெல்லாம் பார்க்க எனக்கு எவ்வளவு சந்தோஷ முண்டாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அருவருப்பு இத்துஷ்டனை நினைக்கும்பொழுதே எனக்குண்டாகிறது. இரஞ்சிதத்தின் தூண்டுதலில்லாவிடில் நான் இங்கு வந்திருக்க மாட்டேன். இப்பொழுதும் ஏனோ வந்தோமென்றிருக்கிறது. உனக்கு அவன் செய்த கெடுதல்களெல்லாம் எனக்குத் தெரியுமெனினும், இரஞ்சிதத்தை உன்னிடமிருந்து பிரித்தபின் இதுவரையும் உனக்கு அவன் செய்த இன்னல்கள் இத்தகையன வென்பது தெரியாததால் அதை விவரமாகச் சொல்வாயாக."

இரத்:—"அண்ணா! தங்களுக்கு அவர்மீது கெட்ட அபிப்பிராய முண்டாகும்படி யாரோ செய்துவிட்டிருக்கிறார்கள். ஏதோ சகவாச தோஷத்தால் ஏதேனுஞ் செய்திருந்தால் தாங்கள் அதை யொருபொருட்டாக வெண்ணி அவர் மீது வீணாகக் கோபித்துக்கொள்வது சரியெனஎனக்குத் தோன்றவில்லை. தாங்கள் வந்திருக்கும் விஷயம் தெரிந்தால் அவர் நன்மார்க்கத்தில் திரும்பி விடுவாரென்று நினைக்கிறேன்."

வீரபத்:—"இரஞ்சிதம்! இந்தப் பெண் யார்?" என்று கனகவல்லியைச் சுட்டிக் கேட்டான்.

இரஞ்சிதம்:—"நான் முன் தங்களுக்குக் கூறின கனகவல்லி யென்பவள் இவ்வம்மைதான். என் விஷயத்திலும் அத்தான் விஷயத்திலும் புகழ்ந்து கூறத்தக்க உதவி புரிந்திருக்கிறாள். அத்தானை எவ்வாறு காப்பாற்றினா ளென்பது எனக்குத் தெரியாததால் இப்பொழுது அதைத் தெரிவிப்பாளென்று நினைக்கிறேன்" எனவுரைத்துக் கனகவல்லியைப் பார்த்தாள்.

இப்பொழுது கனகவல்லியின் மனம் குழப்பத்திற்குள்ளாகி விட்டது. தந்தைக்குப் புத்திரன் மீதுள்ள கோபத்தை யதிகரிக்க விடக்கூடாதென்னும் எண்ணத்தால் இரத்தினம் அவ்வாறு மறைத்துக்கூறினானென்று அவள் எண்ணினாள். அவ்விஷயத்தை விவரமாகக் கூறவேண்டுமென்பது இரஞ்சிதத்தின் விருப்பமென்று அவள் வாக்காலும் கண்பார்வையாலும் நன்கு விளங்குகிறதெனவு முணர்ந்து கொண்டாள். இதற்குக் காரண மின்னதென்பது புலப்படவில்லை. எனினும், இரஞ்சிதம் அகாரணமாக அவ்விஷயத்தைச் சொல்லும்படி தன்னைத் தூண்ட மாட்டாள் என்ற நம்பிக்கையின் பலனாகக் கனகவல்லி பின்வருமாறு அவர்களுக்கு உரைத்தாள்.

"நான் திருச்சியிலிருந்து இங்குத் திரும்பி வந்தவுடன் சிலவிடங்களுக்குச் சென்று விசாரித்ததில், இராமனாதபுரத்திலிருந்து அக்காள் தப்பித்துக்கொண்டு எவ்விடத்திற்கோ ஓடிவிட்டாளென்றும், அத்தான் பைத்தியம் பிடித்து இதற்கடுத்த வீட்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் அறிந்து கொண்டு, இருக்குமிடந் தெரியாதவர்களைக் கண்டுபிடிக்க முயல்வதைவிடத் தெரிந்த விடத்தில் ஆபத்திற்குட்பட்டிருப்பவரைக் காத்தல் எளிதென நினைத்து, இவர் சிறைவைக்கப்பட்டிருந்த வீட்டின் வேலையாள் நலியாயிருந்ததால், அச்சமயத்தைக் கைப்பற்றி வயோதிக வேஷம் பூண்டு அவ்வீட்டில் வேலையாளாக அமர்ந்தேன். நான் அத்தானவர்களைப் பார்த்தபொழுது அவருடைய நிலைமை மிகவும் பரிதாபமாக விருந்தது. 'இரஞ்சிதம்' என்னும் ஒரு வார்த்தையைத் தவிர மற்றெதையும் சொல்லவறியார். அவ்வார்த்தையைக் கொண்டே அவருடைய பைத்தியத்தை நீக்கக் கருதித் தனியாக விருந்தபொழுது ஒரு நாள், இவருடைய அறைக்கு வெளியில் மறைவாக நின்றுகொண்டு அக்காளின் குரலைக் கொஞ்ச அபிநயித்து 'அத்தான்! அத்தான்!' என்று மெதுவாகக் கூப்பிட்டேன். அக்குரலைக் கேட்டவுடன் படுத்துக்கிடந்த அத்தான் எழுந்தோடி வந்து கூடத்தில் நாற்புறமும் பார்த்தும் ஒன்றும் அகப்படாமல் நான் நின்றிருந்ததைக்கண்டு என்னிடம் வந்து 'இங்கு வந்த இரஞ்சிதம் எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறாள்?' என்றுகேட்க, நான் சொல்

லுமாறு கேட்பதாயிருந்தால் இடத்தைத் தெரிவிக்கிறேன்' என்று சொன்னேன். அதற்கு அவர் இணங்கினது மன்றிச் சித்த சுவாதீனத்தைக் கொஞ்ச மடைந்தவராகவுங் காணப்பட்டார். பிறகு அவரை அறைக்குள் அனுப்பிவிட்டு முன் பேசின குரலால் 'அத்தான்! இப்பெரியவர் சொல்லும் மாதிரி தாங்கள் நடந்தால் நான் இருக்குமிடம் வந்து சேரலாம். நான் போகிறேன்' என்று சொல்லிவிட்டு இவருடைய அறைக்குட் சென்று சற்று நேரம் பேசிக்கொண்டிருந்தேன். இரண்டு நாட்களுக்குள் பைத்தியம் நீங்கிச் சுயபுத்திக்கு வந்துவிட்டார். ஆனால் இது எதிரிக்குத் தெரிந்தால் கெடுதலுண்டாகுமென்று சந்தேகித்து இவருக்கு எச்சரிக்கை செய்து என் உண்மை வரலாற்றைக் கூறினதுமன்றி எதிரியை எதிர்ப்பதைவிட ஏமாற்றிச் செல்வது உசிதமென்பதையு மெடுத்துக்காட்டி என் ஏற்பாட்டிற்கு ஒத்துக்கொள்ளும்படி செய்தேன். பிறகு ஒரு நாளிரவு நான் தனியாகவிருந்த சமயம் இவரையழைத்துக் கொண்டுபோய் என் தமக்கை வீட்டில் விட்டுவிட்டுத் திரும்பிவந்து படுத்துக்கொண்டேன். மறுநாட் காலை எஜமான் வரவும் பைத்தியக்காரர் தப்பித்துக்கொண்டு என்னைப் பயமுறுத்திவிட்டு ஓடிவிட்டார் எனத் தெரிவித்தேன். தெய்வ சங்கற்பமாக அன்று வண்டிச் சக்கரமேறி ஒருவன் மாரியம்மன் குளத்தண்டை இறந்து கிடக்க இவருடைய பிரேதந்தான் அதுவென்று இவருடைய விரோதிகள் எண்ணி அவ்விஷயத்தைப் பரவும்படி செய்தார்கள். இதுவும் தெய்வகடாக்ஷந்தான் என்று நினைத்துச் சந்தோஷமாயிருந்தேன். பழைய வேலைக்காரன் திரும்பிவந்ததால் நான் நீக்கப்பட்டேன். அன்று முதல் இன்றுவரை அக்காளுடைய வரவை எதிர் பார்த்துக்கொண் டிருந்தேன்" என்று சொல்லி அன்று மாலை நடந்தவைகளையும் விவரமாகக் கூறி முடித்தாள்.

வீரபத்ரபிள்ளை:— "கெட்ட காரியங்களைச் செய்வதென்று கங்கணங் கட்டித் திரிகிறான் போலும். முற்றும் அந்நியளான உனக்கிருக்கும் அபிமானத்தில் ஆயிரத்திலொரு பங்குதானும் இத்துஷ்டனிடத்தி லில்லையே. அம்மா! கனகவல்லி! உன் சிறந்த குணத்தையறிய மிகவும் சந்தோஷப்படுகிறேன். உன்போன்றோர் சிலரிருப்பதினால்தான் நாட்டில் மழை பெய்கிறது. இவர்களிருவரும் உன் பேருபகாரத்திற்குத்தக்க நன்றிபாராட்டக் கடமைப்பட் டிருக்கிறார்கள்" என்று சொன்னான்.

இரத்தினம்:—"இரஞ்சிதம்! நீ என்னைவிட்டுப் பிரிந்தது முதல் அண்ணாவைக்கண்ட சரித்திர மெல்லாவற்றையும் அறிய ஆவலுள்ளவனாயிருக்கிறேன்" என்றான்.

வீரபத்ரபிள்ளை:— "இது என்ன! கீழே ஏதோ சந்தடி கேட்கிறது. யாரோ வருகிறாப் போலிருக்கிறது"

இரஞ்சிதம்:—"ஆம்! இன்ஸ்பெக்டர் மாமா குரல் கேட்கிறது. தங்களைத் தேடித்தான் வருகிறார்போ லிருக்கிறது. அவருடன் இன்னும் வேறு சிலரும் வருகிறார்கள்போல தெரிகிறது" என்றாள்.

கனகவல்லி:—"அத்தான் இறந்துவிட்டதாக நினைத்திருக்கும் இன்ஸ்பெக்டர், அத்தான் அவர்கள் உயிருடன் இங்கிருப்பதைப் பார்க்க மிகவும் ஆச்சரியப்படுவாரென நினைக்கிறேன்" என்று சொன்னாள்.

அப்பொழுது சுந்தரம்பிள்ளையும், மதனகோபனும், மற்றொருவரும் அங்கு வந்தார்கள். வீரபத்ரபிள்ளையைக் கண்டதும் சுந்தரம்பிள்ளை அவரைக் கட்டிப்பிடித்துக்கொண்டு "அண்ணா! தாங்கள் கடலுக்கிரையானீர் என்று நான் நினைத்துக்கொண் டிருக்கும்பொழுது 'மாண்டதாக நினைக்கப்பட்ட வீரபத்ரபிள்ளை உயிர் பெற்று வந்திருக்கிறேன். அவசரகாரிய மிருப்பதால் இதைப் பார்த்தவுடன் வரவேண்டியது'' என்று தாங்கள் வைத்துவிட்டுவந்த கடிதத்தைப் பார்த்ததும் எனக்கு ஆச்சரியமும் ஆனந்தமும் ஒருங்கே யுண்டாயிற்று. உடனே, ஒரு சமயம் விரோதிகள் எவரேனும் செய்த சூதோ என்று சந்தேகித்தேன். சேவகனைக் கேட்டபொழுது தங்களடையாளத்தைத் தெரிவித்தான். அப்பொழுதும் என் சந்தேகம் முற்றும் நீங்கவில்லை. தங்களுடைய கையெழுத்தோ முற்றும் மாறியிருக்கிறது. விரோதிகள் செய்திருந்தால் மாற்றமாட்டார்கள். மேலும் தங்களுடைய நாமத்தைத் துணைக்குக் கொண்டுவரக் காரணமுமில்லை. எதற்கும் சென்று பார்ப்பதே சரியென உறுதிப்படுத்திக்கொண்டு புறப்பட்டபொழுது அத்தான் சோமசுந்தரம்பிள்ளை அதிவிரைவாய் வந்து கொண்டிருப்பதைக் கண்டு சற்று நின்றேன். அவர் ஓர் ஆச்சரியமான சங்கதியைக் கொண்டுவந்தார். அவரும் அவர் புத்திரி இரதி

காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து மேமப் புணைமன்னு மில்.

தேவியும் அம்மன் தரிசனைக்கு வந்ததாகவும், கோவிலில் மகள் தப்பித்துக் கொண்டாளென்றும், எங்குத் தேடியும் காணப்படவில்லையென்றும் சொன்னார். இதைக் கேட்டவுடன் எனக்கு மிகவும் விசனமாகிவிட்டது. தங்களைப் பார்ப்பதா அல்லது இவருடன் செல்வதா என்ற குழப்பமுண்டாய் விட்டது. நான் மௌனமா யிருந்ததைக் கண்டு அத்தான் வியப்படைந்து விசேஷ மென்னவென்று கேட்க நான் தங்களுடைய கடிதத்தைக் காண்பித்தேன். "இறந்தவர் பிழைத்து வந்திருக்கக் காணாமற் போன என்மகள் திரும்பிவர ஸ்ரீ மீனாம்பிகையின் அருள் உண்டாகுமென்பதில் யாதுஞ் சந்தேகமில்லை. வாரும் அத்தானைப் பார்க்கப் போவோம்" என்று அவர் சொல்லச் சந்தோஷமடைந்தவனாய் அவரையு மழைத்துக்கொண்டு தங்கள் வீட்டில் வந்து பார்த்தேன். தப்பித்துக் கொண்ட இரதி தேவியை அங்கு கண்டோம். தாங்கள் காணப்படவில்லை ; மதனகோபனைக் கேட்கத் தனக்குத் தெரியாதென்றான். அவனுடைய துர் நடவடிக்கைகளைக் கேள்விப்பட்டு அவன் மீது வெறுப்புக் கொண்டிருக்கலாமென்று சந்தேகித்தேன். பிறகு இரத்தினம் இறந்து விட்டதால் இரஞ்சிதத்தின் வீட்டில் தான் இருப்பீர்கள் என்று நம்பி அத்தானையும் அவர் மகளையும் மதனகோபனையும் அழைத்துக் கொண்டு இங்கு வந்தேன்" என்று சொல்ல—

மதனகோபன்:—"அந்தோ ! இரத்தினம் இறக்கவில்லை. இதோ உயிருடன் இங்கு நிற்கிறான். நான் சந்தேகித்துத் தங்களுக் குரைத்தது பொய்யாக முடிந்தது. அதைப்பற்றிச் சந்தோஷப் படுகிறேன்" என்று சொல்லி இரத்தினத்திடஞ் சென்று அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு "இரத்தினம்! உனக்கு நான் செய்த கெடுதல்களை யெல்லாம் மறந்து விடுவதுமன்றி என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்றுரைத்துவிட்டு இரஞ்சிதத்தின் முன் சென்று, "இரஞ்சிதம் ! உன் மனத்தின் தன்மையையும் உன் சீரிய குணத்தையும் அறியாமல் மனோவாக்குக் காயங்களால் உனக்குப் பலவிதத்திலும் துன்பத்தைக் கொடுத்தேன். அதற்குப் பிரதி பலனாக நீ எனக்கு உபதேசித்த மொழிகள் சிலவேயெனினும் அவைகள், பச்சை மரத்தாணிபோல் என் மனதினிற் பதிந்து எனக்கு நல்லறிவை உண்டாக்கியிருக்கின்றன. இன்னல் விளைத்தோர்க்கு நன்மைபுரியும் பெருந்தகைமை உன்னிடத்தி லிருப்பதினால் என் துர்க்குணத்தைப் பாராட்டாமல் நான் செய்த கெடுதல்களைக் களவுபோல் நீக்கி மன்னிப்பாயென்று நம்புகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தந்தைபாற் சென்று சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து அவருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு "அன்பிற் சிறந்த தந்தையே! நான் தங்களை மறுபடியும் தரிசிக்க எவ்வளவு சந்தோஷமடைந்திருக்கிறேன் என்பதை பரம் பொருளான ஸ்ரீமீனாம்பிகை அறிவாளே யன்றி வேறெவரும் அறியார். அறிந்தாலும் நம்பார், ஏனெனில் இது வரையும் அத்தகைய துன்மார்க்கத்தில் நடந்து விட்டேன். இரஞ்சிதத்திற்கும் இரத்தினத்திற்கும் நான் செய்த கெடுதல்கள் இத்தகையனவென்பது தங்களுக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். அவைகளுக்காக என்மீது அருவருப்புக் கொள்ளாமலிருக்கும்படி தங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் செய்த குற்றங்கள் எண்ணிறந்தன. அவைகளுக்குத் தக்க தண்டனை யடைவதற்குப் பாத்திரவானா யிருக்கிறேனெனினும் தங்களுடைய அன்பை யிழந்துவிட என்மன மொப்பவில்லை. என்னைப்பெற்ற பிதாவே! என்னால் அதிகஞ் சொல்லமுடியவில்லை. மன்னித்து என்னைக் காப்பாற்றும்படி கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று வேண்டினான்.

வீரபத்ரபிள்ளை:—"சீ ! துராத்மா ! உன்னை மன்னிப்பதா ! நீ செய்திருக்குங் கெடுதல்களைக் கேட்டால் உலகமே நடுக்குறுமே. ஈனத்தொழில் புரிந்து சண்டாளத்தை மேற்கொண்ட பாதகா ! உன்னை மன்னிக்கும்படியா கேட்கிறாய் ? என்னிடம் அதிகம் அன்புகொண்டவன்போற் பேசுகிறாய். எப்பொழுது நான் இறப்பேனோவென்று நீ எதிர்பார்த்துக் கொண்டிருந்தாய் என்பதை உன் செய்கைகள் நன்கு காட்டுகின்றனவே. அட துன்மார்க்கா ! தந்தையையிழந்தவுடன் தாயையும் பரிகொடுத்துவிட்டுத் துக்கமென்பது தினைத்துணையேனு மின்றிச் சிற்றின்பத்தில் மூழ்கித் தாசிகள் பாதத்தைத் தஞ்சமென்றடைந்து, பெற்றோர் தேடிவைத்த பணத்தைத் துர்வினியோகஞ் செய்து குடும்பத்திற்குப் பெருத்த அவமானத்தையுண்டாக்கினது போதாதென்று, சற்புத்திரர்களுக்கு, நினைப்பதற்கும் பயங்கரமான கெடுதல்களைமனமொப்பிச் செய்து

துப்பி னெவனாவர் மற்கொ றுயர்வரவு நட்பினு ளாற்று பவர்.

குலத்திற்குப் பெருங்கேட்டை விளைவித்த துஷ்டனை உன்னையா மன்னிப்பது ! நீ செய்த வைக ளொவ்வொன்றையும் கேட்டபொழுது என் செவியில் நாராசத்தைக் காய்ச்சிவிட்டது போல் தாக்கிற்று. இவைகளிலெல்லாம் திருப்தி யடையாமல் ஒரு பாவதோஷத்தையு மறியாத இரதிதேவியின் மாட்டுமா உன் துர்க்குணத்தைக் காட்டிவிட்டாய். சீ, சீ! துர்ப்புத்திரா! குலக் கேடா! ஏனோ எனக்கு நீ பிள்ளையென்று பிறந் தாய். உன்னைப்பெற்று வளர்த்தது இதற்குத் தானோ? இதுவோ நீ செய்யக்கூடிய கைம்மாறு. சீ! குடிகேடா! என் முன் நிற்காதே. வெளியே போய்விடு'' என்று கோபாவேசத்துடன் சொன் னான்.

(வீரபத்ரபிள்ளை பேசிக்கொண்டிருக்குஞ் சம யம் இரஞ்சிதம் சோமசுந்தரம் பிள்ளையிடம் ஏதோ கேட்டுவிட்டுக் கனகவல்லியை அழைத் துக்கொண்டு அறையைவிட்டு நீங்கிக் கீழே சென்றாள்.)

சோமசுந்தரம்பிள்ளை:—''அத்தான்! தாங்கள் தயவுசெய்து நான் சொல்லப்போவதைக் கொஞ் சங் கேட்கவேண்டும். தங்கள் புதல்வன் என் மகள் விஷயத்திற் செய்த காரியம் வேண்டு மென்று செய்யவில்லை யாதலின் அக்குற்றத்தைச் சார்ந்தவரைக்கும் தாங்கள் அவரை மன்னிக்க வேண்டுமென்பது என் கோரிக்கை'' என்றான்.

வீரபத்:—''அவ்விஷயம் தங்களுக்கு எவ்விதந் தெரியும்?'' என்று கேட்டான்.

சோம:—''தன் சிநேகர்கள், வேறு பெண் ணென்று நினைத்து என் மகளைத் தூக்கிவந்து விட்டதாகவும், அதற்காகத் தான் வருத்தப்படுவ தாகவும் தங்கள் மகனே சொன்னார்'' என்றான்.

வீரபத்:—''இருப்பினும் அவன் குற்றஞ் செய் தவன்தானே. ஒன்றுக்கிரண்டாயிற்று'' என் றான்.

சுந்தரம்பிள்ளை:—''அண்ணா! நான் சொல் வதையுஞ் சற்று கேட்கவேண்டும். மதனகோபன் புத்தி கெட்டு நின்றதையும், அவள் செய்த துஷ் கிருத்தியங்களையும் மறைத்துக் கூறுவதிற் பிர யோசனமில்லை. அவன் இரஞ்சிதத்திற்குச் செய்த கெடுதல் இன்னதென்றும் அதன் கார ணம் யாதென்றும் எனக்குத் தெரியாது. இரத் தினத்திற்குச் செய்த கெடுதல் ஒருவாறு தெரி யும. எனினும் இவைகளை மதனகோபன் தன் சுய புத்தியுடன் செய்திருக்க மாட்டானென்று உறுதியாகச் சொல்லுவேன். சகவாச தோஷத் தாற் கெட்டானேயன்றி அவனே ஒன்றையுஞ் செய்திருக்கமாட்டான். செல்வச் செருக்குற்ற வாலிபர்கள் அடக்குவாரின்றித் துன்மார்க்கத்திற் சேர்க்கை வாசனையின் பயனுய்த் திரிந்து நிற்பது நாம் கண்கூடாகக் காண்பதோர் உண்மையாகும். அதுபோலவே நம் மதனகோபனும் கெட்ட சிநேகத்தால் அழிவுற்றான் என்பது நிச்சயம். ஒருவனுக்கு ஒருமுறை தான் செய்தது குற்ற மென்று தோன்றுமாயின் மறுபடி அதைச் செய் யமாட்டானென்று உறுதியாக நம்பலாம். அம் மாதிரி மதனகோபன் தான் செய்த குற்றத்தை ஒத்துக் கொண்டதுமன்றி மன்னிப்புங் கேட்கிற தினால் இனித் திரும்ப அவன் தீயவழியிற் செல்ல மாட்டா னென்று நிச்சயமாகக் கூறலாம். மேலும் அவனுடைய கெட்ட சிநேகிதர் இனி மேல் இவ்விடத்தில் தலைகாட்டமாட்டார்களென் பதுந் திண்ணம். ஆகவே உலகானுபவ மில்லாத மதனகோபன், தன் அறியாமையாற் செய்த குற் றங்களை ஒருபொருட்டாயெண்ணி அவன் மீது அருவருப்புக் கொள்ளாமல் அவனை முற்றும் மன்னித்துத் தங்களுடைய அன்பிற்குரியவனாக ஏற்றுக் கொள்ளலாமென்று நினைக்கிறேன்'' எனவுரைத்தான்.

வீரபத்:—''நீங்களிருவரும் சேர்ந்தாற்போல் இத்துஷ்டனுடைய தீக்குணத்தை மறைத்து இவனுக்கனுசரணையாகப் பாராட்டிப் பேசுவதின் கருத்து விளங்கவில்லை. அவனுடைய செய்கைக ளின் தன்மை எத்தகைய தென்பது உங்களுக் குத் தெரியாததால் இவ்வாறு கூறுகிறீர்க ளென்று நினைக்கிறேன்'' என்று சொன்னான்.

அச்சமயம் இரஞ்சிதம், கனகவல்லி, இரதிதேவி ஆகிய மூவரும் அங்கு வந்தார்கள். இரதிதேவி சரேலென்று வீரபத்ர பிள்ளையிடம் சென்று அவருக்கு நமஸ்காரஞ்செய்து ''மாமா! நான் தங் களை யொன்று கேட்டுக்கொள்ள வேண்டும். என் விஷயத்தில் அத்தானவர்கள் செய்ததைக் குற்ற மாக நினைத்து அவர்மீது வீணாகக் கோபித்துக் கொள்வதைக் கேட்க மிகவும் விசனப்படுகிறேன். நானென்பது தெரிந்திருந்தால் இக்காரியமே நடந்திராது. என்னை அவர் தெரிந்து கொண்ட வுடன், அத்தான் என்னிடம் வந்து, தன்னை யறியாமல் இக்காரியம் நடந்து விட்டதாகவும், அதற்காகத்தான் மிகவும் வருத்தப் படுவதாகவும், கோவிலுக்குச் சென்று என் தந்தையைத் தேடி

யழைத்து வந்து என்னை அவரிடம் ஒப்பித்து விடுவதாகவும் என்னிடஞ் சொன்னர் அவருரைத்தது உண்மையென்பது எனக்கு இப்பொழுது தெரிகிறது. ஆதலின் என் விஷயத்தில் அவர் செய்தது குற்றம் அன்று என நான் ஒத்துக்கொள்வதைத் தாம் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறேன்" என்று சொன்னள்.

வீரபத்:—"அப்படியா! இது யாருடைய உபதேச மொழி யென்பது தெரியவில்லை. இருக்கட்டும். இரஞ்சிதம்! உனக்கு இத்துஷ்டன் செய்த கெடுதல்களைச் சவிஸ்தாரமாக எல்லோருக்குந் தெரியும்படியாகச் சொல்" என்றான்.

இரஞ்சிதம், தனக்குத் தெரிந்தவரை ஆதிமுதற்கொண்டு, தானும் வீரபத்ர பிள்ளையும் மதுரைக்குத் திரும்பி வந்த வரைக்கும் பொக்கிஷ சமாசாரத்தைத் தவிர எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லி முடித்தாள்.

வீரபத்:—"சுந்தரம்! இப்பொழுது உன் அபிப்பிராயம் மாறியிருக்குமென்று நினைக்கிறேன். இத்தகைய துஷ்டனை மன்னிக்கலாமா?" என்று கேட்டான்.

சுந்தர:—"என் அபிப்பிராயம் ஒரு சிறிதும் மாறவில்லை மதனகோபனைத் தாம் மன்னிப்பதற்கு இடையூறென்றேனு மிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. சகவாச தோஷமே முக்கிய காரணமென்பதை இரஞ்சிதத்தின் கூற்று நிலைநாட்டுகிறது. இரஞ்சிதத்தைத் தாம் கேட்டால் அவளும் அவ்விதமே சொல்லுவாளென்று நம்புகிறேன்" என வுரைத்தார்.

வீரபத்:—"என்ன இரஞ்சிதம்! உன்னுடைய அபிப்பிராயமும் அது தானே?"

இரஞ்சி:—"தாங்கள் என்ன கேட்கிறீர்களென்பதே எனக்குத் தெரியவில்லை"

சுந்தர:—"இரதிதேவி மன்னித்தது போல் நீயும் மதனகோபனை மன்னிக்கிறாயா என்று கேட்கிறாய்"

இரஞ்சி:—"அத்தான் இரதி தேவிக்கு யாதொரு குற்றமும் செய்யவில்லை யென்று அவள் சொன்னளேயன்றி அவரை மன்னித்ததாகக் கூறவில்லை. நானும் அவ்வாறே சொல்லவேண்டியவளா யிருக்கிறேன். குற்றஞ் செய்தவிடத்து மன்னிப்பேயன்றிக் குற்றமில்லாதவிடத்து மன்னிப்பில்லை அவர் என்மாட்டு யாதொரு குற்றத்தையேனும், கெடுதலையேனும் குற்றத்தின் பொருட்டும் கெட்ட எண்ணத்துடனுஞ் செய்யவில்லை. அவருடைய சொந்த அத்தையின் மகளான என்மீது அவர் காதல் கொண்டது குற்றமாகாது. அக்காதலின் பலனை என்னை விவாகஞ் செய்துகொள்ள விரும்பியதுங் குற்றமன்று. ஓரூருக்குப் பல வழிகளிருக்கின்றன மாதிரி ஒரு காரியத்தை முடிப்பதற்குப் பலர் பல்வேறு விதமான முயற்சிகளைச் செய்கிறார்கள். அதே மாதிரி அத்தானும் தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றக் கருதிச் சில உபாயங்களைத் தேடினர். அவருடைய இஷ்டத்திற்கு இடையூறிருந்ததினல் இக் காரியங்களைச் செய்தார். அவைகள் அவரவர் மனப்போக்கிற் கேற்பக் குற்றமாகவும் குணமாகவும் தோன்றும். இதை முன்னிட்டு அவருடைய செய்கை குற்றமுடையதென்று சொல்வது பொருந்தாது தவிர நானே அவருக்குக் குற்றஞ் செய்ததாக ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவருக்கு என்மீது எப்பொழுது காதலுண்டாயிற்றோ அப்பொழுதே அதை நான் கண்டித்திருக்க வேண்டும். அவ்வாறின்றி அதை வளரவிட்ட பின் நான் மறுத்துக் கூறினது என் குற்றமேயாம். கடைசியாகவும் அவருக்கு என் மனதை வெளியிட்டுக் கூறவில்லை. ஆரம்பத்திலேயே என் மனதிலிருந்ததை வாக்கால் தெரிவித்திருந்தால் அவர் தன் காதலை வேறிடத்திற்கு மாற்றியிருப்பார். கெட்ட பெயரும் அவருக்குண்டாகியிராது. அவரும் தீய வழியிற் சென்றிருக்கமாட்டார். ஆதலின் நானே அவர் மாட்டுக் குற்றஞ் செய்தவள். நான்தான் அவரை மன்னிப்புக் கேட்கவேண்டும். நிற்க, அவர் எனக்குச் சில நன்மைகளும் புரிந்திருக்கிறார். உலகை மின்னதென் றறியாதிருந்த எனக்கு அது இத்தகையதென்பதைக் கற்றுக் கொடுத்தார். இவ்வனுபவம் எனக்கு முன்னமேயே இருந்திருந்தால் அவருடைய காதல் வெள்ளத்தின் போக்கை வேறு பக்கந் திருப்பி யிருப்பேன். அவருடைய காதலின் பெருக்கால் எனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர் செய்யாதிருந்திருப்பின் நான் என் மாமாவைப் பார்க்கப் போவது மில்லை. அவர் எனக்குக் கிடைக்கப் போவது மில்லை. ஆதலின் இன்னோரன்ன விஷயங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அவர் எனக்கு யாதொரு விதமான குற்றமுஞ் செய்யவில்லை யென்பதும் அவரை நான் மன்னிக்க வேண்டிய நிமித்தமேயில்லை யென்பதும், அதற்கு மாறாக நான் அவ

ருக்குப் பெருங் குற்றஞ் செய்திருக்கிறேனென் பதும், அவர் தீய வழியிற் சென்றதற்கு மூலகாரணம் நானே என்பதும், இதற்காக நான் அவரை மன்னிக்கும்படி கேட்கவேண்டியவளா யிருக்கிறே னென்பதும் தவிர; அவர் எனக்குச் செய்திருக்கும் பேருபகாரத்திற்குத் தக்க நன்றி யறிதலே அவர்பாற் காட்டக் கடமைப்பட்டிருக் கிறே னென்பதும் தெளிவாக விளங்கும்'' என்று சொன்னாள்.

வீரபத்:—"பேஷ்! இரஞ்சிதம்! இத்தகைய மொழிகளே முன்னடியே உன்னிடமிருந்து எதிர் பார்த்தேன். மதனகோபன் உன்னிடங்கொண் டிருந்த மோகத்தைக் காதலாக மாற்றிக் கூறின தும், அவனுடைய குற்றச் செயல்களைக் குணப் படுத்தி உயர்வாகக் கூறினதும் உன்னுடைய சீரிய குணத்தின் உன்னதத் தன்மையை விளக்க முறக் காட்டினவேயன்றி அவன்பால் நான் கொண்டிருக்கும் வெறுப்பை விலக்கவில்லை. உனக்கும் இரதிதேவிக்கும் அவன் செய்த கெடு தல்களை நீங்களிருவரும் இல்லையென்று கூறினும் என் பெயரைக் கெடுத்ததை யாரோ இல்லை யென்று மறுக்கப்போகிறார். இவ்விஷயத்தில் இவன் என் அருவருப்பிற்குட்பட்டுத் தானே நிற்கிறான்'' என்றுரைத்தான்.

இரஞ்சி:—"மாமா! வேறெவரும் தங்களுக்குத் தகுந்த பதிற்சொல்ல முன் வாராததால் நான் தங் களுக்கு விடையளிப்பது என் பொறுப்பென்று நினைக்கிறேன். அத்தான் குடும்பத்திற்குக் கெட்டபெயரைக் கொண்டுவந்தார் என்று சொல் வதற்கில்லை. ஏனெனில் தாசிவீடு செல்வதைக் கௌரவமாக நினைக்கும் உலகம் அவருடைய செய்கையைக் கேவலமாகக் கருதாது கூத்தியா ரில்லாதவன் ஆயிரத்தி லொருவன் அரிது. ஆகவே அவ்வகையில் அவர் குற்றம் பெரிதன்று. மேலும் அது குற்றமும் அன்று. எவ்வாறெனில் அவர் செய்த குற்றத்தின் பலனாக அவருடைய குடும்பத்திற்கு மாத்திரமன்றிக் குலத்திற்கே பெரியதோர் அரிய பொருளைக் கொடுத்திருக் கிறார். கப்பலுடைந்து கடலுக்கிரையானரென்று நினைக்கப்பட்ட தந்தைக்கு உயிர்கொடுத்து உல கத்தார்க் களித்திருக்கிறார். தாம் தீவில் உயி ருடன் இருந்திரெனினும் இறந்தோரி லொருவரா கவே கருதப்பட்டீர்கள். தங்களுடன் பெருந் தனத்தையும் உலகத்திற்குப் பலன்படுமாறு அளித்திருக்கிறார். (பொக்கிஷம் கிடைத்த வர லாற்றைத் தெரிவிக்கிறாள்.) புதைபட்டுக்கிடந்த திரண்ட செல்வம் பிரயோசனப்படுமாறு செய் தார். அவர் சாந்த ரூபமாயிருந்திருந்தால் நான் திருடர் கையிலகப்பட்டுத் தீவிற்கு வரப்போவ தில்லை தாங்கள் மதுரையைப் பார்க்கப் போவது மில்லை. இத்தகைய பேருதவியை உலகினர்க்குச் செய்த புதல்வன் தந்தையின் அன்பிற்குப் பாத் திரவானன்றெனின் வேறெவன்தான் அதற்குரி யவனென்று எனக்குத் தெரியவில்லை'' என்று சொன்னாள்.

இரத்தினம்:—"இரஞ்சிதம்! அண்ணா அவர் கள் உன்னைக் கேட்டவுடன் கொஞ்சமேனுந் தாமதமின்றி ஒவ்வொரு விஷயத்தையும் விவர மாகவும் விரிவாகவும் நீ யுரைத்த பொழுது ஏனோ இவ்வாறு சொல்லுகிறாயென்று சந்தேகித் தேன். எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப் பது போலன்றோ முடியும் என்றெண்ணினேன். ஆனால் உன் புத்தி நுட்பத்தாலும் வாக்கு சாதுர்யத்தாலும் நன்றாக எரியவிட்ட நெருப்பை ஒரு நொடியில் முற்றும் அணைத்துவிட்டதைப் பற்றிச் சந்தோஷப்படுகிறேன்'' என்று சொன் னான்.

சுந்தரம் பிள்ளை:—"அண்ணா! இனி மதன கோபனை யங்கீகரித்துக் கொள்வதில் தங்களுக்கு யாதொரு விதமான ஆக்ஷேபணையு மிராதென்று நம்புகிறேன்'' என;

வீரபத்.—"மதனகோபன் இதுகாறுஞ் செய் துவந்த குற்றத்திற்கு இவ்வாறு விமோசனமேற் பட்டதென்று வைத்துக்கொண்டாலும் இனி மேல் அவன் தீய வழியிற் செல்லமாட்டானென் பது என்ன உறுதி? அதற்கேதேனும் அத்தாட்சி யிருக்கிறதோ?'' என்று கேட்டான்.

கனகவல்லி:—"மாமா! இச்சந்தேகத்தை என்னால் நீக்கமுடியுமென்று நினைக்கிறேன்'' என்று சொல்லித் தான் வாலிப வேஷமணிந்து அம்புஜத்தின் வீட்டிற்குச் சென்றதையும், திரும்பி வந்தபொழுது மதனகோபனுக்கும் கோபாலபிள்ளைக்கும் நடந்த சம்பாஷணையை அவர்களுக்குத் தெரியாமல் தான் கேட்டதையும் சுருக்கமாகத் தெரிவித்து, தாங்கள் உயிருடன் இருக்கிறீர்கள் என்னும் விஷயம் தெரிவதற்கு முன்பே அவர் தம் சிநேகிதரிடம், அக்காளுக்கு இஷ்டமிருந்தால் விவாகஞ் செய்துகொள்வ தென்றும் இல்லாவிடில் இரதி தேவியை மணம் புரிந்து இல்லற தர்மத்தை நடத்துவதாகவும்

சொன்னதை நான் என் காதாரக் கேட்டதினு லும், வயோதிகனை அவரிடம் வேலை செய்த பொழுது, அவர் தீய வழியிற் செல்வதற்கு அவ ருடைய சிநேகர்களே மூலகாரணம் என்னும் உண்மையைக் கண்டறிந்தே னதலினுலும், அவர் இனித் துன்மார்க்கத்தில் தலைப்படமாட்டா ரென்று உறுதியாகச் சொல்லக்கூடியவளா யிருக் கிறேன். (சுந்தரம் பிள்ளையைப் பார்த்து) "மாமா! தங்கள்பால் நானொரு குற்றஞ் செய்திருக்கிறேன். அதற்காக என்னை மன்னிக்கவேண்டும். இரஞ்சி தத்து அக்காளுக்கும் தங்களுக்கும் எவ்விதமான முறைப்பாடென்பது எனக்கு முன்தெரியாததால் அம்புஜத்திடம் நான் வார்த்தை யாடினபொழுது தங்களை என் சிறிய தந்தை யென்று சொல்லி விட்டிருக்கிறேன். இப்பொழுது தங்களை மாமா வென்றழைக்கிறேன். இவ்வாறு முரண்படுவது குற்றமல்லவா?" என்றாள்.

**சுந்தர:**—"தெரியாமற் செய்த காரியம் குற்ற மாகாதென்னும் நியாயத்தை நிலை நாட்டின இரதி தேவியின் முன்பு உன்னைக் குற்றவாளி யாக்கி னல் நான் தண்டிக்கப் படுவேனென்று நினைக்கி றேன். (வீரபத்ர பிள்ளையைப் பார்த்து) "அண்ணு! இப்பெண் யார்? நான் இதற்கு முன் பார்த்ததில்லையே" என்றார்.

**வீரபத்ர:**—"கனகவல்லியை உனக்குத் தெரியு மன்றல்லவோ நினைத்தேன். மகா உத்தமி. பேரு பகாரி. பரோபகாரஞ் செய்வதற்கென்றே பிறந் திருக்கிறாள். ஹெட்கான்ஸ்டேபிள் மயில்வாக னின் மைத்துனி" என்று சொல்லி அவளைப் பற்றித் தனக்குத் தெரிந்தவரைக்கு முரைத்து "இம்மூன்று பெண்களுஞ் சேர்ந்து என் வாயை அடைத்து என் மனதைத் திருப்பி என்னைக் கட்டிவிட்டார்கள்" என்றார்.

**சுந்தர:**—"இத்தகைய பெண்கள் உலகத்தி லிருப்பது துர்லபமே. இரஞ்சிதம் தனக்கேற்ற தங்கையைத் தேடிக்கொண்டிருக்கிறாள். மயில் வாகனன் வீட்டில் இவ்வளவு சங்கதியும் நடந் திருக்க, அவன் அதை எனக்குத் தெரிவிக்காம லிருந்தது ஆச்சரியமாகத்தா னிருக்கிறது. எனக் குத் தெரிந்திருந்தால் நலமாயிருந்திருக்குமென் றெண்ணுகிறேன்" என வுரைத்தார்.

**இரஞ்சி:**—"தங்களுக்குத் தெரிந்திருந்தால் தாம் உத்தியோக முறையில் காரியத்தை நடத்தி யிருப்பீர்கள். அப்பொழுது விபரீதமாக முடிந் திருக்கும். என் தங்கை செய்ததே சரியென்று நினைக்கிறேன்" என்றுரைக்க,

**சுந்தர:**—'நீ 'வக்காலத்' எடுத்துக்கொள்ளு வாயென்று தெரிந்திருந்தால் நான் இதைச் சொல்லியிருக்கமாட்டேன்" என்றார்.

**கனக:**—"அக்காளைக் கண்டவுடன் இவ்வ ளவு பயப்படக்கூடிய மாமா போலீஸ் உத்தியோ கம் எவ்வாறு செய்கிறார்?" என்றாள்.

**சுந்தர:**—"உருமாறித் திருட்டைக் கண்டுபிடிக்க நீயும் உன் அக்காளு மிருக்கும்பொழுது எனக் கென்ன குறை. அண்ணு! தாங்கள் மதனகோ பனை அங்கீகரித்து விட்டீர்களென்று நினைக்கி றேன்" எனக் கேட்டார்.

**வீரபத்:**—"ஆம். அவ்விதந்தான் சொல்ல வேண்டி யிருக்கிறது. சரி. அதிக நேரமாகி விட்டது. எல்லோரும் எழுந்திருங்கள், சாப்பி டப் போவோம்" என்றார்.

**சுந்தர:**—"எல்லோரும் இங்கிருப்பதால் இனி மேல்தான் சாப்பாடு தயாராக வேண்டுமென்று நினைக்கிறேன்" என்றார்.

**இரஞ்சி:**—"எல்லாம் சித்தமாகவே யிருக்கி றது. புறப்பட வேண்டியதுதான் தாமதம்" என் றாள்.

**வீரபத்:**—"சுந்தரம்! உன் மருமகள் சாமர்த் தியம் முற்றும் உனக்குத் தெரியாது" என்று சொல்லி எல்லோரையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.

---

## பதினைந்தாம் அத்தியாயம்.

### இரஞ்சிதத்தின் கலியாணம்.

கடந்த அத்தியாயத்திற் குறித்த விஷயங்கள் நிகழ்ந்த மறுநாட் காலை இரஞ்சிதம், கனக வல்லி, இரதிதேவி ஆகிய மூவரும் மேன்மாடி யில் தனியாக உட்கார்ந்துகொண்டு பின்வரு மாறு வார்த்தையாடினர்.

**இரஞ்சிதம்:**—"இரதிதேவி! உன்னை ஒரு சங்கதி கேட்க விரும்புகிறேன். உன் மனதி லுள்ளதை ஒளிக்காமற் சொல்லவேண்டும். உன் விவாக விஷயத்தைப்பற்றி உன் மனதில் ஏதே னும் ஒருவிதமான ஏற்பாடு செய்திருக்கிறாயா?"

**இரதிதேவி:**—"அக்கா! உன் வினவின் பொருள் எனக்குச் சரியாக விளங்கவில்லை"

**இரஞ்:**—"உன் மனதில் யாவரையேனும் புருஷனக வரித்திருக்கிறாயா என்று கேட்கி றேன்"

---

கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விக்நா ணெடிய கழியு மிரா.

இரதி:—"இன்னும் அவ்விதமான எண்ணம் என் மனதி லுண்டாகவில்லை. எதற்காக இதைக் கேட்கிறாய்?"

கனகவல்லி:—"உன் மனதில் அத்தகைய எண்ணத்தை யுண்டாக்கத்தா னென்பது தெரிய வில்லையா!"

இரஞ்:—"உண்டாக்குவது மாத்திரமன்று. அதை யுறுதிப்படுத்தவும் வேண்டும். பெரிய அத்தான் மீது உனக்கு ஏதேனும் அருவருப் புண்டோ?"

கனக:—"இவ்வளவு பீடிகை ஏனக்கா! அவரைக் கலியாணஞ் செய்துகொள்ள விருப்ப முண்டா இல்லையா என்று கேட்டுவிடுகிறது தானே"

இரஞ்:—"அவ்வளவு வெளிப்படையாகச் சொல்லவேண்டிய காரணமில்லையாதலின் அவ் விதம் கேட்டேன்"

இரதி:—"ஆம். அக்காளுடைய வினவின் கருத்தை யறிந்துகொண்டேன். அத்தான்மீது வெறுப்புக் கொள்ளத்தக்க காரணமொன்று மில்லை. மேலும், கனகவல்லி யக்காள் நேற்றி ரவு சொன்னதிலிருந்து அவரிடம் அருவருக் கக்கூடிய குணமொன்றையுங் காணேம். அவ ருக்குள்ள இயற்கையான நற்குணங் கெட்டதற் குத் துர்ச்சகவாசமே பிரதான காரணமா யிருந்த தென்பதும் விளங்குகிறது"

கனக:—"வெளிப்படையான மறுமொழி யாகவில்லையே. அவரிடம் உனக்கு வெறுப் பில்லை யென்பதை மாத்திரம் கூறினையேயன்றி அவர் மீது உனக்கு விருப்பமுண்டா என்ப தைச் சொல்லவில்லையே. அதுவல்லவோ முக்கி யமானது"

இரஞ்:—"அவ்வாறு சொல்லவேண்டிய அவ சியமில்லை. எப்பொழுது வெறுப்பில்லையோ அப்பொழுது விருப்பமுண்டென்று வைத்துக் கொள்ளலாம்"

கனக:—"நீ இப்பொழுது சொன்னதை இரதிதேவி மறுத்துக் கூறவில்லையாதலின் விருப் பமுண்டென்பதை வைத்துக்கொள்வது மாத் திரமன்றி வாஸ்தவமென்றும் நம்பலாம். அக்கா! கூடிய சீக்கிரத்தில் இவர்களுக்கு விவாகத்தை முடித்துவைப்பது உன் பொருப்பாகும்"

இரஞ்:—"என்னுடைய எண்ணமும் அது தான். கனகவல்லி! உன்னையொரு சங்கதி கேட் கப் பிரியப்படுகிறேன். அதற்குத் தக்க பதில் கொடுப்பாயோ மாட்டாயோ என்று சந்தேகப் படுகிறேன்"

கனக:—"உன்னுடைய வினு எத்தகைய தென்பது எனக்குத் தெரியும். என் வாணுட் களை யெல்லாம் இவ்வாறே கழிக்க வேண்டு மென்பது என் விருப்பம். என்னாலியன்ற வரைக்கும் உலகத்தாருக்கு உதவிபுரிய வேண்டு மென்பது என் கோரிக்கை. விவாகம் இதற்குப் பெருத்த இடையூறாக விருக்குமென்பது என் அபிப்பிராயம் என் நம்பிக்கையும் அதுவே யாம். அது எவ்வாறென்று என்னைக் கேட்க வேண்டாம். இது விஷயமாகத் தர்க்கித்துப் பேச ஆரம்பித்தால் தகுந்த முகாந்திரங்களை எடுத்துரைக்க என்னாலியலாமற் போகக்கூடும். என் அபிப்பிராயம் பிசகென்பதை ஒருசமயம் உன்னால் நிரூபிக்கவும் கூடும். அப்பொழுதும் என் மனதை மாற்றுவிட்டால் உனக்குக் கஷ்ட மாகவிருக்கும். ஆதலின், அக்கா! இது விஷ யமாக இனிமேல் என்னிடம் பேசாமலிருப்பது எனக்குப் பேருபகாரஞ் செய்த மாதிரியாகும். இதனால் என்னைப் பிடிவாதக் காரியென்று நினைத்துவிடக் கூடாது. இவ்வொரு விஷயத் தில் மாத்திரம் என் எண்ணத்தை மாற்ற நீ பிரயாசைப்படக் கூடாது. இது ஒன்றுதான் உன்னை நான் கேட்டுக்கொள்வது" என்று சொன்னாள்.

இரஞ்:—"என் பிரிய தங்கையே! மறுவார்த் தையாட முடியாமல் என் வாயை அடைத்து விட்டாய். உன் விருப்பத்திற்கு மாறாக நான் வார்த்தையாடுவேனாயின் என்னைப்போல் நன்றி கெட்டவள் இவ்வுலகில் எவளுமிருக்க மாட்டாள். உன் இஷ்டத்திற்கு விரோதமாக நான் எதையுஞ் சொல்வதில்லை" என்றாள்.

அப்பொழுது மதனகோபனும் இரத்தினமும் அங்குவர மூன்று பெண்களும் எழுந்து நின்ற னர். "அக்காளுக்குந் தங்கைக்கும் ஏதோ சண்டைபோ லிருக்கிறது" என்று இரத்தினம் சொன்னான்.

கனக:—"எங்களுடைய சண்டைக்குத் தாங் கள்தான் காரணம்" என்றாள்.

இரத்தி:—"விளங்கவில்லையே" என;

கனக:—"பைத்தியக்காரருக்கு விளங்காம லிருப்பது ஆச்சரியமன்று" என்றாள்.

மதனகோ:—"கனகவல்லி! இரத்தினத்திற் குப் பயித்திய முண்டாக்கினவன் நானாதலின்

என்மீதுதான் குற்றத்தைச் சுமத்தவேண்டும்'' என்று சொன்னான்.

கனக:—"இது மிகவும் நன்ருக விருக்கிறது. தன்னைத் தான் காப்பாற்றிக்கொள்ள ஓர் ஆடவனல் முடியவில்லையென்றால் அன்னவரை ஆண்பிள்ளை யென்றுஞ் சொல்லலாமோ. ஒருவரை மற்றொருவர் கெடுக்க நினைப்பது இக்காலத்திய இயல்பாகவிருக்கிறது. இதை யுணர்ந்திருந்தும் ஒருவர் பிறருடைய வஞ்சக மொழிகளில் மயக்குற்றுத் தீயவழியில் தலைப்பட்டுத் தாசியில்லம் அடைவாராயின், அவருடைய பெண்டு பிள்ளைகளின் கதி என்னவாகும்'' என்றாள்.

இரத்தி:—"கனகவல்லி! உன்கருத் தின்னதென்பதை யுணர்ந்துகொண்டேன். இதுகாறும் தீயவழியிற் சென்று திரிந்த நான் மறுபடியும் அவ்வாறு போகமாட்டேன் என்பது என்ன உறுதியென்றும், என்னை நம்பி ஒரு பெண்ணைக் கொடுத்தால் அப்பெண்ணின் கதி என்னவாகுமென்றும் நீ சந்தேகிக்கிருயென்பது விளங்குகிறது. அவ்வாறு ஐயமுறுவதும் இயல்பேயாகும். எனினும், இனிமேல் கெட்ட வழியிற் செல்வதில்லை யென்று வாக்குறுதி கொடுக்கிறேன். நீயும் அதில் நம்பிக்கை வைக்கலாம்'' என்று சொன்னான்.

மதனகோ:—"அம்மணி! உன் கூற்றுனது கூரம்புபோல் என் மனதைத் தாக்கிற்று. நான் துன்மார்க்கத்தில் திரிந்து கெட்டது போதாதென்று என் சகோதரனையும் அழிக்கத் தலைப்பட்டேன். பலவிதமான பாவங்களைப் புரிந்தேன். பலருக்குக் கெடுதலை யுண்டாக்கினேன். ஆனல் என் செய்கைகள் அச்சமயம் எனக்குக் குற்றமாகத் தோன்றவில்லை. இப்பொழுதுதான் அவைகள் என் மனதை வருத்துகின்றன. குடிகாரனொருவன் குடித்தல் கெடுதலென்று தனக்கே தோன்றி அத்துர்வழக்கத்தை நீக்குவானயின் அவன் மறுபடியும் அதைக் கையாள மாட்டானென்று உறுதியாக நம்பலாம். அம்மாதிரி இப்பொழுது நானே என்னைச் சீர்திருத்திக் கொண்டிருக்கிறேனதலின், திரும்பத் தீயவழியிற் செல்லமாட்டேன் என்பதை வாய்மையான வாக்காக நம்பலாம்'' என்று சொன்னான்.

கனக:—"அக்கா! அத்தான்மா ரிருவரும் எனக்கு நம்பிக்கையான வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் கேட்காமலே எனக்களித்தார்கள். இதற்குப் பிரதி பலனக நான் ஒன்றைக் கொடுக்க உத்தேசித்திருக்கிறேன். உன் அபிப்பிராயமென்ன?'' என்று கேட்டாள்.

இரஞ்:—"மிகவும் நன்மையானதே. உன் இஷ்டம்போற் செய்யலாம். எனக்குச் சம்மதந்தான்'' என்றாள்.

கனக:—"இரதிதேவி! உனக்கேதேனும் ஆக்ஷேபணையுண்டோ?'' என்று கேட்டாள்.

இரதி:—"ஒன்றுமில்லை. எனக்குஞ் சம்மதந்தான்'' என்றாள்.

உடனே கனகவல்லி, இரஞ்சிதத்தையும் இரதிதேவியையும் தன் இருகரங்களாலும் பிடித்து அழைத்துக்கொண்டு சென்று இரத்தினத்திடம் இரஞ்சிதத்தையும் மதனகோபனிடம் இரதிதேவியையும் ஒப்புவித்துவிட்டு இரத்தினத்தைப் பார்த்து, "அத்தான்! தாங்கள் ஈரேழுலகங்களிற் சுற்றியலைந்தாலும் என்தமக்கையைப் போன்ற ஒரு பெண் தங்களுக்குக் கிடைப்பது துர்லபமாகும். அவர்கள் தமக்காக வேண்டித் தம் உடல் பொருளாவி மூன்றையும் மகிழ்வுடன் தத்தஞ் செய்திருக்கிறார்கள். அவர்கள் தமக்காக அனுபவித்த கஷ்டத்தையும், தம் நலத்திற்குப் பாடுபட்டவிதத்தையும், தம்மீது கொண்டிருக்கும் அன்பின் பெருக்கையும் என்னால் எடுத்துக் கூறமுடியவில்லை. நான் தங்களுக்குப் புத்திமதி சொல்வதாக நினைத்துவிடக் கூடாது. இனிமேலாகிலும், 'சேரிடமறிந்து சேர்'' என்னும் மூதுரையை மனதில் வைத்து நடந்து வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்று சொல்லிவிட்டு மதனகோபனைப் பார்த்து, "அத்தான்! தங்களுக்கு என் தங்கையைக் கொடுத்திருக்கிறேன். உலக அனுபவ மென்பதைத் தினைத்துணையுங் கண்டறியாச் சிறுமி. தாங்கள் இனிமேற் கெட்ட விஷயங்களைக் கனவிலும் நினைக்கமாட்டீர் என்னும் மனவுறுதியால் என் தங்கையைத் தங்களுக்குத் தந்திருக்கிறேன். என் தமக்கையாருக்குத் தாங்கள் செய்துள்ள எண்ணிறந்த தீங்குகளை எள்ளளவாக வெண்ணி அவர் தம் மனதினின்றும் நீக்கிவிட்டது மன்றித் தமக்கு இன்னும் நலத்தைச் செய்யக் காத்திருக்கிறார்கள். சென்ற காலத்தில் நிகழ்ந்த விஷயங்களை மனதிற் கொள்ளாமலும், துர்ச்சனர் சகவாசத்தை மேற் கொள்ளாமலும், இரதிதேவியுடன் இல்லற தர்மத்தை இனிதுபெற நடத்தி இன்புற்று வாழ்வீர் என்று நம்புகிறேன். சம்பந்தா சம்

பந்தமில்லாத இவள் நமக்கு இரதிதேவியைக் கொடுப்பதாவது; இவைகளை யெல்லாஞ் சொல்வதாவது என்று எண்ணிவிடக் கூடாது. என் தமக்கையாரின் மனதிலுள்ளதை நான் மெய்யாலும் வாக்காலுஞ் செய்தேனே யன்றிச் சுயமாக நான் எதையுஞ் செய்யவாவது சொல்லவாவது இல்லை" என்றுரைத்தாள்.

அச்சமயம் அங்குவந்த வீரபத்ர பிள்ளையும் சோமசுந்தரம் பிள்ளையும், இரத்தினமும் இரஞ்சிதமும் ஒருபுறத்திலும், மதனகோபனும் இரதிதேவியும் மற்றொருபுறத்திலும் இடையில் கனகவல்லியும் நின்றிருந்ததைக் காண ஆச்சரியமும் ஆனந்தமுங் கொண்டனர். அவர்கள் வந்ததும் கனகவல்லி சோமசுந்தரம் பிள்ளைக்கு நமஸ்காரஞ் செய்து, "அய்யா! தம்முடைய சம்மதத்தை யெதிர்பாராமல் நம் இரதிதேவியைப்பெரிய அத்தானுக்கு விவாகஞ் செய்து கொடுப்பதாக வாக்களித்து விட்டேன். அக்குற்றத்திற்காக என்னை மன்னிப்பதுடன் என் செய்கையையும் ஆமோதிக்கும்படி வேண்டுகிறேன்" என்று சொன்னாள்

சோமசுந்:—"கனகவல்லி! உன் செய்கை குற்றமான தன்றாதலின் மன்னிப்புக் கேட்க வேண்டிய நிமித்தமில்லை. தவிர, இரஞ்சிதத்தின் சம்மதத்தைப் பெற்றுத்தான் இக்காரியத்தை நீ செய்திருக்க வேண்டுமாதலின் நான் இதைச் சந்தோஷத்துடன் அங்கீகரிக்கிறேன்" என்றான்.

கனகவல்லி:—(வீரபத்ர பிள்ளையை நமஸ்கரித்து) "மாமா! தங்களுடைய உத்தரவைப் பெறாமல் தங்கள் குமாரருக்கு ஒரு பெண்ணைத் தேடி வைத்திருக்கிறேன். அதை அங்கீகரிக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்" என்றாள்.

வீரபத்ர:—"கனகவல்லி! உன்சீரிய குணத்தை மிகவும் புகழ்ந்து கூறக் கூடியவனாக விருக்கிறேன். எனக்கு மிகவும் சந்தோஷமாயிற்று. இரஞ்சிதம்! இஃதென்ன மௌனம்! உன் தங்கையைத் தூண்டி விட்டுவிட்டு நீ சும்மாவிருப்பதின் காரணம் விளங்கவில்லையே" என்றான்.

இரஞ்சி:—"மாமா! நான் ஒருவரையுந் தூண்டி விடவில்லை. என் மனதிலிருந்ததை என் அருமைத் தங்கை யுணர்ந்துகொண்டு எனக்குந் தெரிவிக்காமல், ஆனால் என் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டு செய்தாள். அக்காரியம் எங்களுக்கு மாத்திரமன்றி தங்களுக்கும் அண்ணாவுக்கும் சந்தோஷத்தை யுண்டாக்கக் கூடியதாக விருக்கிறது. உங்களுக்கும் இத்தகைய உத்தேச மிருந்திருக்குமென்று நினைக்கிறேன். (கனகவல்லியைத் தழுவிக் கட்டிக்கொண்டு) "கனகவல்லி! உன்னை என் சகோதரி யென்றழைக்கக் கூடிய பாக்கியத்தைப் பெற்றிருக்கிறதைப் பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன். எனக்கும் மற்றவர்களுக்கும் பிரதிபலனைக் கருதாமற் செய்த பேருபகாரங்களையும் நன்மைகளையும் எடுத்துக் கூறிப் புகழ்ந்து பேசுவது முகஸ்துதியாகத் தோன்றுமாதலின், அவ்வாறு செய்ய எனக்கு விருப்பமில்லை. உன் மனோபீஷ்டங்களெல்லாம் நிறைவேறுமாறு ஸ்ரீமீனாம்பிகையைச் சதா போற்றித் துதிப்பேனாக" என்று சொன்னாள்.

அப்பொழுது அங்குவந்த சுந்தரம்பிள்ளை "ஏது இரகசியமாக விவாகமுங்கூட முடிந்து விட்டாற் போலிருக்கிறது" என்று சொல்லி உட்கார, வீரபத்ரபிள்ளை நடந்த விஷயங்களைக் கூறினான்.

சுந்தரம்பிள்ளை:—"ஆச்சரியமாகத்தா னிருக்கிறது. இரஞ்சிதம் தனக்கென்று ஒரு நாயகனைத் தேடிக்கொண்டாள். இரதிதேவிக்கும் ஒரு மணவாளனைத் தேடிக் கொடுத்துவிட்டாள். ஆனால் அவள் தன் அருமைத் தங்கை கனகவல்லியை மறந்துவிட்டதுதான் விந்தையாக விருக்கிறது. எனக்கொரு மகனிருந்தாலாவது விவாகஞ் செய்துவைத்துக் கொள்வேன்" என்று சொன்னான்.

இரஞ்சிதம்:—"தங்களுக்கு மகன் பிறக்கும் பொழுது சொல்லியனுப்பினால் அப்பொழுது என் தங்கையைச் சந்தோஷமாகத் தங்கள் புத்திரனுக்குக் கொடுக்கிறேன்" என்றாள்.

கனகவல்லி:—"அக்கா! மாமாவுடைய எண்ணம் அதுவன்று" என,

இரஞ்சிதம்:—"ஓகோ! அப்படியா! ஒப்புக்கு மகனுக்கென்று கலியாணஞ் செய்துவைத்துக்கொள்ள விருப்பமோ! மாமா! அத்தகைய எண்ணந் தமக்கிருந்தால் வேறுபக்கம் பெண் பார்க்கவேண்டியதுதான்" என்றாள்.

சுந்தரம்பிள்ளை:—"அடடா! இதென்ன விபரீதம்! இவ்வாறு பொறுத்தமுள்ள அக்காள் தங்கையை நான் எங்குங் கண்டதில்லை. இவர்களுடன் வாய் கொடுத்தால் தப்பிப் பிழைப்பது கஷ்டம். (வீரபத்ர பிள்ளையைப் பார்த்து) அண்ணா! அடுத்த மாதத்தில் நல்ல முகூர்த்தம்

பார்த்து விவாகங்களை நடத்திவிடலாமே'' என்ருன்.

வீரபத்ரபிள்ளை:—''ஆம். அவ்விதந்தான் உத்தேசித்திருக்கிறேன்,'' என்று சொன்னன்.

பிறகு எல்லோருமெழுந்து காலைப் போசனஞ் செய்யச் சென்ருர்கள்.

சுமார் ஒரு வாரங் கடந்தபின் ஒருநாள் மாலை இரஞ்சிதமும் கனகவல்லியும் மேன்மாடியி லுட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்த பொழுது அங்குவந்த அம்புஜம், இரஞ்சிதத்தின் இருகரங்களையும் பிடித்துக்கொண்டு, ''அம்மா! நான் தங்களுக்குச் செய்த கெடுதலை மறந்துவிடுவதுடன் என்னை மன்னிக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகிறேன். பிறருடைய தூண்டுதலால் அவ்விதஞ் செய்ய நேர்ந்தது. தவிர, எனக்குத் தாங்கள் ஒரு நன்மையுஞ் செய்திருக்கிறீர்கள். மதனகோப பிள்ளையால் நானும் என்போன்ற தாசிகளும் அனுபவித்த கஷ்டம் இத்தகையதென்று சொல்லமுடியாது. தங்களால் அத்துன்பம் நீங்கிற்றென்று கேள்விப்பட்டேன். அதற்காகத் தங்களுக்கு நான் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று சொன்னுள்.

இரஞ்சிதம்:—'' அம்புஜம்! உன் வார்த்தைகளைக் கேட்க மிகவும் ஆச்சரியப்படுகிறேன். நீயோ தாசி. ஒருவருக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய அவசியமில்லை. உன்வரை உன் இஷ்டம் போல் நடக்க உனக்குச் சர்வ சுதந்தரமுண்டு. அவ்விதமிருக்கப் பிறருடைய தூண்டுதலின் மேல் எனக்குக் கெடுதல் செய்ததாகச் சொல்லுகிருய். மேலும் மதனகோப பிள்ளையால் நீ மிகவும் துன்பத்தை யனுபவித்ததாகக் கூறுகிருய். இது விந்தையினும் விந்தையே. அம்புஜம்! உலகத்தில் தாசிகள் என்ற ஒரு வகுப்பினரிருப்பது கடவுளுடைய அமைப்பு. எனினும், இத்தாசிகள் தங்கள் தொழிலைத் தங்கள் ஜீவனோபாயத்திற்கு மாத்திரம் உபயோகிக்காமல் பாப மார்க்கத்திலும் பயன்படுமாறு செய்கின்றனர். உலகானுபவமில்லா வாலிபர்கள் உங்களிடமகப்பட்டால் அவர்களை யெவ்வளவு சீக்கிரத்தில் கெடுக்கமுடியுமோ அவ்வளவு சிக்கிரத்தில் அழித்துவிடுகிறீர்கள். பாலுண்ட வீட்டிற்கே பாதகத்தைத் தேடுகிறீர்கள். வரும் வாலிபர்களின் உப்பைத் தின்று அவர்களுக்கே தீங்கு நினைக்கிறீர்கள். பல பெயர்களைக் கெடுத்து அவர்களிடமிருந்து அபகரித்த திரண்ட ஆஸ்தியை எத்தாசியேனும் நெடுநாட்களுக்கு வைத்தாளுகிருளோ. இல்லை. அநேகமாக அவள் காலத்திலேயே அச்சொத்து அழிந்து விடுகிறது. அநேக ஆடவர்களைத் தங்கள் பத்நிமார்களிடமிருந்து பிரிக்கிறீர்கள். தாயிடமிருந்து பிள்ளைகளைப் பிரிக்கிறீர்கள். தகப்பனுக்கும் மகனுக்கும் விரோதத்தை உண்டுபண்ணுகிறீர்கள். அநேக குடும்பங்களை அழிவுறச் செய்கிறீர்கள். இத்துடன் திருப்தியடையாமல் உங்களுக்குச் சம்பந்தப்படாத மற்றவர் கெட்டுப்போக உதவியாக நிற்கிறீர்கள். அம்மம்மா! உங்களுடைய தீச்செய்கைகளின் தன்மையை நினைக்கும்பொழுதே சற்புத்திரர்கள் மனம் நடுக்குறும் இத்தகைய பாப காரியத்தைச் செய்யும் உங்களுக் குண்டாகக்கூடிய நன்மையென்ன? ஒன்றையுங் காணேம். சர்வேஸ்வரனின் கட்டளைக்கு மாருக நடந்தும், அவரால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள மாதர் மாந்தர்க்குத் தீங்கை யுண்டாக்கியும் அவருடைய கோபத்திற்குப் பாத்திரர்களாகித் தீரா நரகத்திற்கு வழி தேடிக் கொள்ளுகிறீர்கள். பாபமான பெண் ஜென்மமெடுத்தும் அதைப் போக்கிக்கொள்ள வழியைத் தேடாமல் பெருக்குவதற்கான மார்க்கத்தைத் தேடுகிறீர்கள். சர்வசக்தி வாய்ந்துள மீனம்பிகைதான் உங்களைத் தண்டிக்கவேண்டும். அம்புஜம்! நீ பிறருடைய கட்டளையால் ஏதோ செய்ததாகச் சொல்லுகிருய். அது முற்றும் பொருந்தாது. உன்னல் அதைத் தடுத்திருக்கக் கூடும். மற்றவர்களுக்கு நீ நன்மை செய்திருக்கவும் கூடும். இருப்பினும் உன்மீது எனக்கு யாதொருவிதமான மனவருத்தமுமில்லை. நீ இங்குவந்ததால் இயற்கையில் உன்னைச் சற்குணவதியென நினைத்து இவைகளை யெல்லாஞ் சொன்னேன்'' எனவுரைத்தாள்.

அம்புஜம்:—''அம்மா! தாங்கள் கூறின ஒவ்வொரு வார்த்தையும் கூரிய ஈட்டிபோல் என்னைத் தைக்கிறது. என்னுடைய இழிவான நிலைமை இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது. கிடைத்தற்கரிய மானிடப் பிறவி பெடுத்தும் அதனுற் பலனடையாமற் கெட்டழிந்தேன். உலகத்தாற்கு நன்மை செய்யாவிடினும் தீமையையேனுஞ் செய்யாமலிருக்கலாம். இனிமேலாகிலும் நன்மார்க்கத்தில் நடக்க ஸ்ரீமீனம்பிகை எனக்கு நற்பத்தி புகட்டுவாராக. அம்மா!

தங்களுக்கு என் மனமுவந்த வந்தனம். நான் சென்றுவருகிறேன்'' என்று சொல்லி நீங்கினுள்.

அம்புஜம் சென்ற கொஞ்ச நேரத்திற்குப்பின் அங்குவந்த மங்கம்மாளைக் கண்ணுற்ற இரஞ்சிதம் கரைகாணுக் களிப்பெய்தினவளாய் எழுந்து எதிர் சென்று அவளைத் தன் இருகரங்களாலும் இருகத் தழுவிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்து "அம்மா! நான் தங்களை உடனே அழைத்துவரும்படி ஆள் அனுப்பினேனே. கனகவல்லி! இவ்வம்மைதான் என் கற்பைக் காத்து ரக்ஷித்த உத்தமி. உங்களெல்லோரையுங் கண்டானந்திக்க அருள் புரிந்தாய்'' என்றுசொல்லி, அம்மா! இவ்வாசனத்தி லுட்காருங்கள்'' எனவுரைத்து உபசரித்தாள்.

மங்கம்மாள்:—"அம்மா! இரஞ்சிதம்! நான் உனக்குச் செய்த அற்ப உதவியை பெரிதாக்கிப் பாத்திரமாக என்னைப் புகழ்ந்து கூறுகிருய். நானன்றி உனக்கு எந்தப் பெண்ணும் அச்சமயம் அத்தகைய உதவி புரிந்திருப்பாள். எல்லாம் ஸ்ரீமீனும்பிகையின் திருவருள்'' என்றாள்.

இரஞ்சிதம்:—"எந்தப் பெண்ணும் அவ்வாறு செய்திருப்பாளென்பது பொருந்தாது. தாங்கள் எனக்குச் செய்த உதவி தங்களுக்கு அற்பமாகத் தான் தோன்றும். தாங்கள் அச்சமயம் இல்லாதிருந்திருப்பின் என் உயிருக்குக் கெடுதலுண்டாகியிருக்கும். நான் மரித்ததை யுணர்ந்த என் அத்தான் பொறுக்கலாற்ருமல் உயிர் துறந்திருப்பார். நான் சென்றிராவிடில் என் மாமா அவர்கள் இப்புண்ணிய பூமியை மறுபடியும் பாராமல் அந்நிர்மானுஷ்யமான தீவிலேயே யாவருந் திக்கின்றி யிறந்திருப்பார். இத்தகைய பேருதவியை அற்பமானதென்று நான் எவ்வாறு எண்ண முடியும்'' என்று சொல்லித் தான் அவளை விட்டு நீங்கினது முதல் அன்றுவரை நிகழ்ந்தவைகளை விளக்கமாகக் கூறினுள்.

மங்கம்மாள்:—" ஆகவே! நீ வழிதப்பிச் சென்றது முதலில் துன்பத்தைக் கொடுத்ததெனினும், கடைசியில் எதிர்பாராத சந்தோஷத்தை அளித்திருக்கிறது. உன் மாமா எங்கே? உன் அத்தான் எங்கிருக்கிருர்? இந்தப் பெண் யார்?'' என்று கேட்டாள்.

இரஞ்சிதம்:—" அம்மா! இது என் தங்கை கனகவல்லி. மாமாவையும் அத்தானையுங் காண்பிக்கிறேன் வாருங்கள்'' என்று சொல்லி அழைத்துக்கொண்டு சென்ருள்.

வைகாசி மாதம் வளர்பிறையில் சோமவாரத்தன்று சுபலக்கினத்தில் இரத்தினத்திற்கும் இரஞ்சிதத்திற்கும், மதனகோபனுக்கும் இரதிதேவிக்கும் விவாகச் சடங்குகள் மிகவும் சிறப்பாக நடந்தேறின. அன்றைய தினம் ஸ்ரீ மீனும்பிகைக்குத் திருவபிஷேகம் செய்து வைத்தார்கள். ஏழைகளுக்குப் பெரிய விருந்திடப்பட்டது.

மங்கம்மாள் தன் கணவனுடன் இரஞ்சிதத்தின் வீட்டில் வசித்துவந்தாள். கனகவல்லி சிறிது நாட்கள் தன் இஷ்டம்போ லிருந்தபின் இரஞ்சிதத்தின் வேண்டுகோளால் அவளிடத்திலேயே தங்கிப் பகவத்பக்தி பூண்டு வாழ்ந்துவந்தாள். கோபாலபிள்ளையும் மற்றவர்களும், மதனகோபன் நன்மார்க்கத்தில் திரும்பிவிட்டதைக் கண்டு இருந்தவிடந் தெரியாமற் சென்றுவிட்டனர். மதனகோபனும், இரஞ்சிதத்தாற் கொடுக்கப்பட்ட பெருஞ் செல்வத்தை வைத்துக் கொண்டு இரதிதேவியுடன் குடும்பத்தைச் சரிவர நடத்தி மக்கட்பேறும் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்துவந்தான்.

நம் கதாநாயகியான இரஞ்சிதம், தனக்கென்று கடவுளாற் கொடுக்கப்பட்ட திரண்ட ஆஸ்தியை ஏழைகளுக்கு அன்னமிடுவதிலும், ஆங்காங்கு தர்ம சத்திரங்களும் பாடசாலைகளும் கட்டிவைப்பதிலும் உபயோகித்து வந்து, அவள் தன் அன்பிற்குரிய மணாளனை இரத்தினத்துடன் இல்லற தர்மத்தை இனிதுற நடத்தி, ஸ்ரீ மீனும்பிகையின் அருளால் இரண்டு பெண்குழந்தைகளையும் மூன்று ஆண்மக்களையும் பெற்று இன்பமுடன் நெடுநாட்கள் வாழ்ந்திருந்தாள்.

சுபம்.

---

ஆசாரக்கோவை.—தமிழ் நூல். சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்று. ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். செய்யுள் தொகை 101. இதில் கூறப்படுள்ள ஆசாரங்கள், மனு பராசர ஸ்மிருதிகளைப் பின் பற்றுமல் சுக்ர ஸ்மிருதியை அனுசரித்திருக்கின்றன. பாண்டவர்களுக்குத் தௌம்யர் உபயதேசித்த விஷயங்களும் இதில் உள்ளன. சிற்சில ஆசாரங்கள் இப்போது வழக்கத்தில் இல்லை. இதற்குப் பழைய உரை ஒன்றுண்டு.

# நமது சிறு கதை.

## OUR SHORT STORY

## 'அப்பொழுதே சொன்னேனே'

### அல்லது நவீன நாகரிகம்.

(ஸ்ரீமான் C. N G. சர்மா அவர்கள்)

கலெக்டர் சாதாரணமாக நம் வீட்டிற்கு வருவதென்றால் நாம் என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும்? ஏண்டி! நான் ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னாடியே நம்ப பயல் ஜாதகத்தைப் பார்த்தேன். கிட்டுவைப்போல அதிருஷ்டக்காரன் யாரிருக்கப் போகிறார்கள் சொல்லு. எதிலும் அவன்தான் 'பர்ஸ்ட் ஆம்' என்றார் விசுவநாத தீக்ஷதர் தன் மனைவி தைலம்மாளிடம். தைலம்மாளிற்கு வெகு நாளாகத் தன் ஏக புத்திரன் கிட்டுவிற்கு உயர்ந்த இடத்தில் விவாகம் செய்துவைக்க வேண்டுமென்கிற ஆசை மாத்திரம் உண்டு. இப்பொழுதோ வலுவில் ஒரு பெரிய சீமான் தன் பெண்ணைக் கிட்டுவிற்கு கல்யாணஞ் செய்து கொடுக்கிறேனென்று கேட்கிறார். ஆனாலும் தைலம்மாளுக்கு நன்றாகச் சீர் வரவேண்டு மென்றும், எதிர் ஜாமீன் வாங்க வேண்டுமென்றும் ஆசை. யாராயிருந்தாலும் தன் குமாரன் படிப்பையாவது உத்தேசித்து ஸ்வல்பமாய் ஐயாயிரம் ரூபாயாவது ரொக்கமாவது கொடுத்தால் போதுமென்று அவளுத்தேசம். தன் நாயகன், சொல்வதைக் கேட்டவுடன் அவள், 'இந்தாங்கோ! இதெல்லாம் என்னத்துக்கு.' என்னிக்கோ கலேட்டர் வேலை பண்ணினா இன்னைக்கு நமக்கென்னவாச்சு. நம் பயலுக்கு என்ன எதிர் ஜாமீன் கொடுப்பார்? என்ன சீர் செய்வா என்று கேட்கவே மாட்டானென்கிறீர். பொண்ணையும் நான் பார்த்ததுமில்லை. அடக்கம் ஒடுக்கமாக குடித்தனம் சீருஞ் செட்டுமா செய்யுமோ என்னமோ? அவர் நம்பாத்துக்கு வரும் போதெல்லாம் நீங்க பெரிய பஞ்சாதியாச் சொல்லி அக்ஷதையைக் கொடுத்து விடுகிறீர் அவரும் வாங்கிண்டு போய்விடுகிறார். வேறே ஒரு கல்யாணப் பேச்சையும் காணோமே? எதிராளாத்துக் குப்பு பாட்டி பேரனுக்குப் பதினாயிரம் ரூபாய் எதிர் ஜாமீனாம். அதைத் தவிர பாத்திரம் பண்டம் வகையறா வேறே வாங்கிக் கொடுக்கப் போறாளாம். அந்தப் பயலுக்கு டாம்ணா டோம் என்கக்கூடத் தெரியாது. நம்ப கிட்டுவினுடைய கால் தூசி, 'விலை பொறமாட்டான். கலெக்டராச்சே. ஏன் நிறைய எதிர் ஜாமீன் குடுக்கக்கூடாது. நமக்கோ கல்லிலே புல் முளைச்சாப்போலே ஒரே பிள்ளை. மூக்கும் முழியுமா நம்ப பயல் எப்படி ராஜா மாதிரி இருக்கான் பாருங்கோ' என்றாள்.

இதற்குள் வாசலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. சுமார் இருபது வயதுள்ள ஒரு வாலிபன் வண்டியிலிருந்து கீழிறங்கினான். தலை மயிரை 'கிராப்' ஆக வெட்டிக்கொண்டும், நாகரிகமான மேனாட்டுடை தரித்தும், கையில் ஒரு வாக்கிங் ஸ்டிக்கை வீசிக்கொண்டும், வண்டிக்காரன் பெருத்த ஓர் 'சூட்கேஸை'த் தூக்கிக்கொண்டு பின் தொடர, காலில் பூட்ஸுடன் வீட்டின் கூடத்துள் நுழைந்தான். அதே கூடத்தில் தான் பூஜைக்காக சுவாமிகளெல்லாம் வைக்கப்பட்டு அம்மூர்த்திகளின் முன்பு தீக்ஷதர் சிவபிரான் போல் ஆசனத்திலமர்ந்திருந்தனர். உடனே தன் தகப்பனாரைப் பார்த்து அந்த சிறுவன், 'அப்பா! இதோ இந்த வண்டிக்காரனுக்கு அரை ரூபாய் கொடுத்து அனுப்பு. நான் 'டிரஸ்'ஸைக் கழட்டி விட்டு வருகிறேன். அம்மா! சுருக்க காபி போடு. தலையை வலிக்கிறது' என்று சொல்லி ஒரு அறைக்குள் புகுந்தான்.

தீக்ஷதர்:— அரை ரூபாயா' டேபலே. வண்டிக்காரா? இந்த நாலணா வாங்கிண்டுபோ' என்று விபூதி சம்புடத்திலிருந்து நாலணாவை விட்டெறிந்தார். 'நன்னா அரை ரூபாய் கேட்டே. குழந்தை ஒன்னுந் தெரியாது. அவனை நன்னா ஏமாத்தப் பாக்கிறாயே' என்றாள் தைலம்மாள். வண்டிக்காரன், 'என்ன சாமி! பேசினபடி கொடுங்கோ சாமி! எஜமான் எட்டணா பேசினாங்க; நீங்க என்ன உங்க வீட்டு வேலைக்காரன் மாதிரி நாலணா எடுத்து எறியறீங்கோ. நீங்களே வைச்சுக்கொங்கோ சாமி' என்று நாலணா எடுத்துக்கொண்டு தீக்ஷதரருகில் நெருங்கினான். தீக்ஷதர், 'டே! அதிகப் பிரசங்கி, என்னடா ரேழியிலே நிக்காமே கிட்டவரே. மிலேச்சப் பயலே! இந்த ரயிலடியிலே யிருந்து இங்கே நான் நடந்து வந்துவிடுவேன். ஏதோ குழந்தை ஆயாசமாயிருக்கு என்று வண்டியில் வந்தால் என்ன அன்னியாயமாய் கேட்கிறாய். ஜரிக்குமா உனக்கு' என்று இறைந்தார். கிருஷ்ணசாமி இந்த சமயம் வெளியில் வந்து, 'பெட்டியை வைத்து

விட்டு, பேசினபடி எட்டணு வாங்கிக்கொண்டு நடா. என்ன அப்பா ! நம்ப சமாசாரம் வண்டிக் காரனுக்குக் கூடத் தெரியவேண்டுமா? நான் எட்டணுவென்று சொல்லிவிட்டேன். கொடுத்து விடுங்கள். ஏதோ ஏழை' என்று மத்தியஸ்தம் பண்ண, வண்டிக்காரன், 'ஆமாம் எஜமான், வப சானு ஆசை ஜாஸ்தி எஜமான்', என்று எட்டணு வாங்கிக்கொண்டு முழித்தமுகம் நல்லமுக மென்று எடுத்தானோட்டம். தைலம்மாள் முணு முணுத்துக் கொண்டேயிருந்தாள். கிருஷ்ண சுவாமியும் முகங்கழுவி, தலையை நன்ருக வாரிக் கொண்டு, காபி சாப்பிட உட்கார்ந்தான். அப் பொழுது தீக்ஷதர், 'கிட்டு! உன் பரிகைஷயெல் லாம் எப்படி? உனக்கு கலெக்டர் சிவராமய்யர் தன் பெண்ணைக் கொடுக்கவேண்டு மென்று நாலுநாளாயலைகிருர். நல்ல சம்பந்தம். நேற்று நிச்சயம் பண்ணிவிட்டேன். என்ன சொல்லு கிருய். கிட்டு, 'அதென்ன நீ என்னைக் கேட் காமல் சம்பந்தம் செய்து விட்டே. நான் பெண் ணைப்பார்க்க வேண்டாமா? என்ன மதியீனம். எந்த சனியையாவது கட்டிக் கொள்ளுவதா ?

தீக்ஷதர் :—'பேஷா பொண்ணைப் போய்ப் பாரேன். நல்ல அழகு. ரொம்ப புத்திசாலி. உன க்குச் சரியான பெண்ணுகத்தான் பார்த்திருக்கி றேன். அம்மாவை அனுப்பினுல் பார்த்துக் கொண்டு வந்து விடுகிருள் !

கிட்டு:—'என்ன சொன்னே ! இன்ன உங்க ளுக்கு ஒன்றும் தெரியவில்லை. எனக்காக நீ கல் யாணம் நிச்சயம் பண்ணுகிறதே தப்பு அதோடு அம்மா பார்த்தாலெப்படி எனக்குச் சம்மதமா கும்.' அம்மாவிற்கா கல்யாணம். நானே போய்ப் பார்க்கிறேன்' என்று சொல்லி விட்டு எழுந்து மேஜை மேல் கண்ணுடியைச் சாத்தி, கத்தியைத் தீட்டி, சோப்பை முகத்திலப்பி, முகக்ஷவ ரம் செய்துகொள்ள ஆரம்பித்தான். தீக்ஷதர் தைலம்மாளைப் பார்த்தார். தைலம்மாள் தீக்ஷ தரைப் பார்த்தாள். அழமாட்டாக்குறையாக இருவரும் பையன் வாய்க்குப் பயந்து தாங்கள் வாய் வாளாமே இருந்தனர். இதன் மத்தியில் 'கிட்டு' ஒரு அணுவை எடுத்து தீக்ஷதரிடம் எறிந்து, 'அப்பா ! நல்ல தழையாக ஒரு புகை யிலை வாங்கிவாருங்கள்' என்ருன். என்ன செய் வார் கிழவர். பிரம்மபத்திரமாயினும் தானே போய் வாங்கிக்கொண்டு கையால் தொடமுடி யாது கடுதாசியில் சுருட்டிக் கொண்டு வந்து தன் குமாரன் கையில் கொடுத்தார். வண்டிவந்து தீக்ஷதரும் கிட்டுவுமாக, சிவராமய்யர் வீடு போய்ச்சேர்ந்தார்கள். அவர் பெண் பத்மாவதியும் கிட்டுவை மணக்க ஒத்துக்கொண்டாள். கிட்டுவு க்கும் இஷ்டந்தான். ஆனுல் தன்னுடைய படிப் பிற்குத் தகுந்த படிப்பு அந்தப் பெண்ணிற்கு இல்லையாதலால் சிவராமய்யரிடம் தான் அவர் பெண்ணை மணந்து, சென்னையில் தன்னுடன் உயர்தரக் கலாசாலையில் படிக்கவைக்கவேண்டு மென்று உத்தேசித்து அவர் உத்திரவையும் பெற்று தகப்பனும் பிள்ளையும் வீடுவந்து சேர்ந் தார்கள். ரயிலில் வந்த அலுப்பினுல் கிருஷ்ண சாமி படுத்துத் தூங்கிவிட்டான். தைலம்மாள், 'ஏன்னு எப்படி இருக்கா உங்கள் நாட்டுப்பெண். அந்தப் பெண் ருதுவாய் விட்டது என்றும் நாம் கிட்டுவோடு தானுக சங்கோச மில்லாமல் பேசிக் கொண்டு விட்டதாகவும் இதுக்குள்ளே ஊரெல் லாம் பரவிவிட்டதே. என்ன கிராப்பு, என்ன டிரஸ், நம்ப கிட்டுவைப் பார்த்தா கிறிஸ்துவன் மாதிரி இருக்கு.'

தீக்ஷதர் :— எனக்குந்தான் பிடிக்கவில்லை. ஆனுல் என்ன செய்யறது. எல்லாம் காலத்திற் குத் தகுந்த மாதிரிதானே இருக்கவேண்டும். நம் ப பையன் அதெல்லாம் புத்திசாலி. நீ ஒன்றும் கெடுதலாக நினைக்காதே. 'என்னைப்போல மடி சஞ்சியாயிருந்தால் யார் மதிப்பார்கள். கலெக்ட ராத்து மாப்பிள்ளையோ இல்லியோ' என்ருர்

தைலம்:—சரி, கல்யாணத்திற்கு என்ன எதிர் ஜாமீன் கொடுக்க ஒத்துக்கொண்டார்கள். பரம் பரையாக யக்னும் பண்ணுகிற தீக்ஷதர் குடும் பமே கெட்டுப்போய் விட்டது என்று ஊரெல் லாம் அலருகிறதே. கலெக்டராத்திலே அவர் மூத்தப் பெண் விதந்துவாம்; மயிரெடுக்க வில்லை யாம்.

தீக்ஷதர்:—பைத்தியமே நம்ப பையன் கல்லி யாணம் முடிந்தவுடன் நாம்பெண்ணை அழைத்து வந்து விட்டால் போகிறது. நம்ப பையன் புத்தி சாலி, எல்லாவிஷயமும் அவனே நேரில் பேசி முடித்துக் கொள்வான். எதிர் ஜாமீன்......இந்த சந்தர்ப்பத்தில் கிட்டுவும் எழுந்து வந்தான். வெற் றிலையை வாய் நிரம்ப போட்டு புகையிலையுடன் அடக்கிக்கொண்டு'எதிராவது ஜாமீனுவது; சுத்த நான்ஸன்ஸ்; அதையெல்லாம் கேட்டால் ரொம்ப அகௌரவம் நானென்ன கைம்பெண்ணு, சம்பா

திக்கமாட்டேனு, என்னை அவர்கள் விலைகுடுத்து வாங்குவதற்கு நானென்ன மாடா என்ன?

தைலம்:–இல்லேடாயப்பா ஏதாவது சீர் செய்யப் போகிருர்களா. கல்யாணம் எந்தூரிலே நடத்தப் போகிருர்கள்? என்ன சொன்னுர்? என்ருள்.

கிட்டு:–அதெல்லாம் போய் எந்தக்காலமாச்சு; நல்ல நாளாகப் பார்த்து நான் அந்தபத்மாவதியை அழைத்துக்கொண்டு திருமங்கல்யதாரணம் செய்து பட்டணம் அழைத்துக்கொண்டு போகப் போகிறேன். பி. எல். ரிசல்டு வந்து விடும். பிறகு அவளை அங்கு படிக்கவைத்து நானும் பிராக்டீசுக்கு ஆரம்பிக்க வேண்டியதுதான்.

தைலம்:–நலங்குவேண்டாமா! ஊஞ்சல்வேண்டாமா! பச்சை வழிக்க வேண்டாமா! இதென்னடா வழக்கம்! பெண்ணைக்கூட நான் பார்க்கவில்லை. எல்லாம் நீங்கள் ஏற்பாடு செய்யறதா? நன்னு இருக்கு.

கிட்டு:—ஆரம்பித்து விட்டாயா. இப்படியெல்லாம் சொன்னல் தானே, நானிந்த எழவு ஊருக்கு வரதில்லை. அப்பா, இதென்ன அம்மாளுக்கு கொஞ்சமும் மூளையில்லை. இந்த ஊரில் எனக்குப் போதே போகவில்லை. சீக்கிரம் ஒரு முகூர்த்தம் வையுங்கள். இன்று தேதி 4. 6-ந் தேதி பட்டணம் போகவேண்டும் முக்கியமான எங்கேஜ்மெண்ட். எனக்கு எப்படியாவது ஒரு இரண்டாயிர ரூபாய் தயார் செய்து கொடுங்கள். டிபன் ஏதாவது உண்டாம்மா? இல்லாவிட்டால் பத்மா, ‘டிபன்’ பண்ணிவைக்கிறேனென்று சொன்னுள். “அங்கே போறேன்” என்று சொல்லி ‘டிரஸ்’ செய்து கொண்டு புறப்பட்டான். தீக்ஷதருக்கு அடிவயிற்றில் நெருப்புத்தான். அவருடைய பையன் சொன்னபடியே செய்வானென்றும் அவருக்குத் தெரியும். மனதிலாழ்ந்த கவலையுடன் உடனே ரூபாய் தயார் செய்ய ஆரம்பித்துவிட்டார். ஊரெல்லாம் தன் பையன் மிகவும் கெட்டுவிட்டானென்றும், இவருக்கு அவனைப் போன்ற குழந்தை பிறந்திருக்கவேண்டா மென்றும் சொல்லிக்கொள்வதைக் கண்டு, ‘பட்டணமாவது போகட்டும். எங்காவது பிழைத்திருந்தால் போதும்’ என நினைத்தார். அவ்விதமே அவர் வெகு சீக்கிரமாக பணத்திற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்து ஊர் வாயை யடக்குவதற்காக தனயன் சொல்படியே அவ்வூரிற்கடுத்த க்ஷேத்திரத்தில் ஒரு நாள் கல்யாணமாக முடித்து தன் குமாரனையும் மணமகளையும், ரூபாயிரண்டாயிரத்துடன் பட்டணம் அனுப்பிவிட்டார்.

அவர் மனைவி தைலம்மாளுக்கு அன்று முதல் மன ஏக்கம் பிடித்துவிட்டது. ஊராரெல்லாரும் தன்னை இகழ்வதுடன் பெரிய இடத்து சம்பந்தம் ரொம்பவும் தன்னை ஏழ்மையுடன் அகௌரவமும் படுத்திவிட்டதையும், தானும் தன் புருஷனும் வாயையும் வயிற்றையுமடக்கி சேர்த்துவைத்த தனமும் கொஞ்சங் கொஞ்சமாகக் கரைந்து விடுவதையும், கடைசியில் தன் பையனும் தனக்கு அனுசரணையா யில்லாததையும் கண்டு மனத்துயரில் ஆழ்ந்தாள். தீக்ஷதர் தெய்வம் தான் நற்கதிவிட வேண்டுமென்று ஒன்றும் வெளியில் சொல்லமாட்டாது வயது காலத்தில் தத்தளித்து வந்தார்.

வருஷம் மூன்ருய் விட்டது. ‘கிருஷ்ணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.ல்., இடமிருந்து மாதத்திற் கொருமுறை தவருது பணத்திற்காக வரும் தந்தியைத் தவிர வேறு கடிதம் என்பதே கிடையாது. அவர் மனைவி பத்மாவதி அம்மாள் பி. ஏ., கிளாசில் வாசித்து வந்தாள். அழகிற் சிறந்தவளேயாயினும் குணத்திற் சிறந்தவளல்லவாதலால் சதிபதிகளுக்குள் சச்சரவுகள் அடிக்கடி நேர்ந்துகொண்டிருந்தன. இரண்டு பேரும் படித்தவர்களாதலால் ஒவ்வொருவரும் அவரவர் கௌரவத்தையே மேலாகக் கருதிக் காப்பாற்றி வந்தனர். அவரவர்கள் காரியங்களையும் அவரவர்களே தனிமையாக கவனித்து வந்தனர். ஆனல் வாழ்வது ஒரே வீட்டில்தான்.

இந்த சந்தர்ப்பத்தில் தைலம்மாளுக்கு உடம்பு சரியில்லாமற் போகவே, தீக்ஷதர் சிகிச்சைக்கு பட்டணம் போக வெண்ணி மிகவும் துணிவாக வினயத்துடன் தன் பையனுக்கு ஒரு கடிதம் எழுதலாயினர். தைலம்மாளுக்கு பட்டணம் போவதில் மனமேயில்லை. ‘நாதா! என்ன, எல்லாருக்கும் குருவாகிய தாங்கள் பிள்ளையிடம் பயப்படுவது. நானிவ்விடமேயே இருந்து மரித்தாலும் பாதகமில்லை. அந்த அநாசாரம் பிடித்தவனிடம் போவதில் கொஞ்சமும் இஷ்டமில்லை. நானிறந்தால், நீங்களே எனக்குக் கொள்ளி போட்டு விடுங்கள். எனக்கு அந்த பாபி சிரார்த்தங்கூட பண்ணமாட்டான். சாந்தியாச்சா, சீமந்தம் ஆச்சா, குழந்தை பிறந்ததா, ஒன்றும் நமக்குத் தெரியாது. அவன் பெண்டாட்டி பாவாடைகட்டிக்கொண்டு,

உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து வேண்டி யவர்க்கண்ட கண்.

பூட்ஸ் போட்டுக்கொண்டு காலேஜியில் வாசிக்கிறாளாம். குழந்தையைக் கவனிக்க ஒரு பரச்சியை ஆத்தில் வைத்துக் கொண்டிருக்கிறாளாம். இன்னம் என்னென்னவோ கெட்ட பழக்கமெல்லாம் உங்கள் பிள்ளைக்கு படிந்திருக்கிறதென்று சொல்கிறார்கள். பங்குகரையெல்லாம் விற்று அவனுக்குக் கொட்டியாய்விட்டது இனிமேல் நாம் எதற்கு. நம்கையில் பணமுமில்லை இங்கேயே இருப்போம் என்றாள். கிழவருக்கு மாத்திரம் கொஞ்சம் சபலம். கேட்கவில்லை. ஆனால் கிட்டுவும் பதிலெழுதவில்லை. இருந்தாலுமென்?

அடுத்த நாளே இருவரும் பிரயாணமாகி சென்னப்பட்டணத்தினருகாமையிலிருந்த ஒரு பங்களாவிற்கு, மடிசஞ்சியுடனும், சொம்பு, விசிறி, மதுரை சுன்னடிப் புடவையால் கட்டிய மூட்டையுடனும் போய்ச் சேர்ந்தார்கள். கிருஷ்ணஸ்வாமி அய்யருடைய வேலைக்காரன் வரவேற்று, பின்பு ஐயரனுமதியின் பேரில், இவர்களைத் தனியர்க 'அவுட்ஹவுஸில்' ஜாகை ஏற்பாடு செய்தான். அம்மாவைக் கண்ணிலும் காணோம். ஜாடையாக தீக்ஷதர் துப்பு விசாரித்ததில் இவர்கள் வந்தது முதல் புருஷனுக்கும் மனைவிக்கும் ராமராவண யுத்தம்தானென்று தெரியவந்தது. வீட்டில் ஏக சச்சரவு. ஆனால் தீக்ஷதர் ஒன்றையும் காதில் போட்டுக்கொள்ளாதவர்போல தன் கைக்காசைச் செலவு செய்து, புத்திரன் பேரை வைத்து தன் மனைவிக்கு வேண்டிய வைத்தியத்தைச் செய்து வந்தார். ஆனால் ஒரு நாள் அவருக்கும் பொறுக்கவில்லை. 'ஏண்டி! பார்த்தாயா? நம் குழந்தை ரொம்ப கஷ்டப்படுகிறான். பணக்காரருக்குப் பெண் என்றோமே. கொஞ்சமும் புருஷனைக் கவனிக்கக் காணோமே? இதென்ன, காலம் இப்படியாய் விட்டது' என்றார்.

தைலம்மாள்:—'அப்பவே சொன்னேனே!... ரொம்பவும் கஷ்டமாயிருக்கிறது. ஊரிலே இருந்தா...?'

தீக்ஷதர்:—'என்னடி! பரச்சி மாதிரி இருக்கு. அவள் தான் குழந்தையை எடுத்து விடுகிறாள். சமயல் கூட அவதானே! என்ன இப்படி மதிகெட்டுப்போய் விட்டான் கிட்டு.'

தைலம்:—நான்தான் அப்பொழுதே சொன்னேனே. யார் கேட்டா. குழந்தை படிக்கிறான் என்று நினைத்தேன். நன்றாகப் படித்துத் தேறிவிட்டான்.

தீக்ஷதர்:—வக்கீல் பண்ணி வாரிக் கொட்டப் போகிறான் என்று நினைத்தேன். ஒன்றும் வரவில்லை போலிருக்கிறது. விசாரித்ததில் அந்தக் கிராதகன் கலெக்டர் ஒரு செல்லாக்காசுகூட அனுப்புவதே கிடையாதாம். இதுலேயோ 'எஜமானிக்கு ரொம்ப ராங்கியாம். கிட்டுவைப் பார்த்தேன். முகத்தில் ஈ ஆடலை. நமக்கோ வயத்தைப் பிசையறது. வீட்டைத் தவிர வேறொன்றுமில்லை.'

தைலம்:—'ஐயோ! நான் அப்பொழுதே சொன்னேனே. நீங்கள் கேட்கவில்லை. வருஷத்திற்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு என்ன வாசிப்பு. என்ன என்ன துஷ்டச் சிலவுகளோ? இந்த துராசாரம் தான் மிஞ்சித்து. ஜன்மாந்திர பாபம்!

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் கிருஷ்ணசுவாமி ஐயர் உள்ளே ஓடி வந்தார். ஒரு நாளுமில்லாது தன் பெற்றோர்களை வலம் வந்து நமஸ்கரித்தார். 'ஐயோ! என் பெற்றோர்களே! என்னை அப்பொழுதே அடக்காது விட்டு விட்டீர்களே. மோசம் வந்து விட்டதே. என் வாழ் நாள் வீணாளாய் விட்டதே. துரோகி! சண்டாளி! என் மனைவி முந்தா நாள் காலேஜிற்குச் சென்றவள் திரும்பவும் இங்கு வாராது நேற்று மைசூரிலிருந்து தன் தகப்பனைக் கொண்டு இந்த தந்தியை யனுப்பியிருக்காள். உங்களைத் துறந்து அவளை பூஜித்ததற்கு இதுவோ பலன்? அவளை நான் இங்கு சரியாக வைத்துக் காப்பாற்ற வில்லையாம். என் ஹிம்சை பொருக்காது அவள் இனிமேல் தன் தகப்பனருடனேயே என்றும் இருந்துகொண்டு, தன் குழந்தைக்காகவும், தன் அந்தஸ்திற்குத் தகுந்த ஜீவனம்சத் திற்காகவும் என்பேரில் தாவா செய்யப்போகிறாளாம். அம்மா! நான் என்ன செய்வேன்? ஐயோ! பேசமாட்டாயா?' என்று கதறினான். அதற்கு தீக்ஷதர், 'அப்பா! உன்னுடைய பெரிய மனதிற்கு இப்படியெல்லாம் வரவேண்டாம்' என்றார். தைலம்மாளோ திடீரென்று படுக்கைவிட்டெழுந்தாள். அவள் நோயெல்லாம் எங்கேயோ பறந்துவிட்டது. மறுபடியும் என்னதான் சத்துருவாகப் போனாலும் தன் பிள்ளையல்லவா என்று நினைத்ததும் அவனிடம் பிரியம் பெருகிற்று. கிருஷ்ணய்யரருகேசென்று 'கிட்டு! குழந்தாய்! மனம் வருந்தாதே. உன்னைப் பிடித்த சனியன் தொலைந்தது. ஊர் போகலாம் வா' என்று சொல்லி, அவன்

சிரசின்மேல் கைவைத்துத் தடவினுள். இதற்குள் இரண்டு சேவகர்கள் விரைவாக ஓடிவந்து, 'இவர் தானு கிருஷ்ணஸ்வாமி ஐயர் வக்கீல். இவருக்கு அரெஸ்ட் வாரண்டு வந்திருக்கிறது. ஐயாயிரம் ரூபாய் கடனுக்கு என்ன சொல்லுகிறீர்கள்?' என்று பயமுறுத்தினர்கள். ஆஹா! என்னே மகளிரின் தைரியம். குலம் செழிப்பதும், குலமழிவதும் அவர்களாலேயே யன்றோ? தீக்ஷதர் அப்படியே உட்கார்ந்து விட்டார். கிருஷ்ணய்யர் விம்மி அழுதுகொண்டு தவிக்கிருர். தைலம்மாள் தைரியத்துடன் முன்வந்து, 'ஐயா! என் பிள்ளையாகிய இவருடைய சொத்துக்களான, இந்த பங்களா, புஸ்தகங்கள், சகலத்தையும் ஜப்திசெய்து கொள்ளுங்கள். அதில் ஒரு தூசியும் வேண்டாம். அவ்விதம் இவருக்கும் சம்மதம்' என்று சொல்லி, கிருஷ்ணய்யரை விட்டு ஏற்பாட்டை முடித்து, உடனே எல்லோரையும் அழைத்துக்கொண்டு, புறப்பட்டு, அன்றிரவே ரயிலேறி மறுநாள் காலே ஊர்வந்து சேர்ந்துவிட்டாள்.

'சிறுவயதிலேயே என் தந்தை என் துடுக்கடக்கிலரே' என்று இன்றும் கிருஷ்ணய்யர் நினைத்து ஏங்குகிருர். இப்பொழுது அவர் ஒரு சிறிய ஊரில் வக்கீலுத்தியோகம் செய்து கௌரவமாகப் பிழைக்கிருர். ரொம்பவும் நல்லவரென்றும், குணஞ்ஞரென்றும் பலரும் புகழ்கிருர்களாம். பத்மாவும் அவர் பேரில் ஜீவனும்சப் பிராது தொடர்ந்ததாகத் தெரியவில்லை. தைலம்மாளும் தீக்ஷதரும் பார்வதி பரமேசுவரர்கள் மாதிரி பாவிக்கப் படுகிருர்களென்று கேள்விப்பட்டு சந்தோஷப்படுகிறோம்.

சுபம்.

# சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

## ஸ்ரீ பலராமாவதாரம்

## SRI BALARAMA AVATHARAM

**வி**ஷ்ணுவானவர் இடைச்சேரியில் ஸ்ரீகிருஷ்ணனுய் அவதரித்த காலத்தில், அவரை விட்டுப் பிரியாத ஆதிசேஷனும், பலராமனுக * அவதரித்தார் இவர் தேவகியின் கர்ப்பத்தில் ஏழாவது குழந்தையாக உண்டானுர். பகவானது ஆக்ஞைப்படி யோக மாயையானவள் இக்குழந்தையை அங்கிருந்து எடுத்துப்போய், வஸுதேவரின் மற்றொரு பத்தினியாகிய ரோகிணியின் கர்ப்பத்தில் வைத்து விட்டாள். இதனுல், இவருக்கு ஸங்கர்ஷணன் என்னும் பிரசித்த பெயர் உண்டாயிற்று. இவரது பலத்தாலும் அழகாலும், பலராமன் என்றும், இவரது முக்கிய ஆயுதம் கலப்பையானதால், ஹலாயுதன் என்னும் நாமதேயங்களும் இவருக்கு ஏற்பட்டன. நந்தகோகுலத்தில் கார்வண்ணன் வளர்ந்து வந்த காலத்தில், இவரும் அவருடன் கூடவே நந்தகோபர், யசோதை முதலியவர்களால் வளர்க்கப்பட்டு வந்தார். இவரது பாலியத்திலும், பின்னரும், ஆதிசேஷனது தேஜஸுக்குரிய வீரியச் செய்கைகளை இவர் செய்து காட்டியுள்ளார் எனினும், கார்வண்ணன்போல், அதிமானுஷ கிருத்தியங்களும், மாயா சேஷ்டிதங்களும் இவரிடம் காணப்படா. இவர் பெருந்தன்மையும், ருஜுவான ஸ்வபாவமும் பொருந்தியவர். பகவானிடம் அந்தரங்க சகோதர பாவம் பாராட்டி, அவர் தம்பியாயிருந்தபோதிலும், அவரிடம் கௌரவம் பாராட்டி வந்தார். கார்வண்ணனும் இவர் ஜ்யேஷ்டர் என்னும் முறையை அனுசரித்து, இவரிடம் வணக்கத்துடனும் விசுவாசத்துடனும் நடந்து வந்தார்.

இவர் மண்ணுலகில் பிறந்தது முதல் விண்ணுலகம் ஏகிய வரையில், கார்வண்ணனுடன் கூடவே இருந்துவந்தமையால், அவரது சரித்திரங்களில் இவரும் சம்பந்தப்பட்டவரே. இவற்றை ஸ்ரீ கிருஷ்ணுவதாரச் சரித்திரத்தில் விவரமாய்க் காணலாம். இவர் நேரில் சம்பந்தப்பட்ட சில விஷயங்களை அடியிற் குறிப்பிடுவோம்:

*"சென்றுர் குடையாம் இருந்தாற் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள் கடலுள்-என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற் கரவு."

(1) கோகுலத்தோர் பிருந்தாவனத்தில் குடியேறி வசித்துவந்த காலத்தில், இடைச்சிறுவர்கள் ராமகிருஷ்ணர்களுடன் சமீபத்திலுள்ள ஒரு பனங்காட்டில் நுழைந்து, அங்குள்ள இனிய கனிகளைப் புஜிக்கக் கருதினர். பலராமர் அந்தப் பனைவிருக்ஷங்களைத் தமது வலிவுள்ள புஜங்களால் குலுக்கி, கனிகள் பல, பல என்று உதிரும்படி செய்தார். இவ்விவரமறிந்த அச்சோலைக் கதிபதியான தேனுகாஸுரன் என்பவன் ஒரு பெரிய கழுதை உருக்கொண்டு, வெகுவேகமாய் ஓடிவந்து, அவர் மார்புமீது தன் கால்களால் உதைத்துக் கொல்ல வந்தான். அச்சமயம் அவர் அவன் கால்களைச் சேர்த்துப்பிடித்து, அவனைச் சக்கராகாரமாகச் சுழற்றி, ஒரு மரத்தின்மீது வீசியெறிந்தார். அவன் அந்த வேகந்தாளாது, உயிர்துறந்து, மரத்தின்மீது விழவே, அது முறிந்து விழுந்து இன்னும் பல விருக்ஷங்களை வீழ்த்தியது. இவனது மரணசப்தம் கேட்டு ஓடிவந்த அநேக துஷ்ட அஸுரர்களை ராமகிருஷ்ணர் இருவரும் கொன்று சாய்த்தனர்.

(2) கம்ஸன் நாரதரால் இராமகிருஷ்ணர்களின் அவதார ரகஸ்யமறிந்து, அக்ரூரைக் கொண்டு அவர்களை மதுராபுரிக்கு வரவழைத்து, தன் சபையிலுள்ள பிரசித்த மல்லர்களுடன் போராடும்படி அவர்களை ஏவினன். அப்போது, பலராமர் முஷ்டிகன் என்னும் பலிஷ்டனை மல்லனுடன் மல்லயுத்தம் செய்து, அவனைச் சங்கரித்தார். அவனுக்குத் துணையாக வந்த கூடன் என்பவனையும் தமது இடது கையால் ஒரே குத்துக் குத்திக்கொன்றார். பின்னர், ஸ்ரீகிருஷ்ணன் கம்ஸன் மீது பாய்ந்து அவனை வதித்தபோது, சினங்கொண்டு போராடவந்த அவனது துஷ்ட சகோதரர்களை எட்டுப் பேர்களையும் ஸங்கர்ஷணன் மாய்த்தருளினர்.

(3) ஜராஸந்தன் மதுரையை முற்றுகை போட்டுத் தகைந்த காலங்களில் ஒரு சமயம் பலராமர் அவனைப் பிடித்துக் கொல்ல யத்தனித்தார். பகவானது விருப்பத்தை யனுசரித்து, அவனை அச்சமயம் கொல்லாது விடுத்தனுப்பினர்.

(4) பிறகு, இவர் கௌமாரப் பர்வமடைந்து, ரைவதன் என்னும் வேந்தனுடைய புதல்வியான ரேவதியை மணந்து, சுகமாய்க் காலங்கழித்து வந்தார்.

(5) ஸ்ரீகிருஷ்ணன் ருக்மிணியின் விவாக காலத்தில் அவளை அபகரித்துச் சென்றபோது, அவரை எதிர்க்க வந்த சிசுபாலாதிகளைப் பலராமர் துரத்தியடித்தார். பின்னர் நடந்த கிருஷ்ண ருக்மிணி விவாகத்தில், ருக்மியானவன் பலபத்திரருடன் சொக்கட்டானுடித் தோற்றான். எனினும், தான் ஜயித்துவிட்டதாக அவன் பெருமை பாராட்ட, அவர் தம் கலப்பையால் அவனை வெட்டிக்கொன்றார்.

(6) ஒரு சமயம் கண்ணபிரான் இவரைப் பிருந்தாவனத்திற்கனுப்பி, கோபிகைகளுடன் யமுனு நதியை அங்கு வரவழைக்கும்படி வேண்ட, அது அவ்வாறு வராததால், பலராமர் தமது கலப்பையால் அதை இழுத்து அங்கு வரச் செய்தார்.

(7) இல்வலன் என்னும் அரக்கனை வென்று, விதன் என்ற வானர வீரனையும் இவர் ஸம்ஹரித்தருளினர்.

(8) பாண்டவ கௌரவர்களுக்குப் பாரதயுத்தம் நேர்ந்தபோது, இவர் ஒரு கக்ஷியிலும் சேர மனம் வராமல், தீர்த்த யாத்திரைக்குப் போய்விட்டார். பாரதப் போர் கடைசி நாளில், பீமனுக்கும் துரியோதனனுக்கும் கதாயுத்தம், நடந்தக்கால் இவர் அங்கு வர, கதாயுத்த ப்ரவீணரான இவரை மத்தியஸ்தராக இருக்குமாறு யுதிஷ்டராதிகள் வேண்டினர். பீமன் துரியோதனனுடன் வெகு நேரம் போராடி, இறுதியில் சமயம் பார்த்து, அவனை இடுப்பின்கீழ் துடையில் அடித்துக் கொன்றபோது, இவர் சினங்கொண்டு, கதா யுத்த ஒழுங்குக்கு விரோதமாய்ப் பீமன் துரியோதனனை அடித்தது அதர்மம் என்று கூறிப் பழித்தார், பின்பு பகவான் தக்கக் காரணங்களால் சாந்தப்படுத்த, இவரும் ஒருவாறு சமாதானமடைந்தார்.

(9) பலராமர் பெரியோர்களிடம் வணக்கமும் பிரீதியும் பொருந்தியவர். இவருக்குச் சன்னியாசிகளிடமுள்ள பக்தியின் ரகசியமறிந்த பகவான், அர்ஜுனனுக்குத் தன்சகோதரியான சுபத்திரையை மணம்புரிவிக்கக் கருதியபோது, பார்த்தனைச் சன்னியாசிவேடந் தரிக்கச் செய்தார்; பலராமர் இவரைக் கண்டு வணங்கி, சுபத்திரையை இவருக்குச் சிசுருஷை செய்யும்படி நியமித்தார். இதன் மூலமாய் அர்ஜுனன் ஸுபத்திரை இவர்களுக்குப் பழக்கம் ஏற்பட்டு, அவன் அவளை அபகரித்துச் சென்றான். அப்போது பலராமர் சினங்கொண்டு அவனைக் கொல்லக் கருதினர்; பிறகு கண்ணனால் சமாதானம் செய்யப்பட்டு மனமுவந்து ஸுபத்ரையை பார்த்தனுக்கு மணம் புரிவித்தார்.

(10) பாண்டவாதிகள் வறுமையால் வருந்திய போதும், அவர்கள் வனவாஸஞ் செய்த காலத்திலும், பலராமருக்கு அவர்களிடம் கௌரவம் ஏற்படாமல், உன்னத பதவியிலிருந்துவந்த துரியோதனாதிகளிடமே இவர் கண்ணியம் பாராட்டலுற்றார். பாண்டவர் ஐசுவரியத்திலிருக்குங்கால், இவர் தமது அருமைப் புதல்வியான சசிரேகை என்பவளைத் தமது மருமகனான அபிமன்யுவுக்கு மணம்புரிவிப்பதாய் வாக்களித்திருந்தார். பின்னர், அவர்கள் வனவாஸம்போக நேரிட்டக்கால், அவ்வாறு செய்ய இவருக்கு மனம் வராது, துரியோதன புத்திரனான லக்ஷ்மணனுக்கு அவளைக் கொடுக்க ஏற்பாடு செய்தார். இவ்விவரமறிந்த அபிமன்யு, பீமபுத்திரனான கடோத்கசனது ஸகாயத்தாலும், ஸ்ரீ கிருஷ்ணனது கிருபையாலும் சசிரேகையை எடுத்துவரச் செய்து, அவளை மணந்துகொண்டான்; மாயாவியான கடோத்கசன் தத்காலம்சசிரேகைவேஷம்பூண்டு, கல்யாணத்திற்காக வந்துள்ள துரியோதனாதிகளை ஏமாற்றி, பிறகு நிஜரூபமெடுத்து, அவர்களை அவமதித்துத் துரத்தியடித்தான். இதனால் பலராமர் வெகுவாறு சினமடைந்தார். பின்னர், ஸ்ரீ கண்ணனது ஸகாயத்தால் நடந்தேறிய சசிரேகை அபிமன்யு இவர்களின் விவாக ரகசியமறிந்து, களிப்படைந்தார்.

கடைசியில், யாதவர்கள் ஒரு முனிவர் சாபத்தால், ஒருவரை யொருவர் அடித்துமாண்டனர். அப்போது பலராமர் சமுத்திர ஸ்நானத்திற்குச் சென்றிருந்தார். யாதவர் அழிந்த விவரமறிந்து அவர் கானகஞ் சென்று, ஒரு மரத்தடியில் தனிமையாய்த் தியானஞ் செய்துகொண் டிருந்தார். அப்போது கண்ணன் அவரைத் தேடிக்கொண்டு அங்கு வருவதைக் கண்டு, அவர் தமது ஆதிசேஷ வுருக்கொண்டு சமுத்திரத்தை யடைந்தார். உடன் பின்னரே விண்ணுலகம் எழுந்தருளப் போகிற பரந்தாமனுக்கு ஸர்வவித தாஸனாகப் பணி செய்யும் பொருட்டு, அவர் முன்னரே வைகுந்தம் சென்று சித்தமாயிருந்தார் என்பது கருத்து. பகவானது இணைபிரியாத தாஸனான இவரது அவதாரமும் மிகப் புண்ணியமான தென்றும், இதைக் கேட்பவரும் சொல்பவரும் ஐஹிக சுகங்களை யதேச்சமாய் அனுபவித்து, நித்தியானந்த பதவியை அடைவார்கள் என்றும் கூறி, ஸூத புராணிகர் நைமிசாரண்யத்தில் கூடியுள்ள ரிஷிகளுக்கு இவ்வதார மகிமையைச் சொன்னார்.

# கல்கி அவதாரம்

## KALKI AVATHARAM

கம்ஸாதி துஷ்டர்களை நிக்ரகித்து, பூபாரத்தை நிவர்த்தி செய்வதற்காகத்திருமால் கோகுலத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாய் அவதரித்து, ஸாது ஸம்ரக்ஷணஞ் செய்து விண்ணுலகம் எழுந்தருளிய புண்ணிய கதையை ஸ்ரீசுகர் சொல்லக் கேட்டு ஆனந்தஸாகரத்தில் மூழ்கிக் களித்த பரீக்ஷித் மகாராஜன், அதன் பிறகு மண்ணுலகில் உண்டாகப்போகிற அரசர்களின் விருத்தாந்தங்களையும், கலிகாலத்தில் நடக்கக்கூடிய ஸம்பவங்களையும் எடுத்துக் கூறம்படி பிரார்த்தித்தான். அவ் வேண்டுகோளுக் கிணங்கி, ஸ்ரீசுகரும் கலிகாலத்தில் ஏற்படக்கூடிய தர்மக்குறைவையும், பகவான் கற்கி அவதாரம் எடுத்து, பூபாரம் போன்ற துஷ்டர்களைச் சங்கரித்து, மீண்டும் பூமியில் தர்மஸம்ஸ்தாபனம் செய்யப்போகிற விருத்தாந்தத்தையும் விவரிக்கலானார்:—

பகவான் பரஞ்சோதிக்கு எழுந்தருளுவதற்கு முந்தியே த்வாபரயுகம் முடிந்து, கலியுகம் ஆரம்பித்து விட்டது என்றாலும், அதுவரையில் கார்வண்ணனது தேஜோ மகிமையால், கலியின் பிரபாவம் மிக்க ஓங்காம லிருந்துவந்தது. ஆகையால் பகவான் விண்ணுலகம் சென்ற தினம் முதல் கலிகால ஆரம்பம் ஏற்பட்டதெனச் சொல்வது வழக்கம். அச்சமயம், சந்திரகுலத்தவர்களுள், மகததேசத்தி லாண்டுவந்த ப்ருகத்ரத் வம்சத்தினர் பிரபலர்களாயிருந்தனர், பரீக்ஷித் காலத்தில், அந்த வம்சத்திலுண்டாகிய மார்ஜாரி என்பவன் பிரசித்தனாய் விளங்கிவந்தான். பிறகு ரிபுஞ்ஜயன் என்பவனோடு அந்தக் குலம் முடிவடைந்து, ப்ரத்யோத வம்சம் ஏற்பட்டது. பின்னர் சிசுநாக வம்சமும்,அதன்பின் நந்தவம்சமும் உண்டாயின. நந்த வம்சத் தலைவனான மகாபத்மன் என்னும் நந்தன், சூத்திர ஸ்திரீக்குப் பிறந்தவன். இவன் உத்தம க்ஷத்திரியர்களைக் கருவறுத்து, அநேக தேசங்களை ஜயித்து, ஏக சக்ராதிபதியாய் ஆண்டு வருவான். இவனுக்குப் பலிஷ்டர்களான எட்டுப் புத்திரர்களுண்டாவர். மகாபத்மனும் அவனது குமாரர்களும் நவநந்தர்கள் எனப் பிரசித்த பெயருடன், பூமியில் கொடுங்கோற் செலுத்தி வருவார்கள். இவர்களும், இவர்களுக்குப் பின்னுண்டாகும் வம்சத்தினர்களும், தர்ம

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென் பண்பியார்க் குரைக்கோ பிற.

முறை துறந்தவர்களாய், துராசாரங்களைக் கைக்கொண்டு நடப்பார்கள்.

இவர்களைச் சாணக்யன் என்னும் அந்தணன் அழித்து, சந்திரகுப்தனை அரசனாக ஏற்படுத்தி, மௌர்யவம்சத்தை ஸ்தாபிப்பான். இதன்பின், சுங்க, கண்வ வம்சங்கள் ஏற்படும். கண்வ குலத்துக் கடைசி அரசனான ஸுசர்மா என்பவனை, ஆந்த்ர ஜாதியில் பிறந்த பலீ என்னும் அவனது தாஸன் கொன்று, தானே அரசனாகி, பூமியை ஆண்டுவருவான். இவன் மிக்க அதர்மிஷ்டன். இந்த வம்சத்தில் பதின்மூன்று அரசர்கள் உண்டாவார்கள். பின்னர், ஆபீரர் ஆவபிருத்யர், கங்கர், யவனர், துருஷ்கர், கருடர், மௌனர், பாஹ்லிகர் முதலான குலத்தோர் உதிப்பார்கள். அப்பால், பாஹ்லிக வம்சத்தினர் ஆந்த்ரம், கோஸலம், விதூரம், நிஷதம் முதலிய தேசங்களில் ஏககாலத்தில் ஆண்டுவருவார்கள். இதன் பிறகு மகத தேசத்தில், விச்வஸ்பூர்ஜிஸ் என்பவன், புரஞ்சயன் என்னும் பெயருடன் பிரசித்தனாய் விளங்குவான். இவன், அந்தணர் முதலான ஜாதியாரின் தர்மங்களைக் குலைத்து, புளிந்த, யது, முத்ரக என்ற பெயர்கொண்ட மிலேச்சர் போன்ற ஜாதியர்களை ஏற்படுத்துவான். இவனது ஆள்கையில் ஜனங்கள், தத்தம் வர்ணாசிரமங்களுக்குரிய ஆசாராதி முறைகளைக் கடந்து நடப்பார்கள். இவன் நற்குலத்திலுதித்த க்ஷத்திரியர்களை அழித்து, கங்கையின் உற்பத்தி ஸ்தானம் முதல் பிரயாகை வரையிலுமுள்ள பிரதேசங்களுக்கு மன்னனாய், பத்மவதீ என்னும் ராஜதானியில் கொடுங்கோற் செலுத்திவருவான். ஸௌராஷ்டரம், அவந்தி, ஆபீரம், சூரம், மாலவம் முதலிய தேசங்களிலுள்ள த்விஜர்கள் உபநயனம் முதலிய ஸம்ஸ்கார மற்றவர்களாய் அதர்ம வழியில் நடப்பார்கள். அங்குள்ள அரசர்களும் தத்தம் ஆசாரங்களிழந்து, பணத்தாசையில் ஆழ்ந்து, யதேச்சமாய் ஆண்டுவருவார்கள். ஸிந்து நதிக்கரை, சந்திரபாகம், காச்மீரமண்டலம் முதலிய தேசங்களில் வ்ராத்யர் முதலான துருஷ்கர்கள் அரசர்களாகி, இஷ்டம்போல் அனுபவித்து வருவார்கள். அந்தச் சமயம் இப்பரத நாட்டிலுள்ள பல தேச வேந்தர்களும் அதர்மம், பொய் முதலியவற்றைக் கைப்பற்றி, கொடுங்கோபமுள்ளவர்களாயும், கிருபணர்களாயுமிருப்பார்கள். பரஸ்திரீ, பிறர் செல்வம் இவற்றில் மிகுந்த பற்றுள்ளவர்களாய், பசு, த்விஜர், ஸ்திரீகள், பாலர்கள் இவர்களை இம்சித்து வருவார்கள். இவர்களது செல்வமும், ஆள்கையும் நீடித்து நிற்காமல், அடிக்கடி கலகமும் நாசமும் ஏற்படும். இங்குள்ள ஜனங்களும், 'யதா ராஜா, ததா ப்ரஜா:' என்கிற நியாயப்படி, அரசனது துராசாரங்களைத் தாமும் கைப்பற்றி, துன்மார்க்கங்களில் நடந்து வருவார்கள். வேந்தர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டு, நாசமடைவார்கள்.

இந்நிலைமையில் கலியின் பிரபாவம் மேலிட்டு, நாளுக்கு நாள் அதர்மம் விருத்தியடையும். ஸத்யம், சௌசம், தயை, பொறுமை முதலிய நற்குணங்கள் மலினமாகும்; ஆயுள், பலம், ஞாபக சக்தி முதலியன குன்றும்; பணமே பிரதானமாகும்; தனத்தையே நற்குலம், சீலம், குணம் இவற்றிற்கு முக்கிய காரணமாக நினைப்பார்கள். தேகவலிவைக் கொண்டே, அதர்மம், நியாயம் இவற்றைத் தீர்மானிப்பார்கள்; விவாகஞ் செய்து கொள்வதில், மன இஷ்டத்தையே கவனிப்பார்கள்; குலம், கோத்திரம் முதலியன கவனிக்கப்படா. கிரயம், விக்கிரயம் முதலிய விவகாரங்களில் கபடமே மிகுந்திருக்கும்; பூணூல் மாத்திரம் விப்பிரனுக்கு அடையாளமாகும். அந்தந்தவருணாசிரமங்களுக்குரிய வெளிப்படையான சின்னங்கள் மாத்திரம் இருக்குமேயன்றி, அவற்றிற்கேற்ற ஒழுங்குகளும், நியமங்களும் அனுஷ்டிக்கப்படா. வாயாடியாயிருப்பதே பாண்டித்தியத்திற்கறிகுறியாகும். பெரியோரின் ஸ்தானங்கள், தேவாலயங்கள் முதலியவற்றைக் கவனியாது, பெரிய ஏரி குளங்களையே புண்ணிய தீர்த்தம் எனக் கொண்டாடுவார்கள். எவ்விதமாயாவது திரவியம் சம்பாதித்து, வயிற்றை நிரப்புவதே பரம புருஷார்த்தமாகவும், குடும்ப பரணம் செய்வதே உத்தமக் கிரியையாகவும் கருதப்படும். அரசனது ஆதரவின்மையால், விப்பிரர்கள் அக்கினி ஹோத்ரம், வேதாத்யயனம், அத்யாபனம் முதலிய கிரியைகளை விட்டொழித்தவர்களாய், பால், நெய், உப்பு முதலிய திரவியங்கள் விற்றும், பலவித இழிவான ஸேவக விருத்திகள் செய்தும் பிழைக்க நேரிடும். தங்களுக்குரிய தர்மங்களை அனுஷ்டியாது விடுத்து, பாஷண்டிகளுக்குச் சிஷ்யர்களாகி, சுலபமாய் மோக்ஷம்பெறக் கருதுவார்கள். மற்றைய வர்ணத்தார்களும் தங்களுக்குரிய குலாசாரங்களைக் கைநழுவவிட்டு, க்ரோதம்,

ாபம், மதம் முதலிய இழிகுணங்களி லாழ்ந்தவர்களாய், மனம் போனபடி அதர்மத்தில் ஒழுகுவார்கள். இவ்வித நிலைமையில், நான்கு வர்ணத்தாருள் எவன் பலிஷ்டனோ, அவனே அரசனாகி, சோரர்களின் விருத்தியை அனுஸரித்து நடந்து, ஜனங்களின் மனைவி, தனம், முதலானவற்றைக் கைப்பற்றிக் கொடுங்கோல் செலுத்துவான்.

இவர்களது கொடுமை பொறுக்காது, பிரஜைகள் ஆங்காங்குள்ள மலை, வனங்களில் சென்று, காய் கனி கிழங்குகளைத் தின்று வருந்துவார்கள். காலத்தில் மழை பெய்யாது, எங்கும் க்ஷாமம் ஏற்படும். அதிகப் பனி, பெருங்காற்று முதலியவற்றாலும், பசி, தாகம் கொடிய நோய் முதலிய கஷ்டங்களாலும் ஜனங்கள் பலவாறு வருந்தித் தவிப்பார்கள். இவர்களின் பலமும், வயதும் குன்றும்; 20, 30 வயதே பூர்ண வயதாகும்! 10 வயது பையனுக்கு ஏழு வயது பெண்ணிடத்தில் குழந்தை பிறக்கும்! எங்கும் திருட்டுத்தனம், பொய்மை, வீண் இம்சை முதலியன நிறைந்திருக்கும். எவ்வர்ணத்தாரும் சீலமற்றவராவர்; பசுக்கள் ஆடுகள் போலாகும். ஸன்னியாஸிகளின் ஆசிரமங்கள் கிருகஸ்தர் வீடுகள் போல், இழிவான காரியங்கள் நிரம்பியிருக்கும். விவாக முறைகள் கெட்டு, நெருங்கிய பந்துக்களுக்குள் அதர்ம விவாகங்கள் நடைபெறும்.

இவ்வாறு பூமியில் சகிக்க முடியாவண்ணம் அதர்ம மேலிட்டு, தர்மம் குன்றிப் போகுங்கால், சராசரப் பிரபஞ்சத்துக்கும் ஈசனான திருமால் கல்கி ரூபமாய் அவதரித்து, தர்மத்தை நிலைநிறுத்தி, ஸாது ஸம்ரக்ஷணம் செய்வார். சம்பளம் என்னும் கிராமத்தில், விஷ்ணுயசஸ் என்னும் விப்பரோத்தமனது கிருகத்தில் பகவான் அவதரிப்பார்; அணிமாதி அஷ்ட ஐசுவரியங்களுடனும், ஸத்யஸங்கற்பம் முதலிய உத்தம குணங்களுடனும் விளங்குவார். அவர் தேவதைகளால் அளிக்கப்பட்டதும், வெகு விரைவாய்ச் செல்லக்கூடியதுமான ஒரு ஜாத்யசுவத்தின்மீது ஏறி, ஒரு கூரான வாளைக் கையிலேந்தி, பலப் பிரதேசங்களில் ஸஞ்சரித்து, ஆங்காங்குள்ள கொடுங்கோன் மன்னர்களையும், மற்றைய துஷ்டர்களையும் ஆயிரக் கணக்காய் ஸம்ஹரித்து, ஜனங்களுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுவார். பகவானுடைய அங்கராகாதி சம்பந்தம் பெற்ற புண்ணியக்காற்று வாடை பட்டவுடனே, பட்டணங்கள், கிராமங்களிலுள்ள ஜனங்களின் மனம் தெளிவடைந்து,

அவர்கள் பகவானைப் புகழ்ந்து
கள். கலியுகத்தில் தேவவருஷங்க
கடந்ததும், வாஸுதேவன் க
செய்து, அதர்மத்தை யொழிப்பார்
மீண்டும் கிருதயுகம் ஏற்படும். ஸாத்
தானமான உலக ஸ்ருஷ்டி உண்டாகும்.
யம் சூரியன், சந்திரன், புஷ்ய நக்ஷத்திரத்தி
வியாழன் இம் மூவரும் ஒரே ராசியில் பி
சிப்பார்கள். சந்திர வம்சத்திலுதித்த சந்தனுவின
சகோதரனான தேவாபியும், சூரிய குலத்தவனான மருவும், கலாபக் கிராமத்தில் யோகப்பியாஸம் செய்துகொண் டிருப்பார்கள். கலிகால முடிவில் அவர்கள் இங்கு வந்து, வாஸுதேவனுடைய அனுக்கிரகமும், உபதேசமும் பெற்று வருணாசிரமாதி தர்மாதிகளை முன்போல் ஸ்தாபித்து ஓங்கச் செய்வார்கள் க்ருதம், தேரேதா, த்வாபரம், கலி என்று விவகரிக்கப்பட்ட இந் நான்கு யுகங்களும் இவ்வுலகில் கிரமேண மாறி மாறி வந்துகொண்டிருக்கும்.

சுகப் பிரம்மரிஷி இவ்வாறு கல்கியவதார வரலாற்றைக் கூறி, 'பரீக்ஷித் ராஜனே, இதற்கு முன்னிருந்துள்ள மனுவம்ச மன்னர்கள், இப்போதிருப்பவர்கள், இனி வரப்போகிறவர்கள் இவர்களின் விருத்தந்தாம் கூறியுள்ளேன், இவ்வேந்தர்களும், மற்றைய பிரசித்த புருஷர்களும், 'நான்' 'எனது' என்ற எண்ணத்துடன் பூமியை அனுபவித்து, கடைசியில் யமனுக் கிரையாகினர். அவரது சரீரங்களும் கிருமி, சாம்பல் முதலியவைகளாக மாறி, அவர்களிருந்த இடம் தெரியாமற் போயிற்று. அவர்களைப் பற்றிய கதைதான் மீதியிருக்கிறது. மேன்மேலும் பூமி ஸம்பாதித்து, சக்கரவர்த்தியாகி, நச்வரமான உலக சுகங்களைப் பெற விரும்பிய மன்னர்கள், மேல்வரப்போகிற காலகதியை அறியாமல், ஒருவரோடொருவர் போராடி, பல அனர்த்தங்களை விளைவிக்கின்றனர். யுத்த சாமர்த்தியம் தேகபலம், செல்வம் இவை நீடித்து நிற்கா. ஞானம், வைராக்கியம், பகவத்பக்தி, ஸநாதனதர்மாசரணம் இவைதான் இம்மையிலும் மறுமையிலும் சுகமும் ஆனந்தமும் அளிக்கவல்லவை. 'ஸ்ரீ கிருஷ்ணனிடம் பக்தி பண்ணுபவன் கைவிடப்படான்' என்று கூறி, மேற்கூறிய நான்கு யுகங்களின் லக்ஷணங்களையும், தர்மானுஷ்டானங்களையும் விஸ்தாரமாய் எடுத்துரைத்தார்.

(இதன் தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு நோயும் பசலையுந் தந்து.

## மானக் குறிப்புகள்
## NEWS AND NOTES

சிரத்தானந்தரின் மரணம் :— இம் ...ந் தேதி யன்று மாலை $3\frac{3}{4}$-மணிக்கு சிரத்தானந்தர், இத்தனை நாள் நோய் ...பட்டு தப்பித்து குணப்பட்டு வருகையில், ...துல் ரஷீத் எனும் மஹம்மதியினல் சுட்டுக் கொல்லப்பட்டார், என்பதறிய மிகவும் வருந்துகிறோம். இச் சம்பவத்தினல் வட இந்தியாவில் ஹிந்து சமூகத்திற்கே ஒரு இடி விழுந்தது போலாகும். ஆனல் இதுவரை டில்லியில் ஹிந்துக்களும் மஹம்மதியரும் அமைதியாயிருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. காலஞ்சென்ற பெரியாரின் குடும்பத்தினருக்கு எமது மனமார்ந்த அநுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

* * *

ஒரு இயற்கை அற்புதம் :— ஹைதராபாத்தி லுள்ள ஊஸ்மேனியா ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு 13-வயதுடைய சின்னய்யா வெனும் வண்ணன் ஒருவன், காலில் ஒரு அடியின் நிமித்தம் சிகித்ஸைக்கு வந்தானும். அவனை வழக்கப்படி பரீக்ஷை செய்து பார்த்ததில், இருதயம் இருக்க வேண்டிய விடத்தில் ஒன்றுமே காணப்படவில்லையாம். பின்னர் எக்ஸ்-ரே (X. ray) வழியாய்ப் பரீக்ஷித்ததில் வலதுபுற அவையவங்கள் எல்லாம் இடபக்கத்திலும், இடதுபக்க அவையவங்களெல்லாம் வலதுபுறமும் காணப்பட்டனவாம். பையன் திடகாத்திரனுப் இருக்கிறானும்.

* * *

பணம் பெருத்தோர்:— அமெரிக்காவில் தற்போது 74-பேர் வருஷத்தில் பத்துலக்ஷம் டாலருக்கு மேல் வருமான முடையவர்களென்று தெரியவந்திருக்கிறது. தலைக்கு பத்து லக்ஷம் டாலருக்குமேல் பொறுமான சொத்து உடையவர்கள் 11,000 பேராம். இவர்களில் ஒவ்வொருவருக்கும் குறைந்தது வருஷத்தில் 50,000 டாலர் வருமானம் வருகிறதாம்.

இப்பொழுதுள்ள தேசங்களுள் அமெரிக்காவே பணம் பெறுக்குள்ளதென்பதும் உலகில் முதல் இரண்டு பணக்காரார்களும் அங்கிருக்கிறார்களென்பதும் குறிக்கத்தக்கது.

* * *

நோபெல் வெகுமதி :— இந்த வருஷத்து நோபெல் வெகுமதி இங்கிலாந்திலுள்ள பிரபல ஆசிரியரான மிஸ்டர். பெர்னர்ட் ஷா என்பவ...க்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதே வெகுமதி சில வருஷங்களுக்கு முன்னர் நமது கவிச் சக்கரவர்த்தியான ரவீந்த்ரநாத டகூருக்கு அளிக்கப்பட்டது நம்நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

* * *

அமெரிக்காவில் கொலைகள்:—வருஷத்திற்கு 10,000 கொலைகளுக்கு மேல் அமெரிக்காவில் நடக்கின்றனவாம். கொலை செய்ததாக ருஜுவான 19,777-கேஸ்களில் 349 பேரே மரணதண்டனை செய்யப்பட்டார்கள். இது விஷயத்தில் அமெரிக்க சட்டம் மிக தயாளமாயிருக்கிற தென்றும் அதுவே கொலை செய்வோருக்கு மிகவும் ஸாதகமாயிருக்கிறதென்றும், ஆதலால் இனி நியாயாதிபதிகள் கண்டிப்பாயிருக்க வேண்டுமென்றும் ஜனங்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

* * *

பிரேதங்களை தகனஞ் செய்வதும், புதைப்பதும் :—ஜப்பான் தேசத்தில் நகர்ப்புறங்களில் பிரேதங்களைப் புதைக்கக் கூடாதென்று கவர்ன்மெண்டார் சட்டமியற்றி யிருக்கின்றனர். அங்குத் தகனம் செய்வதினல் ஏற்படும் சுத்தமும் ஸௌகரியமும் இப்பொழுது தான் கொஞ்சம் கொஞ்சமாய் அறியப்படுகின்றதாம். வரவர தகனம் செய்வதையே ஆதரிக்க ஆரம்பித்துவிட்டார்களாம். 1924-ஞ்த்தில் 94 பிணங்கள் தகனஞ் செய்யப்பட்டனவாம். தகனத்திற்கு முதலில் விறகும், பிறகு நிலக்கரியையும் இப்பொழுது பக்குவம் செய்யப்படாத பெட்ரோலியத்தையும் உபயோகிக்கிறார்களாம்

* * *

77,000 பவுன் விலையுள்ள படம்:—ஸர் தாமஸ் லாரென்ஸால் எழுதப்பட்ட 'பிங்கி' என்று அறியப்படும் 'மிஸ் பாரெட்' என்பவளின் படமானது, டுவின் கம்பெனியாரால் 77,000 பவுனுக்கு வாங்கப்பட்டதாம்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

இதுகேட்ட பரீக்ஷித்மகாராஜன் மனந்தெளிந்து, பகவானது பாதார விந்தங்களில் மனதைச் செலுத்தி யோகத்திலாழ்ந்து, பிராணபரித்தியாகம் செய்யத் தயாரானன். ஸ்ரீசுகரும் அவனது பரம பக்தியைப் புகழ்ந்து, அவனுக்கு நற்கதி யுண்டாகுமென்று வாழ்த்தி, அவனிடம் விடைபெற்றுச் சென்றார்.

சுபமஸ்து.

## 1927 அமிருதாஞ்சனம் காலண்டர்கள் 1

பிரபல சித்திர வேலைக்காரரால் மூன்று வர்ணங்களில் மோஹினி
வரைந்துள்ளது.

படம் ஒன்று ரூ *0—2—0* ; டஜன் ரூ. *1—4—0* ; *100* ரூ. *9-12-*
சிறிய அளவு லக்ஷ்மி காலண்டர் டஜன் ரூ. *0—8—0* ; *100* ரூ. *9—8—*
(தபால் பாக்கிங் வேறு.)

# அமிருதாஞ்சனம்

ஸர்வ நோய்களுக்கும் ஸித்த ஔஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இறுமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து (விலை அணா பத்து). அமிருதாஞ்சனம் எல்லாவிடத்திலும் கிடைக்கும்.

## இதர அமிருதாஞ்சனம் ஔஷதங்கள்

படைத்தைலம். — இது எல்லா விதமான படைகளையும் போக்கும். இரண்டு தடவை உபயோகித்தவுடன், எவ்வித படையும் போய்விடும்.
விலை டப்பி ஒன்றுக்கு அணா ஆறு.

தந்தசூரணம்.—பல்துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறுவலி முதலியநோய்கள் நீங்கும். தினந்தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகி முகவசீகரமுண்டாகும். டப்பி ஒன்று அணா 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,
நெ. 7, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,
சென்னைப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

# KAMINIA OIL (Registered)

ந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

## காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை உயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டை குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும், மாணுக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்திசெய்து தலையின் அடிப்பாகத்தைச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, காமினியா ஆயில், அதிக வாசனையு முடையது.

### நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும் மிஸ்டர் பன்ஸோஸ் எழுதுகிறார் :—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை தூரத்துகின்ற நிபுண "டாக்டர்". தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

### ஒரு தரம் உபயோகிக்கவும்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒரு புட்டியின் விலை ரூ. | 1 | 0 | 0 | வி. பி. தபால் செலவு ரூ. | 0 | 6 | 0 | பிரத்தியேகம் |
| 3–புட்டிகள் ,, | 2 | 10 | 0 | ,, ,, ,, | 0 | 12 | 0 | ,, |

☞ எச்சரிக்கை:—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனால் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய்க் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினால், அவர்கள் முயற்சிக்கு ஏமாறாமல் எப்பொழுதும் இக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள் :— ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஸீத், பம்பாய்.



Printed at the B. N. Press & Published by The Alliance Company, "Shanmuga Vilas" Mylapore, Madras.